‘நெல்லைச் செய்தி’ வெளியீடு

# நாடகக் கதம்பம்

(ஒற்றையங்க நாடகங்கள்)

கோமதிஸ்வாமிநாதன்
பி. எக்ஸ். ரங்கசாமி

விஜ... ...ட்டு

'நெல்லைச் செய்தி' வெளியீடு 4.

# நாடகக் கதம்பம்

(ஒற்றையங்க நாடகங்கள்)

எழுதியவர்கள்:

**கோமதிஸ்வாமிநாதன்**

**பி. எக்ஸ். ரங்கசாமி**

அவ்வை தி.க. சண்முகம்
நூல் வரிசை எண்: 178
நன்கொடை எண்: 178

நெல்லைச் செய்தி பிரசுராலயம் லிமிட்டெட்
கீழ ரதவீதி, திருநெல்வேலி டவுண்.

சகலவிதமான முதல்தர ஷாப் சாமான்கள் சோப், சென்ட், ஹேர்ஆயில், பௌடர் வகைகள் பாட்டரி லைட், பெட்ரமாக்ஸ் லைட், ஹரிக்கன் லைட் ரகங்கள் பேடன்ட் மருந்துகள், பிஸ்கட் தினுசுகள் பௌண்டன் பேனாக்கள், பெப்பர்மிண்ட் வகை கள், கடிகாரங்கள், கண்ணாடிச் சாமான்கள், கலர் ரிப்பன்கள்,விதவிதமான விளையாட்டுச் சாமான்கள்

எல்லாம் எங்களிடம் கிடைக்கும்.

**எங்கள் கடைக்கு ஒரு தடவை**
**விஜயம் செய்து பாருங்கள்**

*பொதுஜன திருப்தியே எங்கள் லக்ஷியம்.*

# நடராஜ ஸ்டோர்ஸ்

**ரயில்வே ஸ்டேஷன் ரோடு,**

Corner Shop

*Tirunelveli Jn.*

"மனிதனின் அறிவுப் பாதையில் புஸ்தகங்கள் தான் சிறந்த வழி காட்டிகள்" என்று ஒரு அறிஞர் கூறுகிறார்.

வாழ்க்கையின் எல்லா துறைகளைப் பற்றியும் எடுத்துக்காட்ட எங்களிடம் ஏராளமான புஸ்தக ரகங்கள் இருக்கின்றன.

அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், இலக்கியம் பற்றி பல அறிஞர்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களும், கல்லூரி மாணவர்களுக்கான பாட புஸ்தகங்களும் மற்றும் அவ்வப்போது வெளியாகும் கண் கவரும் அமைப்புள்ள, தமிழ், ஆங்கிலம், ஹிந்தி புஸ்தகங்களும், நூல் நிலையங்களுக்குத் தேவையான சகல வித புஸ்தகங்களும் எப்போதும் கிடைக்கும்.

# C. ஜகன்னாதன் M. A.

பிரபல புஸ்தக விற்பனையாளர்,

எம்போரியம் காம்பௌண்டு

திருநெல்வேலி ஜங்ஷன்.

# ‘இம்பீரியல் போட்டோ ஸ்டுடியோ’

என்றதுமே உங்கள் நினைவில் அனுபவம், திறமை என்ற பதங்கள் நிச்சயமாகத் தோன்றுமென்று எங்களால் உறுதிகூற முடியும்.

ரம்மியமான புகைப் படங்கள் எடுத்துக்கொள்ள விரும்பினல் உடனே எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்.

உங்களுக்குத் தேவையான சகலவித போட்டோ சாதனங்களும் எங்களிடம் விற்பனைக்குக் கிடைக்கும்

எங்கள் வெற்றி உங்கள் திருப்தியில் தானிருக்கிறது.

**இம்பீரியல் போட்டோ ஸ்டுடியோ**
ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

---

கல்யாண காலங்களிலும் சாதாரண சமயங்களிலும்
தாங்கள் விரும்பும்

**கண் கவரும் ஜவுளி தினுசுகள் விதவிதமான ரகங்களில்
எங்களிடம் கிடைக்கும்.**

**எல்லாம் சாயத்திற்கு உத்திரவாதமான சரக்குகள்**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் தலைசிறந்த
எங்கள் வியாபார ஸ்தலத்திற்கு
விஜயம் செய்யுங்கள்.

# தங்க விலாஸ்

**மு. வன்னியப்ப பிள்ளை & சன்ஸ்**
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஜவாஹர் மாளிகை, திருநெல்வேலி ஜங்ஷன்.

# முகவுரை

ஸ்ரீ. பி. எக்ஸ். ரங்கசாமி என்னுடைய ஆப்த நண்பர். அத்தி பூத்தாற் போல் எழுதினாலும் அபூர்வ திறமையுடன் கதை, கட்டுரை, நாடகங்கள் எழுதும் இலக்கிய நண்பருங்கூட. இந்த புஸ்தகம் வெளியானதற்கு முக்யகாரணமே அவருடைய துன்ருத உற்சாகம் தான். என்னுடைய ஆர்வம் என்ற வைடனமைட்டிற்கு, அவர் அளித்த உற்சாகம் தான் தீப் பொறியாக விளங்கியது. அதன் விளைவாக வெடித்து மலர்ந்த '**நாட்கக் கதம்பம்**' இதோ உங்கள் கையில் மிளிர்கிறது.

நண்பர், ஸ்ரீ. ரங்கசாமி அவர்களின் கற்பனையிலுதித்து, திருச்சி ரேடியோ நிலயத்தின் மூலம் காற்றிலே மிதந்த மூன்று ரேடியோ நாடகங்களும், பல் வேறு பிரபல பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியான என்னுடைய ஒன்பது ஒற்றையங்க நாடகங்களும், கதம்ப மாலையாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த வெளியாகி யிருக்கும் என்னுடைய நாடகங்களை ஏற்கனவே பிரசுரித்து எனக்கு பெருமையளித்த 'கல்கி', சுதேசமித்திரன் 'ஞாயிறு மலர்', 'குமுதம்', 'ஹிந்துஸ்தான்', 'வசந்தம்' பத்திரிகை ஆசிரியர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதிரி மலர்களைக் கதம்பமாகக் கட்டி கண் கவரும் மாலையாக வெளியிடும் பொறுப்பை அன்புப் பிணைப்பால், அரை வினாடிகூட யோசியாமல் ஏற்றுக்கொண்ட '**நெல்லைச் செய்தி**' ஆசிரியர், ஸ்ரீ. சோமயாஜுலுவுக்கு, நானும் என் நண்பர், ஸ்ரீ. ரங்கசாமியும் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

வண்ணார்பேட்டை
9—11—50

**கோமதிஸ்வாமிநாதன்**

# பொருளடக்கம்


1. காற்ருேடு போயிற்று 3

2. மரணத்தின் முன் 11

3. போட்டி மாப்பிள்ளை 23

4. குளத்தங்கரை மோகினி 29

5. சோக நக்ஷத்திரம் 43

6. மன்னிப்பு 50

7. ஆசிரியர் அரங்கம் 66

8. அபூர்வ யோசனை! 74

9. நிஜ ஸ்டிரைக் 87

10. உலக இயல்பு 98

11. சௌமியனின் காதல் 108

12. பிரார்த்தனை 122

# 1. காற்றோடு போயிற்று

*கோமதிஸ்வாமிநாதன்*

## முதல் காட்சி

*காலேஜ் ஹாஸ்டலில் ஒரு அறை. ராமு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு வளையம் வளையமாகப் போகும் சிகரெட் புகையைப் பார்த்து ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கிறான். இந்த சமயத்தில் அவனுடைய நண்பனான வாசு வருகிறான்.*

ராமு : ஹல்லோ! இவ்வளவு நேரம் பொழுதே போகாமல் ஒண்டியாய்த் தவித்தேன். நல்லவேளை, நீயாவது வந்தாயே! எங்கே தொலைந்திருந்தாய், இவ்வளவு நேரம்?

வாசு : ஏன் பொழுது போகவில்லை? அடுத்த மாதம்தான் பரீட்சை வருகிறதே, சிறிது நேரமாவது புஸ்தகத்தைக் கட்டிக் கொண்டு அழுவது தானே?

ராமு : (நாடக பாணியில் நிமிர்ந்து உட்கார்ந்து): சிவசிவா! என்ன காரியம் செய்யச் சொன்னாய்? சத்துருவின் காலில் போய் விழுந்து சரணாகதி அடைவது என் போன்ற வீர இளைஞர்களுக்கு அடுக்குமா? அதைவிட அவமானம் வேறு என்ன இருக்கிறது? ஷேக்ஸ்பியர் எனக்குத் தாயாதி; கம்பனுடன் கிரிமினல் வழக்கு; மில்டனுடன் சிவில் சூட்! என் அறையில் அவர்கள் புஸ்தகங்கள் இருந்தால்கூட அவை இரவில் வந்து என்னைப் பயமுறுத்தும் என்று எண்ணிச் சிநேகிதர்களுக்குத் தானம் பண்ணிவிட்டேன்!

வாசு: சபாஷ்! உமது வீரத்தை யாம் மெச்சினோம்!

ராமு: அப்படிச் சொல்லுங்க பிரதர்! ஆண்டிக்கு எதுக்கடா அன்னவிசாரம் என்றானாம். படிப்பைப் பற்றி நமக்கென்ன கவலை? நான் படித்துச் சம்பாதித்துப் போடவேண்டும் என்று என் பெற்றோர் என்னைக் கலாசாலைக்கு அனுப்பினார்கள்? வாழ்க்கையைப் பலவிதக் கோணங்களிலிருந்து பார்த்து அனுபவம் அடையத்தான் இங்கே அனுப்பினார்கள்!

வாசு: புத்தி! புத்தி! ஜமீன்தார்வாள்! தெரியாமல் சொல்லி விட்டேன். மன்னிக்க வேண்டும். அந்த சிகரெட் டப்பாவைக் கொஞ்சம் நகர்த்துங்க!

ராமு: (சிகரெட் டப்பாவைத் திறந்து பார்த்து): அடாடா! என்ன ஏமாற்றம்! நேற்று மாலைதான் ஐம்பது சிகரெட் வாங்கினேன். இப்போது ஒன்றுகூட இல்லை. சரி. ஒரு நொடியில் வாங்கிவர ஏற்பாடு பண்ணுகிறேன்.

வாசு: பரவாயில்லை: பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். நேற்று ராத்திரி உங்கள் ரூமிலே லைட் 'ப்யூசா'ப் (fuse) போயிருந்ததா?

ராமு: ஏன்?

வாசு: ஒரு வேளை ராத்திரிப் பூராவும் சிகரெட்டையே கொளுத்தி வெளிச்சம் போட்டீங்களோ என்று கேட்டேன்!

[ராமு சிரித்துக்கொண்டே தன் புஸ்தக அலமாரியிலிருந்து தந்தி பாரம் ஒன்றை எடுத்து வருகிறான்]

ராமு : நீ 'ராத்திரி' என்று சொன்னவுடன் தான் ஞாபகம் வருகிறது. இன்றைக்குத் தானே, ஜில் ஜில் நாடகக் கம்பெனியோட 'தாராசசாங்கம்' ஆரம்பம்?

வாசு : ஆமாம்! பிரதர்! ஸீட் ரிசர்வ் பண்ணுவதற்காகத் தந்தி அடிக்கப் போகிறீர்களா?

ராமு : இல்லை, இல்லை! திவால் பாங்கிலே பணம் வாங்க ருப் போல ஐந்நூறு ரூபாய் செக் ஒன்று இருக்கிறது. நம் அதிர்ஷ்டம், பாங்கிலே ஆடிட்டர்கள் கணக்குப் பார்த்துக்கிட்டு இருக்காங்களாம். செக் மாற்ற நாலு நாளாவது ஆகும். நம்ப 'பிரின்சிபிள்' தான் உனக்குத் தெரியுமே! முதல் நாளன்றே டிராமாவைப் பார்த்துத் தீரணும். அதனால், நூறு ரூபாய் தந்தி மணியார்டர் பண்ணும்படி வீட்டுக்கு தந்தி கொடுக்கப் போகிறேன்.

வாசு : 'திடுதிப்' பென்று தந்தி கொடுத்தா கையிலே ரூபாய் வச்சிருக் காங்களோ, என்னவோ!

ராமு : இந்தச் சில்லறைத் தொகைக்குக் கூடவா பஞ்சம்? ஊரிலே ரூபாய் துருப்பிடித்துக் கிடக்கிறது! இந்த வாரம் எங்க அப்பா பழைய 'பியூக்' மோட்டாரை விலைக்குக் கொடுக்கப் போவதாக எழுதியிருந்தார். ஆகையால் ரூபாய் எப்படியும் கைவசம் இருக்கும்.

வாசு : உனக்கென்னப்பா, மகராஜன்!

[இந்த சமயத்தில் தபால்காரன் வந்து ராமுவின் கையில் ஒரு கார்டைக் கொடுத்து விட்டுப்போகிறான். அதைப்படித்த ராமு முகத்தைச் சுளிக்கிறான்]

என்ன, மிஸ்டர்! கல்யாணம் கில்யாணம் நிச்சயமா யிருக்குன்னு வீட்டிலேருந்து எழுதியிருக்காங்களா?

ராமு: நோ, நோ! கேப்ரன் காலேஜ் மிஸ். ரத்தினமணி இன்றைக்கு ஒரு மிக்ஸெட் டபிள்ஸ் டென்னிஸ் மாட்சிற்கு வருவதாகப் போனவாரம் சொல்லியிருந் தாள். சில அசந்தர்ப்பங்களால் வரமுடியவில்லை என்று எழுதியிருக்கிறாள்.

வாசு: பலமான ஏமாற்றம் தான்! நான் வரட்டுமா' பிரதர்! கொஞ்சம் படிக்க வேண்டும்.

[வாசு போகிறான்]

ராமு: (அவன் போனபிறகு, அங்கலாய்ப்புடன் கையிலி ருக்கும் கார்டைப் பார்த்துக்கொண்டே): நல்ல அப்பாவும், அம்மாவும் வாய்த்தார்கள் ஐயா, நமக்கு! வெறும் அழுகை! படி, படி என்று பிராணனை எடுக் கிறார்கள். எப்போ கேட்டாலும் பணம் இல்லை என்று ஒரேபாட்டு! குஷியா இருக்கிற வேளையிலே மூக்காலணு கார்டை எழுதி தொந்தரவு பண்றாங்க. இவர்களெல்லாம் இந்த உலகத்திலே பிறக்கவில்லை யென்று யார் அழுதார்கள்?

## இரண்டாம் காட்சி

[கிராமாந்திரத்தில் ஒரு சாதாரண வீடு, கவலை தோய்ந்த முகத்துடன் முத்தையா பிள்ளை உட்கார்ந் திருக்கிறார். உள்ளேயிருந்து அவருடைய மனைவி காந்திமதி வருகிறாள்.]

காந்திமதி: என்ன, தந்தி? நம்ப ராமுவின் உடம்புக்கு ஒன்றுமில்லையே!

முத்தையா பிள்ளை: பரீட்சை விஷயமாய் நூறு ரூபாய் வேணுமாம்; தந்தி மணியார்டர் பண்ண வேண்டுமாம். முந்தா நாள்தான் சாப்பாட்டுக்கு அரிசி வாங்கக்கூடக் கைவசம் காசு இல்லை என்று ஒரு கார்டு எழுதினேன். அதைப் பார்த்தானோ, இல்லையோ!

காந்திமதி: நம்ம ராமு அவசியமில்லாமல் தந்தி கொடுத்திருக்க மாட்டான். என்ன யோசனை பண்றீங்க? எழுந்திருங்க ஏதாவது ஒரு வழி பாருங்க.

முத்தையா பிள்ளை: ஒரு வழியுமில்லையே, என் செய்வது?

காந்திமதி: உடம்பை உடம்பு என்றுகூடப் பார்க்காமல் நம்ப பிள்ளை படிக்கிறது! இன்னும் ஒரு மாதத்தில் பரீட்சை எழுதி 'பாஸ்' பண்ணி விட்டால் நம்ப கஷ்டமெல்லாம் விடிந்து போகாதா?

முத்தையா பிள்ளை: அந்த எண்ணத்தோடுதான் ஒரு கோட்டை விதைப்பாடு நிலத்தையும் விற்று, வீட்டையும் அடமானம் வச்சு அவனைக் காலேஜுக்கு அனுப்பினேன். இந்தக் காலத்திலே காசு முளைக்கிற மரம் கைவசம் இருந்தால்தான் பிள்ளைகளைக் காலேஜுக்கு அனுப்பலாம் போலிருக்கிறது.

காந்திமதி: இப்போது பழங் கதை பேசி என்ன பிரயோஜனம்? செட்டியாரோட உண்டியல் கடையிலாவது வாங்கிக்கிட்டு வாங்க!

முத்தையா பிள்ளை : *அவனுக்கு வட்டி பாக்கியே இரு நூறு ரூபாய் வரை அழ வேண்டும். அடமான மில்லாமல் பைசா கொடுக்க மாட்டானே ?*

காந்திமதி : *அப்படின்னு கடைசியா அந்த ஒரு விஷயத் தையும் முடிச்சுப்பிட வேண்டியதுதான் !*

முத்தையா பிள்ளை : *எந்த விஷயம் ?*

காந்திமதி : *நம்ப செவலைப் பசுவின் மேலே பெரிய வீட்டு நாயக்கருக்கு ஒரு கண் ! அதை அவருக்கு ஓட்டிவிட வேண்டியதுதான் !*

முத்தையா பிள்ளை : *நம்ப நிலைமை அவ்வளவு தூரம் வந்து விட்டதா ? லக்ஷ்மி போல இருக்கும் அந்தப் பசுவை விற்றுவிட்டு என்னாலே ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. அதோட பாலை வித்து அரை வயிற்றுக்கா வது வழி பார்த்துக்கிட்டு இருக்கோம். அதைக் கொடுக்க உனக்கு எப்படித்தான் மனது வருதோ ?*

காந்திமதி : *நிலைமை எனக்குத் தெரியாமலா இருக்கு ? எவ்வளவோ கஷ்டப்பட்டு, அரைப் பட்டினி கிடந்து இவ்வளவு நாள் பணம் அனுப்பியாகி விட்டது. இன்னும் ஒரு மாதம் கஷ்டத்தோடு கஷ்டமாய் அனுப்பினால், பிறகு அவன் சம்பாதிக்கமாட்டானா ?*

முத்தையா பிள்ளை : *பகவானுக்குத் தான் வெளிச்சம் ! அவன் வந்து சம்பாதித்துப் போடும் வரை நான் உசிரோடு இருக்கேனோ என்னவோ ! யார் கண்டார் கள் ? —உம்...... உன் ஆசையையும் தான் கெடுப்*

பானேன்? நாயக்கரைப் போய்ப் பார்த்துப் பேசி முடித்து ரூபாய் வாங்கிக்கிட்டு வாரேன்!

காந்திமதி: வரும் போதே ரூபாயைத் தந்தி மணியார்டர் பண்ணிட்டு வாங்க!

## மூன்றும் காட்சி

[மறுநாள் ராமு சிகரெட் புகையால் ஆகாசக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறான். வாசு வருகிறான்.]

வாசு: என்னப்பா! கண்ணெல்லாம் ஒரு மாதிரி 'ஜிவு ஜிவு'ன்னு இருக்கு! நேற்று ராத்திரி ரொம்ப நேரம் படித்தயோ?

ராமு: அட, சாம்பிராணி! யாராவது படிக்க கண்ணைக் கெடுத்துப்பாங்களா? நேற்று ராத்திரி 'தாரா சசாங்க'த்திற்குப் போயிருந்தேன். என்ன ஜோர், என்ன குஷி! சோபா டிக்கெட்டுக்கு இருபத்தைந்து ரூபா தான் வாங்கினான். அந்த சீட் இருந்த குஷிக்குக் கண்ணை மூடிக்கொண்டு ஐம்பது ரூபாய் கொடுக்கலாம் போலிருந்தது!

வாசு: நேற்று ஏதோ பாங்கி திறக்கவில்லை, 'செக்' மாறவில்லை என்றாயே?

ராமு: அந்தப் பிச்சைக்கார பாங்கி திறக்கலேன்னு இவரோட 'ப்ரோகிராம்' மாறிப் போயிடும் என்று நினைத்தாயோ? நேற்றுக் காலையிலே நீ இருக்கிறபோது தானே எங்க அப்பாவுக்குத் தந்தி கொடுத்தேன்?

நூறு ரூபாய் உடனே கதறிண்டு வந்தது! — இந்தா, இந்தா! இப்போ எடுத்துக்கோ. ஸ்டாக்கிலே இருக்கட்டும் என்று ஐந்து டப்பா சிகரெட் வாங்கி விட்டேன்!

வாசு: [ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டு]: நான் வரேனப்பா! வேலை இருக்கிறது ......

ராமு: அதோ, பார்த்தாயா? நேற்று மாலை வாங்கின புது ரக பூட்ஸ்! எப்படி இருக்கு?

வாசு: நீ வாங்கினால் கேட்கவா வேண்டும்? ரொம்ப நன்றாயிருக்கே! பெஸ்ட் செலக்ஷன்!

ராமு: ஒரே விலை, முப்பத்தைந்து ரூபாய்! காசை விட்டெறிந்துத் தூக்கி வந்துவிட்டேன். அதற்கு ஏகப் போட்டி!

வாசு: அப்போ நேற்று வந்த நூறு ரூபாயையும் ஒரு தினுஸா காலி பண்ணிட்டேன்னு சொல்லு!

ராமு: அது இன்னுமா கையிலே இருக்கு? அப்போதே 'கற்பூரமாகப் போயிற்று'! ஐம்பது ரூபாய் உடனே வேண்டும் என்று இன்றைக்குக் காலையிலே அப்பாவுக்கு எழுதி விட்டேன்!

வாசு: உனக்கென்னப்பா! மகராஜன்!

[வாசு போகிறான்; ராமு இன்னொரு சிகரெட்டை எடுத்து ஆனந்தமாகப் பற்ற வைக்கிறான்!]

# 2. மரணத்தின் முன்

பி. எக்ஸ். ரங்கசாமி

கௌதமி: பகவானே! இது தான் உன் திருவுள்ளமா? உன் விளையாட்டு இவ்வளவு கடுமையானதா?

வழிப்போக்கன்: ஏனம்மா அழுகிறீர்கள்? பகவானைப் பழிப்பது பாவ மில்லையா?

கௌதமி: பாவம்! தீபத்தை ஏற்றும்போது அதை அணைக்க சித்தம் கொண்டிருந்தால் இந்த வேடிக்கை மாத்திரம் எவ்வளவு புண்ணியமானது?

வழி: அம்மா! நீங்கள் யார்? ஏன் இக் கானகத்தில் இப்படிக் கதறிக் கொண்டிருக்கிறீர்கள்?

கௌதமி! ஐயா! பெண் ஜன்மங்களில் நான் புண் ஜன்மம். காலத்தின் கைப்பாவையாகிய நான் யாராக இருந்தால் என்ன?

வழி: அம்மா!........

கௌதமி: இதோ, தோள் மேல் கிடப்பவன் இந்த அபலையின் ஏக புதல்வன். என் மல்லிகைக் கொடி வாடி விட்டதே! என் ஆவியின் ஆசை அவிந்து விட்டது.

---

16—7—46ல் திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பப் பட்டது. நிலைய அனுமதியுடன் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

வழி: அடடா...... எப்படி அவன் இறந்தான்?

கௌதமி: மலர் பறிக்கச் சென்ற என் பாலகனை ஒரு சிறிய சர்ப்பம் தீண்டும் வரை வேடிக்கை பார்க்க அந்த பகவானுக்கு எவ்வளவு கடின சித்தமிருக்க வேண்டும்?

வழி: ஐயோ, பாவம்! எல்லாம் விதியின் விளையாட் டம்மா; அவனுக்கு என்னமோ பொல்லாத காலம்!

கௌதமி: காலம் என்னை அலங்கோலப் படுத்திவிட்டது. விதி இக்கதிக் குள்ளாக்கி விட்டது என்னை. தன்னந் தனியாக இக்காட்டில் தத்தளிக்கச் செய்து விட்டது; கண்களைத் தந்தது, ஆனால் காட்சியைப் பிடுங்கி விட்டது. விதியாம் விதி!

வழி: அம்மா! வருந்தப்படாதே. வருவது வந்தே தீரும்!

கௌதமி: ஐயா! என் மகன் பிழைக்க ஏதாவது மருந்து ஒன்றும் தங்களுக்குத் தெரியாதா? பெரிய புண்ணி யமாக இருக்கும்.

வழி: இறந்தவர் என்றாவது பிழைப்பதுண்டா? மாய வாழ்வின் இரகசியமே இது தானே?

கௌதமி: அப்படியென்றால் எனக்கு விமோசனமே இல்லையா?

வழி: அம்மா! தங்களைப் பார்த்தால் மிகவும் பாவமாக இருக்கிறது. இந்த வழியே போனால் சற்று தூரத்

தில் ஒரு மரத் தடியில் பிக்ஷு ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவரிடம் உங்கள் துன்பத்தைச் சொன்னால் தகுந்த சிகிச்சை செய்வார்.

கௌதமி : ஐயா உண்மைதானா ?

வழி : கவலைப்படாதீர்கள், அம்மா ! உலகத்தில் துன்பப்படாதவர்கள் யார் தான் இருக்கிறார்கள் ? இதோ இந்த பால்காரியுடன் போங்கள். உங்களுக்கு வழி காட்டுவாள்.

[ தாமதம் ]

கௌதமி : அம்மா !

பெண் : தாயே ! நீ யாரம்மா ?

கௌதமி : அவதிப்படுவதற்காகவே இவ்வுலகத்தில் பிறந்தவள்.

பெண் : பெண் ஜன்மமே துன்பத்தின் உருதானே ? பிறந்தது முதல் சதா வருத்தம், கவலை, தொல்லை. அதற்காக ஏனம்மா இப்படித் தலைவிரி கோலத்துடன் அழுகிறாய் ?

கௌதமி : அம்மா ! என் ஒரே மகன் கொஞ்ச நேரத்திற்கு முன்தான் பாம்பு கடித்து இறந்து விட்டான். ஆறாத பெரு நெருப்பை என் அடிவயிற்றில் கட்டிவிட்டானே.

பெண் : அழாதேயம்மா ! எல்லாம் அவன் செயல்.

கௌதமி: பிக்ஷு ஒருவர் ஒரு மரத்தடியில் இருக்கிறாராமே! அவரிடம் நான் சென்றால் எதுவும் உதவுவாரா?

பெண்: ஆம்! அவரிடம் போனால் உன் துன்பத்தை நிச்சயமாய் நீக்குவார்.

கௌதமி: அவர் எங்கிருக்கிறார்?

பெண்: அதோ அந்த மரத்தடியிலிருக்கிறார்.

கௌதமி: [அழுதவாறு] ஸ்வாமீ.........

பிக்ஷு: யாரம்மா நீ? உனக்குத் தீங்கிழைத்தவர் யார்?

கௌதமி: மகனை இழந்த மாபாவி நான். அரவம் ஒன்று இவனுக்குக் கூற்றுவனை வந்து விட்டது.

பிக்ஷு: சகோதரி! கவலைப்படாதே. உன் மகனைக் காப்பாற்றக் கூடியவர் வெகு சமீபத்திலேயே இருக்கிறார்.

கௌதமி: தெய்வத்துக்காக மலர் கொய்யச் சென்றவனை மாய்த்து விட்டது ஒரு சர்ப்பம். இதற்குச் சம்மதிக்க அந்தத் தெய்வத்துக்கு எவ்வளவு கொடுமையான உள்ளம் வேண்டும்?

பிக்ஷு: அம்மா! எந்தத் துன்பம் வந்தாலும் கடவுளை நிந்தனை செய்யாதீர்கள். அவர் எப்போதும் கருணை நிரம்பியவர்.

கௌதமி : அப்படியென்றால் என் மகன் பிழைத்து விடுவானா ?

பிக்ஷு : பஞ்சேந்திரியங்களை வென்று மஞ்சள் உடை அணிந்து அதோ அந்த அருவியின் அருகில் ஆண்டவனைத் தியானித்துக் கொண்டிருக்கிறார் முற்றுந் துறந்த முனிவர்.

கௌதமி : அவரை அண்டினால் துன்பம் தீருமா?

பிக்ஷு : அவசியம் உதவுவார். ஆசாபாசங்களை அகற்றிய அதிவீரர். அன்பிலே பிறந்து, அன்பில் வளர்ந்து அன்பிற்காகவே ஆடம்பர வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு அன்பின் அரசராக விளங்குகின்றார்.

கௌதமி : எனக்கு உதவுவாரா ?

பிக்ஷு : பிறர் துன்பப்பட சகியாத உள்ளம் படைத்த உத்தமர் அவர். உன் சஞ்சலத்தை அஞ்சாது அவரிடம் கூறு. கருணையின் களஞ்சியமாகிய அந்த பகவான் புத்தர் உன்னைக் கட்டாயம் காத்து இரட்சிப்பார். உன் மகனது நோயை உடனே போக்குவார்.

கௌதமி : புத்தர்.......பகவான் புத்தர்......ஆம்...கருணைக் கடல்! புண்பட்ட என் உள்ளத்தைப் பண்படுத்தும் ஈசன்......இந்த ஐயனின் நாமத்தை அறவே மறந்தேன்.. ....நான் பெரிய பாவி......பாவி!...... இதோ செல்கிறேன்.

[ தாமதம் ]

கௌதமி : ஸ்வாமி...ஸ்வாமி [ஏங்கி அழுகிறாள்]

புத்தர் : குழந்தாய்! நீ யார்? ஏன் அழுகிறாய்?

கௌதமி : ஸ்வாமி, அன்றொரு நாள் ஆரண்யத்தில் தாங்கள் பார்த்த கௌதமி நான். தங்களை முற்றிலும் மறந்தேன்! என் வாழ்க்கையில் இடி விழுந்து விட்டது.

புத்தர் : பதறாதே, குழந்தாய்! உன் குறை யாது?

கௌதமி : நச்சுப் பாம்பொன்று என் பச்சைக் குழந்தையைத் தீண்டி விட்டது. ஸ்வாமி! நான் என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? அன்பின் அரசரே! உலும்பினி வனத்தில் உதித்த உத்தமரே! உம் அடைக்கலமாக ஓடிவந்தேன். என் மீது உமது உள்ளம் இரங்கிட வேண்டுகிறேன்.

புத்தர் : குழந்தாய் வருந்தாதே! துன்பம் மலிந்த இவ்வுலகில் நீ இன்பத்தை எதிர் பார்க்கிறாயா? உன் மகன்...

கௌதமி : இறந்து விட்டான், ஸ்வாமி! பளிங்கு போன்ற கண்களில் பாசி படர்ந்து விட்டது! ஆசையுடன் மலர் பறிக்கச் சென்ற இவனுக்கு இக்கதியா? ஸ்வாமி!

புத்தர் : மகளே! ஆசைதானே இவ்வுலக துன்பங்களுக்கெல்லாம் காரணம்? ஆசை யில்லையேல் அழிவேது?

கௌதமி : ஸ்வாமி!... உயிரற்ற இவனுடைய உடல்...... கூற்றின் ஆற்றலால் காற்றாயிருந்த என் கண்மணியின் உடல் கனத்து விட்டதே!

புத்தர் : உடல்!...... வினையால் வந்தது...... வினைக்கு வினைவானது. இதில் என்ன ஆச்சரியம்?

கௌதமி : ஸ்வாமி! என் கண்மணி இறந்தபின் நான் எவ்வாறு வாழ்வேன்? அம்மா என்று அழைக்கும் என் பாலகன் போய்விட்டானே, ஸ்வாமீ!......

புத்தர் : கௌதமி! பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும்; உறங்கலும் விழித்தலும் போன்றது என்ற உண்மையை அறியாயா?

கௌதமி : ஐயனே! நடக்கும் பருவத்திலேயே நமன் வந்து விட்டானே இவனுக்கு.

புத்தர் : மின்னலையும், அலையையும் புல் நுனியிற்பட்ட பனித் துளியையும் போல பிறந்த போதே நாம் அழிய வேண்டியவர்கள் தானே? இவ்வுலக பந்தங்களைச் சீக்கிரமே விட்டு விட்டுப் போய்விடுவது நல்லதல்லவா?

கௌதமி : திக்கற்ற எனக்குத் துணையாக வேறு ஒருவரும் இல்லையே, ஸ்வாமி! என் கடைசி நாட்களின் ஊன்று கோலாக வல்லவோ எண்ணியிருந்தேன்.

புத்தர் : கௌதமி! உன் மகன் மிக்க பாக்யசாலி! முடிவில் அழிந்து மண்ணோடு மண்ணாய்ப் போகும் இவ்வுடலுக்கு ஏற்படும் பல ஆபத்துக்களிலிருந்தும் துன்பங்களினின்றும் உன் மகன் தப்பித்துக் கொண்டான்! மூப்பு விளிவுடையது இவ்வுடல். சகல பிணிகளுக்கும் இருப்பிடம். புனைவன நீங்கின் புலால் வீசுவதும் இவ்வுடல். இப்பாழும் சடலம் வெறுத்தற் குரியது.

கௌதமி : ஸ்வாமி! அப்படியானால் என் பாலன் இறந்த தற்கு நான் அழுது புலம்புவது வீண்தானா?

புத்தர் : மகளே ! நீ மாத்திரமல்ல ! உலகம் முழுவதுமே வீணுகத்தான் அழுதுகொண்டு இருக்கிறது. உன் கண்களுக்கு இவ்வுண்மை புலப்பட வில்லையா ?

கௌதமி : பகவானே ! மடிந்து போன என் மகன் பிழைப்பதற்கு ஒரு மருந்தும் கிடையாதா ?

புத்தர் : இல்லாமல் என்ன ? ஆனால் மருந்தை உன்னுல் கொண்டு வரமுடியுமா ?

கௌதமி : ஸ்வாமி ! அது என்ன மருந்து? எந்தப் பச்சிலை, எந்தவேர் அல்லது வேறெதையும் கொண்டு வரும்படிக் கட்டளை யிட்டாலும் அவற்றை விரைவில் கொண்டு வருவேன். என் மகன் பிழைத்தால் போதும் !

புத்தர் : மகளே ! வேருென்றும் வேண்டாம். ஒரு பிடி கடுகு இருந்தால் போதும்.

கௌதமி : இதுதானு, ஸ்வாமி ! இதோ இப்போதே சென்று கொண்டு வருகிறேன் !

புத்தர் : கொஞ்சம் பொறு, கௌதமி! சாவையே அறியாத வீட்டிலிருந்து கடுகைக் கொண்டு வர வேண்டும்.

கௌதமி : அப்படியே ஸ்வாமீ! இதோ போய் வருகிறேன்.

[ தாமதம் ]

கௌதமி : அம்மா !........ [அழுகிருள்]

வயதானவள் : ஏனம்மா ?......அம்மா!......ஏன் இப்படி வருந்துகிருய் ?

கௌதமி : என் வாழ்வை சுகப்படுத்தத் தாங்கள் சிறிது உதவமாட்டீர்களா?

வயதான : என்னம்மா உனக்குக் கஷ்டம்? உன்னைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கிறதே?

கௌதமி : ஒரு சிறு உதவி தாங்கள் செய்தால்.........

வயதான : மகளே! என் மகள் போல நீ!......உன் கண்ணில் கண்ணீர் ஆறாகப் பெருகுவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லையே? உன் குறை என்னம்மா? என் உயிரைக் கொடுத்தேனும் அவசியம் நிவர்த்திக்கிறேன்.

கௌதமி : தாயே! அப்படிக் கொடூரமான வார்த்தைகள் சொல்லாதீர்கள்! அதை மாற்றத்தானே நான் உங்கள் முன் இறைஞ்சி நிற்கின்றேன். என் கண்மணி...... சிறு பாலகன் இறைவனடி அடைந்துவிட்டானம்மா.

வயதான : மகளே! இந்தச் சிறு வயதில் இத்தகைய பெரிய கொடுமையையா ஈஸ்வரன் உனக்கு அளித்தான். இதற்கு நான் என்னம்மா செய்ய முடியும்?

கௌதமி : ஒரு பிடி கடுகு உங்கள் கையால் கொடுத்தீர்களானல்......

வயதான : கடுகா? ஏன்?

கௌதமி : என் செல்வன் பிழைத்து விடுவானம்மா?

வயதான : கடுகிலா?......இதோ வேண்டியது தருகிறேன்!......வேண்டியது தருகிறேன்......மகளே....

ஹூம்! என் மகள் இறந்து போன போது இத்த கைய மார்க்கம் இருக்கிறதென்று எனக்குத் தெரிந்தி ருந்தால்.......ம்......பாவி! நானும் ஒரு தாயாக இருந் திருந்தும், மகளின் மரணத்தைப் போக்க ஒரு முயற் சியும் செய்யாமல் இருந்து விட்டேனே!

கௌதமி: என்ன? தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? தங்கள் மகளைப் பறிகொடுத்து விட்டீர்களா?

வயதான: ரதி போல மூக்கும் முழியுமாக......அவளை நினைக்கும் போதே என் நெஞ்சம் குமுறுகிறது. மூன்று நாள் படுக்கையில் போய் விட்டாளே!........

கௌதமி: அம்மா! நான் போய் வருகிறேன்.

வயதான: மகளே! என் வருத்தத்தைக் கிளறி விட்டதற் காகவா சஞ்சல மடைகிறாய்? வேண்டாம்! பேசாதே. இதோ வேண்டிய கடுகு எடுத்துச் செல்!

கௌதமி: தாயே!.....வேண்டாம்!

வயதான: உன் குழந்தை இந்தப் பாவி கொடுக்கும் கடு கால் பிழைத்து எழுந்தால் என் மகளை மீண்டும் பெற்ற குதூகலம் எனக்கேற்படாதா?

கௌதமி: [தூரத்தில்] இல்லை......அம்மா! நான் தங்கள் வருத்தத்தைக் கிளறியதற்காகத் தயவு செய்து மன்னித்து விடுங்கள்! நான் வருகிறேன். இந்தக் கடுகால் பயனிருக்காது!

[ இசை ]

புத்தர்: குழந்தாய்! என்ன இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி விட்டாய்?

கௌதமி : ஸ்வாமி! போனேன்............

புத்தர் : ஒரு பிடி கடுகு கிடைத்ததல்லவா?

கௌதமி : ஸ்வாமீ! ஒவ்வொரு வீடாய்க் கேட்டேன். எல்லோரும் என் மீது இரக்கம் கொண்டார்கள். வைத்திருந்தவர்கள் எல்லோருமே கொடுத்தார்கள்.... ......ஆனால்.........?

புத்தர் : ஆனால்.........என்ன?

கௌதமி : அவர்கள் என்னை நோக்கி நகைத்து, "நீ பித்துக் கொண்டனையா? உயிரோடிருப்பவர்கள் மிகச் சிலர்; இறந்தவர்கள் மிகப் பலர். அப்படி இருப்பவர்களும்கூட இறத்தற் குரியவர்கள் தானே! ......" என்று சொன்னார்கள். துன்பத்துக்கு இலக்காகாதவர்களே கிடையாதா?

புத்தர் : எங்கும் இல்லாத பொருளைத் தேடச் சென்று நீ, நான் நினைத்த அரிய பொருளைப் பெற்று விட்டாய். கௌதமி! உன் மனத்தில் இருள் நீங்கிற்று. நீ வெகு எளிதில் உண்மையை அறிந்து கொண்டாய்! உலகத்தில் சாவு சகஜம்—சாகா வரம் பெற்றவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆனால் இவ்வுலகில் ஒவ்வொருவருடைய உள்ளமும் உன் உள்ளத்தைப் போல் அலறிக் கொண்டுதான் இருக்கிறது.

கௌதமி : ஸ்வாமீ! நான் யாவும் அறிகிறேன்.

புத்தர் : மகளே! உன்னை மூடியிருந்த உலக மாயை உன்னை விட்டு அகன்றது. இவ்வுலகப் பொருள்களின்

நிலையாத் தன்மையைச் சற்றே நினைத்துப்பார்.

இளமையும் நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமு நில்லா
புத் தேளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத் துணையாவது.

ஆகையால், கௌதமி, அறந்தான் நம்மை முடிவில் காப்பாற்றும். உலக மாயையை வெல்வதற்கு நம்மை மிகவும் நெருங்கி இருக்கின்ற ஒவ்வொரு பொருளி னின்றும் நாம் நீங்க வேண்டும்.

கௌதமி: என் ஞானக் குருவே! எனக்கு யாவும் புலனு கின்றது. ஸ்வாமீ! நான் என்ன புண்ணியம் செய்தேனோ, உமது பாதங்களையடைய? என்னை ஒரு பிக்ஷுணியாக ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடு கிறேன்.

புத்தர்: கௌதமி! அவ்வாறே ஆகட்டும்! உலகத்தின் மாயையை நீ வென்று விட்டாய்! ஐம்புலச் சிறையி னின்றும் வெளியேறி விட்டாய்! .........

கௌதமி: நமோ......... புத்தாய! .........



# 3. போட்டி மாப்பிள்ளை

*கோமதிஸ்வாமிநாதன்*

## காட்சி 1.

*[ஒரு தபால் ஆபீஸ்; பகல் வேளை; அதிகக் கூட்டமில்லை. மணியார்டர் கிளார்க் கிருஷ்ணய்யரிடம் சாம்பு அய்யர் ஒரு மணியார்டரையும், ரூபாயையும் நீட்டுகிறார்]*

கிருஷ்ணய்யர்: சாம்பு ஐயர்வாளா! ஏது அபூர்வமாயிருக்கிறது. இந்தப் பக்கம் கண்ணிலேயே தட்டுப்படக் காணுமே?

சாம்பு: ஆமாம்; ஒரு மாசமா நான் ஊரிலேயே இல்லை.

அய்யர்: அதுதான் கேட்டேன். உங்க பையன் கோபுவிற்கா மணியார்டர்?

சாம்பு: ஆமாம்; இங்கு வரப்போகிறான் லீவிலே.

அய்யர்: இப்போ டில்லியிலே என்ன பண்ணிக்கொண்டிருக்கான்.

சாம்பு: பி. ஏ. பாஸ் பண்ணின உடனேயே செக்ரிடேரியட்டிற்கு போய் விட்டான். நான் வருகிறேன். ஒரு ரிஜிஸ்டர் வேறு அனுப்ப வேண்டியிருக்கு.

அய்யர்: (ரசீதைக் கொடுத்து விட்டு):— இன்று சாயங்காலம் உங்க வீட்டுப் பக்கம் வருகிறேன்.

[சாம்பு அய்யர் ரிஜிஸ்ட்ரேஷன் ஜன்னலுக்குப் போய் ஒரு கவரை நீட்டுகிருர். ரிஜிஸ்ட்ரேஷன் கிளர்க் சேஷய்யர் அதை வாங்கிப் பார்க்கிருர்]

சேஷய்யர்: நமஸ்காரம்! ரொம்ப நாளாகத் தட்டுப்படவில்லையே?

சாம்பு: அதை ஏன் கேட்கிறீர்கள். என்ன அலேச்சல் போங்கோ.

சேஷய்யர்: டில்லிக்குப் போயிருந்தீரோ, பிள்ளையிடம்?

சாம்பு: இல்லே; அவனே இங்கு வரப் போகிருனே!

சேஷய்யர்: மறந்தே போய்விட்டேன்! உங்க பையன் கோபு என்ன பண்ணிக் கொண்டிருக்கிருன்?

சாம்பு: செக்ரிடேரியட்லே ஸ்டெனே கிராபராய் இருக்கான்.

சேஷய்யர்: நல்ல உத்யோகம்; நிறையச் சம்பளம் வாங்குவான், நான் அப்புறம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். ஒரு முக்கிய விஷயம் பேசணும்.

சாம்பு: நானே உங்களே யெல்லாம் சந்தித்துப் பேச வேண்டும். பிறகு வருகிறேன்.

[போகிருர்]

## காட்சி 2.

[இடைவேளை; கிருஷ்ணய்யரும், சேஷய்யரும் சந்திக்கிருர்கள்]

கிருஷ்ணய்யர் : (புன் சிரிப்புடன்) :— சேஷய்யர்வாள்! கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த மாதிரி இவ்வளவு நாள் அலைந்தேன், ஐயா!

சேஷய்யர் : என்ன ஓய், ரொம்ப குஷியாயிருக்கிறீரே! இரண்டு டன் விறகும், 4 சாக்கு அரிசியும் கிடைத்தால் கூட இவ்வளவு சந்தோஷம் உண்டாகாதேங்காணும்?

கிருஷ்ணய்யர் : உம்ம கேலி கிடக்கட்டும்! என் பெண் சரஸாவிற்கு வரன் தேடித்தேடி அலைந்தேனே! சமீபத்திலேயே இருக்கும் ஒரு இடத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டேன். இன்றுதான் ஞாபகம் வந்தது. இனிமேல் கல்யாணம் முடிந்த மாதிரிதான்.

சேஷய்யர் : மாப்பிள்ளை வேட்டையா? உமக்கும் நமக்கும் எவ்வளவு ஒற்றுமை! உம்மைப் போலவேதான், நானும் தெரிஞ்சுப் பழகின இடத்துப் பிள்ளையை மறந்து விட்டு ஊர் ஊராய் அலைந்தேன். தெய்வ சங்கல்பத்தால் இன்றுதான் அது நினைவிற்கு வந்தது. அநேகமாய் இந்த வாரமே நிச்சயதார்த்தம் நடக்கும்.

கிருஷ்ணய்யர் : ரொம்ப சந்தோஷம். முகூர்த்தங்கள் நிச்யம் பண்றபோது நாம் இருவரும் கலந்துகொண்டு செய்வோம். ஒரே நாளில் வைத்துக் கொண்டால் நமக்கு லீவு கொடுக்க மாட்டான்.

சேஷய்யர் : வாஸ்தவம். சாயங்காலம் ஆபீஸ் வேலை முடிந்தபின் வாரும். இரண்டு பேருமாய்ப் போய் எனக்குச் சம்பந்தியாக வரப்போகும் அய்யர்வாளைப்

பார்ப்போம். மூன்றும் மனுஷ்யனை வைத்துக்கொண்டு தான் லௌகிக விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும்.

கிருஷ்ணய்யர்: இந்த ஒத்தாசை கூட செய்ய மாட்டேனா? நான் உம்முடன் வருகிறேன். உம்முடைய சமாசாரங்களைப் பேசி முடித்துக் கொண்டு நீரும் என்னுடன் வாரும். நானும் என் சம்பந்தி அய்யர்வாளைப் பார்த்து உங்கள் முன்னால் பண விஷயத்தை 'ஸெட்டில்' பண்ணிக் கொள்ளலாம்.

சேஷய்யர்: நல்ல 'ஐடியா'! ஆபீஸ் பியூன் மூலமாக இப்பொழுதே சாம்பு ஐயருக்கு ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன்.

கிருஷ்ணய்யர்: எந்த சாம்பு அய்யர்?

சேஷய்யர்: சிவன்கோவில் தெரு சாம்பு அய்யர்.

கிருஷ்ணய்யர்: அவரும் உம்முடன் வருவதாகச் சொன்னாரா?

சேஷய்யர்: அவரிடம் தான் நாம் போகவேண்டும்; அவர் பிள்ளை கோபுதான் என் மாப்பிள்ளை

கிருஷ்ணய்யர்: என்ன, ஐயா! உளறுகின்றீர்! சாம்பு அய்யர் பிள்ளை கோபுவிற்குத் தான் என் பெண் ஸரஸாவைக் கொடுக்கப் போகிறேன். நீர் சொல்வது வேறு சாம்பு அய்யராக இருக்கும்!

சேஷய்யர்: டில்லி செக்ரிடேரியட் ஸ்டெனோகிராபர் மிஸ்டர் எஸ். கோபாலன், இந்த சேஷய்யர் மாப்பிள்ளை! போதுமா?

கிருஷ்ணய்யர் : என்ன ஓய் ! கத்திரிக்காய் வாங்குகிறதிலே யிருந்து கல்யாணம் பண்ணுகிற வரை என்னுடன் உமக்குப் போட்டியா ?

சேஷய்யர் : என் பெண் வஸந்தாவிற்குப் பரத நாட்டியத்தில் நல்ல பயிற்சி. வீணை அபாரமாக வாசிப்பாள். இண்டர்மீடியட்டிற்கு வாசிக்கிறாள். இந்த 'க்வாலிபிகேஷனுக்கு' முன் உம்முடைய ஸரஸா எதிர்த்து நிற்க முடியுமா ?

கிருஷ்ணய்யர் : தா, தைன்னு ஆடி விட்டால் எல்லாம் ஆகிவிடுமாங்காணும் ! எங்கள் ஸரஸாவின் சமயல் ஒன்றே போதுமே ? இந்த விஷயத்தில் ஒரு கை பார்த்து விடுகிறேன். கோபுவை நான் மாப்பிள்ளை யாக்கிக்கிக் கொள்ளாவிட்டால் என்பேர் கிருஷ்ணய்யர் இல்லை.

சேஷய்யர் : அதே மாதிரிதான் என்பேர் சேஷய்யர் இல்லை.

[இந்த சமயத்தில் 'ஸார்டிங்' கிளார்க் முனிசாமி நாயுடு வருகிறார்]

கிருஷ்ணய்யர் : நாயுடுகாரு ! இங்கே வாரும், ஒரு சமாசாரம். ஒரு பிள்ளையாண்டானை நான் மாப்பிள்ளையாய் நிச்சயம் பண்ணினேன். அதே பிள்ளைக்கு இவரும் போட்டியாய் வருகிறார்.

சேஷய்யர் : போட்டீன்னு சரியான போட்டி ! நீர் இரண்டாயிரம் கொடுத்தால் நான் மூவாயிரம் வரதட்சணை யாகக் கொடுக்கிறேன்.

முனிசாமி நாயுடு : அப்படி ஏலம் போகிற மாப்பிள்ளை யார் ஐயா?

கிருஷ்ணய்யர் : சிவன் கோவில் தெரு சாம்பு அய்யர் பிள்ளை கோபாலன்!

முனிசாமி நாயுடு : கட்டையா, சிவப்பா, குடுமி வைத்துக் கொண்டு இருப்பாரே, அந்த சாம்பு அய்யரா?

சேஷய்யர்
கிருஷ்ணய்யர் } : ஆமாம்

முனிசாமி யுநாடு : அடட ராமச்சந்திரா! கொஞ்சம் பொறுங்கள் இதோ வருகிறேன்.

[அடுத்த நிமிஷம் கையில் ஒரு கல்யாணப்பத்திரிகை யுடன் காட்சி அளிக்கிறார் முனிசாமி நாயுடு]

முனிசாமி நாயுடு : இரண்டு பேரும் இந்தக் கல்யாணப் பத்திரிகையை முதலில் படித்து விட்டு, பிறகு குஸ்தி போடுங்கள். ஐயா!

[இரண்டு பேரும் படிக்கிறார்கள். அது சிவன் கோயில் தெரு சாக்ஷாத் சாம்பு அய்யரின் ஏகபுத்திரனும், டில்லி செக்ரிடேரியட்டில் ஸ்டெனோகிராபருமான ஸ்ரீமான் கோபால் ஐயர் அவர்களின் கல்யாணப் பத்திரிகை!]

# 4. குளத்தங்கரை மோகினி

பி. எக்ஸ். ரங்கசாமி

முத்து : சுந்தர்! நாடகம் எப்படி இருந்தது?

சுந்தர் : கட்ட பொம்மு நாடகம் என்றால் கேட்கவா வேண்டும்? எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

முத்து : பண்டைக் காலத் தமிழ் மக்களின் வீரத்தைச் சித்தரிக்கும் நாடக மல்லவா?

சுந்தர் : அவன் எவ்வளவு வீரா வேசத்துடன் பாடினான்?

முத்து : [பாடுகிறான்]

[தன்னன னாதன தன்னனானே
தன்னன னாதன தன்னனானே]

ஏத்தனை சொப்பனங் கண்டாலும் ஏகாதிருப்பேனே
ஆந்தைகள் கூடி யலறினாலும் அஞ்சிட மாட்டேன்.

சுந்தர் : அவன் பாடலில் எவ்வளவு துடிப்பு? எவ்வளவு வீரம்? நடிப்புத்தான் என்ன?

முத்து : அவனுடைய தோற்றத்தைப் பார்த்தாயா?

சுந்தர் : கம்பீரமானது! ஆறரை அடி உயரம்! முறுக்கின மீசை! கையில் பட்டாக் கத்தி! வீரத் தமிழன் போலல்லவா தோற்றமளித்தான்?

---

திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பப் பட்டது. நிலைய அனுமதியுடன் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

முத்து : உண்மைதான்! பாதர் வெள்ளையின் பாகத்தை எவ்வளவு நன்றாக நடித்தான் அவன்?

சுந்தர் : பாதர் வெள்ளை இறந்த பின் அவன் மனைவி வெள்ளையம்மாள் அழுத காட்சியைப் பார்த்தாயா?

முத்து : ஆரைச் சதமென்பேன் என் கணவர் ஐயோ
நான் என் செய்வேன் பூமியிலே
ஆவி நடுங்குதே என்ன செய்வேன் அங்க
மொடுங்குதே என் கணவா!

சுந்தர் : பாவம்! பெண் ஜன்மத்தின் துயர் அனைத்தையும் அழுது கொட்டினாள். அவள் அழுகைக் குரல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

முத்து : என்ன? அழுகைக் குரல்..............அழுகைக் குரல்!.........

சுந்தர் : முத்து? ஏன்? இதென்ன? நீதானே அந்தப் பாட்டைப் பாடினாய்?

முத்து : எனக்கு ஞாபகமில்லாமல் பாடிவிட்டேன்!

சுந்தர் : என்னடா உளறுகிறாய்?

முத்து : எனக்கு இப்போதுதான் ஞாபகம் வருகிறது.

சுந்தர் : என்ன ஞாபகம்?

முத்து : அதோ தெரிகிறதே! குளத்தங் கரையில் ஆல மரம், அந்த ஆல மரத்தில்...........

சுந்தர்: ஆமாம்! அதுதான் எங்கள் தாத்தா கொள்ளுத் தாத்தா எல்லோருடனும் விளையாடிய இடம். அதற்கென்ன கேடு?

முத்து: அப்படிச் சொல்லாதே!

சுந்தர்: முத்து! என்னடா உன் குரலில் இவ்வளவு நடுக்கம்?

முத்து: அதிலும் ஒரு தெய்வமிருக்கிறது.

சுந்தர்: என்னடா திடீரென்று உளர ஆரம்பித்து விட்டாய்? வளர்பிறையோடு உன் புத்தியும் சிதறி வருகிறதா, என்ன?

முத்து: நான் இந்த வழியே வர - மாட்டவே மாட்டேன், அப்பா! வளர் பிறை நாட்களில் தான் அந்த மோகினி ஆட்களை அடித்துக் கொன்று விடுமாம்!

சுந்தர்: மோகினியா? மோகினி எங்கே இருக்கிறது?

முத்து: அந்த ஆலமரத்தில் தான்!

சுந்தர்: [சிரித்து] பேஷ்! நீ என்றைக்காவது அதைப் பார்த்திருக்கிறாயா?

முத்து: நான் பார்த்திருந்தால் இன்று எப்படி உயிருடன் இருக்க முடியும்? இந்த மரத்தைப் பற்றிய பயங்கரமான வதந்திகள் ஊர் அறிந்த விஷயமாயிற்றே! சில சமயங்களில் அந்த மோகினி அழகிய பெண் மாதிரி

இங்கே நிற்குமாம்! நாட்டியம் ஆடுமாம். சதங்கைச் சத்தமும் கேட்குமாம்.........

[சதங்கை ஒலி — தூரத்தில்]

.........இதென்னடா சத்தம்?

சுந்தர்: பயங்கொள்ளியாக இருக்கிறாயா? என் காதில் விழுவே இல்லை! ஆண்டவன் காதுக்குக் கேட்குமோ, என்னமோ?

முத்து: அன்றைக்கு ஆல இலை பறிக்கச் சென்ற ஆண்டியப்பன் கீழே விழுந்து செத்துக் கிடந்தான். நம் ஊர் கருப்பன் மகள் காத்தாயி குளத்தில் தண்ணீர் எடுக்கும்போது அந்த மோகினிதானே அவளைப் பிடித்துக் கொண்டதாம்! அவள் பௌர்ணமி தோறும் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ஆடுவதை நான் பார்த்திருக்கிறேன். இது உண்மை.

சுந்தர்: பெரிய கட்டுக்கதை! இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை.

முத்து: நம்பிக்கை இல்லாமலா வருடத்தில் ஒரு நாள் நரிக் குறவர்கள் இந்த மரத்தடியில் பொங்கலிட்டு வணங்குகிறார்கள்?

சுந்தர்: நல்ல காரணம் கண்டு பிடித்தாய்? யார் அந்த நரிக் குறவர்கள்?

முத்து: பாசி, ஊசி விற்பார்களே, அவர்கள் தான்!

சுந்தர் : [ சிரிக்கிருன் ]

முத்து : உனக்கு எல்லாம் விளையாட்டுத்தான்!

சுந்தர் : சரி ! நீ சொல்வது உண்மைதாஞ என்று பார்த்து விடு—வோமே !
இப்பொழுதும் வளர்பிறை தானே? வா ! போய்ப் பார்க்கலாம் ! அந்த மோகினியை......

முத்து : என்ன ? நேரே காணவா ? முடியவே முடியாது!

சுந்தர் : ஏன்?

முத்து : நான் வரமாட்டேன் ! பக்கத்தில் போனல் அடித்து விடும்.

சுந்தர் : பயப்படாதே ! நாம் இரண்டு பேரும் போனல் மோகினி ஒன்றும் செய்யாது.திடமனதுடன் வா......
அந்த மரத்தில் தானே இருக்கிறது?

[சதங்கையின் மெல்லிய ஒலி]

முத்து : அடேயப்பா ! [ தூரத்தில் ] குளத்தங்கரை மோகினி தான் !

[ஓடி விடுகிருன்]

சுந்தர் : முத்து !......முத்து!......சுத்தப் பயங்கொள்ளி ! பயந்து இப்படி ஓடுகிருனே !

[சதங்கை ஒலி வர வர வலுக்கிறது]

என்ன ? சதங்கையின் ஒலியா ? [இன்னும் மயக்கம்] என்ன ? உண்மையில் ஒருவேளை...... எனக்கும் பிரமையா ?

[சதங்கை சமீபத்தில்—அத்துடன் அவளுடைய பல-மான பெருமூச்சு-நிசப்தம் 10 விநாடி]
[பயந்து] யார்?......மோஹினி தானா?

மோகினி: [பெருமூச்சுடன்] பயப்படாதே!

சுந்தர்: ஆ! மோஹினியா என்னுடன் பேசுவது?

மோகினி: ஆம்! இதிலென்ன ஆச்சரியம்? நானும் உன்னைப் போல் உலகில் பிறந்தவள் தானே! மலர்வதற்கு முன் கிள்ளி எறியப்பட்ட மலரின் கதை—அவ்வளவுதான்!

–/பெருமூச்சு/–

சுந்தர்: ஏன் இவ்வாறு பெருமூச்சு விடுகிறாய்?
காற்றுடன் கலந்து செல்லும் என் பெருமூச்சுகளைக் கணக்கிட யாரால் முடியும்? அவைகள் என் துர் அதிர்ஷ்டத்துடன் பிறந்தவை.

சுந்தர்: பரிதாபமாக இருக்கும் போலிருக்கிறதே? நீ யார்?

மோகினி: என் பெயர் மோஹினி. ஆவியாக இம் மரத்தில் சஞ்சரித்து வருகிறேன்.

சுந்தர்: [பயந்து] ஹா......ஆவியாகவா?

மோகினி: தயவு செய்து பயப்படாதே! நான் பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டேன்.

சுந்தர் : ஆனால் அந்தக் கதைகள் ?......

மோகினி : என் சதங்கை ஒலியைக் கேட்டு அவர்கள் மயங்கி விழுந்தால் நானா பொறுப்பாளி?

சுந்தர் : .........

மோகினி : என் உடல் அழிந்து எத்தனையோ வருடங்கள் ஆகின்றன. என் வாழ்க்கையில் பாரக் கல் விழுந்தது, இதே மாதிரி ஒரு வளர் பிறை நாளில்தான்! வளர்பிறையில் வளர்ந்த அன்பு, தேய்பிறை பின்னால் காத்திருக்கிறது என்பதைச் சிறிதும் எண்ணவில்லையே! இந்தச் சந்திரனின் இனிய நிலவிலா என் வாழ்க்கை இருள் அடைய வேண்டும் ?

சுந்தர் : அப்படி உனக்கு என்ன நேர்ந்தது?

மோகினி : என் வரலாற்றைக் கேட்டால் கல்லும் கண்ணீர் விடும்.

சுந்தர் : அவ்வளவு துன்பமானதா?

மோகினி : ஆம் ! நான் ஒரு நரிக் குறவனின் மகள் தான்.

சுந்தர் : நரிக் குறவனின் மகளா?

மோகினி : காட்டிலே பிறந்தேன்; காட்டிலே வளர்ந்தேன்; கடைசியில் காட்டிலே தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

சுந்தர் : மோகினி! உன் கதையை விவரமாகத்தான் சொல்லேன், கேட்கலாம்!

மோகினி: என் தந்தை நரிக் குறவர்களின் கூட்டத்தின் தலைவர். நான் அவரது ஒரே மகள்! சிறு குழந்தை யாய் இருக்கும் போதே தாலாட்டிச் சீராட்டி வளர்த்த என் தாய் என்னை இவ்வுலகில் தாயற்றுத் தத்தளிக் கும்படி விட்டுச் சென்றாள்.

சுந்தர்: இதுதான் உங்கள் சொந்த ஊரா?

மோகினி ஊர் ஊராய்த் திரிவது தானே எங்கள் வாழ்க்கை எங்களுக்கு எல்லாம் சொந்த ஊர்தானே! இருபத் தைந்து வருடங்களுக்கு முன் இக் குளக்கரையில் கூடாரம் அடித்திருந்தோம்.

சுந்தர்: இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்தது தானா உன் கதை?

மோகினி: ஆம்! கவனமாய்க் கேள். எனக்கு நன்றாக நாட்டியம் ஆடத் தெரியும். பாடவும் செய்வேன். அவைகளில் ஒரு பைத்தியம்கூட. கிராமத்தின் தெருக் களில் நான் நாட்டியமாடினால் பெரிய கூட்டம் கூடி விடும். எனக்கு ஏராளமாகப் பணமும் கிடைக்கும். பணம் கிடைத்ததில் மாத்திரம் எனக்குச் சந்தோஷ மல்ல! என் நடனத் திறமையும் என் குரலினிமையும் கண்டு எனக்கே மகா கர்வம்! எல்லையற்ற உற்சாகம். திருப்தி! இப்படியாக ஆடிப்பாடி ஆனந்தமாய்க் கழித்து வந்தேன்.

சுந்தர்: இவ்வளவு மகிழ்வுடனிருந்த உன் குரலில் ஏனிந்த சோகம்?

மோகினி: எல்லாம் நான் அகம்பாவத்தால் பூரித்த இந்தத் திறமையால் தான்! என் நாட்டியத்தில் மோகங் கொண்ட இவ்வூர் பிரபுவின் மகன் என்னிடமுள்ள இந்த வித்தையைக் கண்டு எல்லையில்லா ஆச்சரியமடைந்தார். பல தடவை என்னைப் புகழ்ந்தார். என் மேல் பாசம் ஏற்பட்டு வருவதாகவும் சொன்னார். எனக்கும் அவர் மீது அளவில்லாத பிரேமை வளர ஆரம்பித்து அதன்வேகத்தின்முன் என்எழ்மை நிலையும் தெரியவில்லை. என் கண்களின் பார்வையால் அவர் காதலை வளர்த்து வந்தேன். சில சமயம் அவர் எங்கள் கூடாரத்திற்கு வந்து என் தகப்பனாருடன் உல்லாசமாகப் பேசிவிட்டுப் போவதும் உண்டு.

சுந்தர்: காதலின் பாதை கற்களும் முட்களும் நிறைந்தது என்பார்கள்!

மோகினி: ஆம்...... அவர் வந்த பாதை அப்படியேதானிருந்தது. என் விஷயத்தில் அது முற்றிலும் உண்மை. சில இரவுகளில் இந்த ஆலமரத்தடியில் நான் என் காதலரை எவ்வளவு தடவை சந்தித்திருக்கிறேன்?

[ பெருமூச்சு — நிசப்தம் 5 விநாடி ]

சுந்தர்: அதன்பின் என்ன நடந்தது?

மோகினி: இதேபோல் ஒரு வளர் பிறை நாள். எங்கள் குல தேவதைக்குப் பலி கொடுத்து மகிழும் நாள். இந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் அந்த விழாவைப் பார்க்க வந்திருந்தார்கள்.

சுந்தர் : உன் காதலனும் வந்திருந்தானா?

மோகினி : ஆம் ! உண்டு களித்த பின் எனது நாட்டியம் ஆரம்பமாயிற்று. என்னைச் சுற்றிலும் ஜனங்கள் திரளாக உட்கார்ந்திருந்தார்கள். அவரும் முன் வரிசையில் சிரித்த முகத்துடனிருந்தார். எனக்கு ஒரே உற்சாகம்! பாடினேன்; ஆடினேன். பம்பரம் போல் சுழன்று வந்தேன். என் ஆயுளிலே அன்று போல் நடனமாடியதில்லை. அன்று போல் மனம் பூரித்திருந்ததில்லை. அவர் கரகோஷம் செய்யச் செய்ய என் உற்சாகம் எல்லை மீறிப் பொங்கியது. அதனால் தானோ என்னவோ, என் கால்கள் தளர்ச்சி யடைய, இடறி என் காதலர் மேல் விழுந்து விட்டேன். அவர் அப்படியே என்னை அன்புடன் அணைத்துக் கொண்டார். நான் மெய்ம்மறந்து விட்டேன். ஏற்பட்ட குதூகலத்தில் மயங்கியும் விட்டேன்.

சுந்தர் : பின் என்ன நடந்தது?

மோகினி : மறுபடியும் கண் விழித்துப் பார்க்கும் போது கூடாரத்தில் படுத்திருப்பதாக அறிந்தேன். என் பக்கத்தில் என் தகப்பனார் உட்கார்ந்திருந்தார். அவர் முகம் எவ்வளவு விகாரமடைந்திருந்தது? அதில் எவ்வளவு ஆங்காரம்? என்றும் அவரை அவ்வளவு கோபத்துடன் கண்டதே இல்லை.

சுந்தர் : உன் காதல் விஷயத்தை ஊகித்துக் கொண்டானா?

மோகினி : என்னவோ? அவர் மௌனம் எனக்குப் பயத்தையே கொடுத்தது.

சுந்தர் : சந்தேகப்பட்டான் போலும்!

மோகினி : இரவு மணி மூன்று இருக்கும். எனக்குத் தூக்கம் வரவில்லை. அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னை வருத்திக் கொண்டிருந்தது. கூடாரத்திற்கு வெளியே வந்தேன். பால் போல நிலவில் பகல் போல இருந்தது குளக்கரை. ஆலமரத்தின் பக்கம் பார்த்தேன். அங்கு.........

சுந்தர் : உன் காதலனா?

மோகினி : ஆம்! நின்று கொண்டிருந்தார். ஓடினேன் அவரிடம். உணர்ச்சி மிகுதியால் அவரைத் தழுவிக் கொண்டேன். 'மோகினி! என் இன்பமே! என் கண்ணின் ஒளியே! உன் நடனத்துக்கு நான் அடிமையானேன். அதைவிட ஆயிரம் மடங்கு உன்னை நேசிக்கிறேன், மோகினி!' என்று என் மனம் குளிர அவர் கூறினார். திடீரென யாரோ வரும் சத்தம் கேட்டது.

சுந்தர் : வந்தது யார்?

மோகினி : என் விதி தான்!......என் தகப்பன் உருவில் அங்கு வந்தது. என் காதலரைச் சட்டென்று ஓட்டினேன். என் பலவந்தத்தால் அவர் ஓடினார். ஏங்கிய மனதுடன் திரும்பினேன். என் தகப்பனார் என் முன்னால் நிற்பதைப் பார்த்தேன்.

சுந்தர் : அவன் என்ன சொன்னான்?

மோகினி: கொஞ்ச நேரம் அப்படியே என்னை விழுங்கி விடுபவர் போல் பார்த்தார். "மோகினி! குலத்தின் மானத்தைப் போக்கி விட்டாய்!" என்று காடே கிடு கிடுக்கும்படிக் கதறினர்.

சுந்தர்: ம்......?

மோகினி: என் கைகால்கள் நடுங்கின. என்னை மன்னிக் கும்படி மன்றாடினேன். ஆனால் என் வார்த்தை களுக்கு அவர் செவி சாய்த்தால் தானே?

சுந்தர்: பெற்றோர்களே இப்படித்தான்!......

மோகினி: நானிருப்பதை விட இறப்பது மேல் என்றார். நான் அழுதேன். அலறினேன். காலில் வீழ்ந்தேன். ஆனால், அவருக்கு இரக்கம் பிறக்கவில்லை.

சுந்தர்: நீ செய்த பிழைதான் என்ன?

மோகினி: "குலத்தின் மானத்தைப் போக்கிய நீ அந்த மானத்துடனே அழிந்து போ!" என்று சொல்லிக் கொண்டே, திடீரென்று கையில் வைத்திருந்த நரி அடிக்கும் குண்டாந்தடியால் ஓங்கி என் தலையில் அடித்தார். அவ்வளவுதான். நான் எப்படி மானத் தைப் போக்கினேன் என்று கேட்க நான் பிழைத் திருக்கவில்லை. என்னுடலை இந்த ஆலமரத்தடியில் புதைத்து விட்டார்கள். விடியுமுன் எல்லா நரிக் குற வர்களும் கூடாரங்களைப் பிரித்து இக்கிராமத்தை விட்டுப் போய் விட்டார்கள்.

சுந்தர்: படுபாவிப் பயல்கள்! பெற்ற பிள்ளையைக் கொன்ற பாதகன்!

மோகினி: எய்தவனிருக்க அம்பை நோவதேன்? என்னவோ என்னுடைய பொல்லாத காலம்! எவ்வளவு வேடிக்கை விளையாட்டுடன் நடனத்தைக் கற்றேன். அதன் விளையல்லவா இது?

சுந்தர்: உன் தந்தையின் முரட்டுத் தனத்திற்கு அது என்ன செய்யும்? உன் வாழ்க்கை மண்ணிலே பிறந்து மண்ணிலே மடியும் மலரைப் போலாகி விட்டது! அது சரி......! உன் காதலனைப் பற்றி ஏதாவது உனக்குத் தெரியுமா?

மோகினி: மறுநாள் எங்கள் கூட்டமே போய்விட்டதை அறிந்து அவர் பெரும் ஏமாற்றமடைந்தார். சிறிது நாள் சென்று இரவு நேரங்களில் இந்த மரத்தடியில் வந்து கண்ணீர் விட்டுப் புலம்பினர்...... ஆனல் அழுது என்ன பயன்?

சுந்தர்: பாவம்! உன்னைப்பற்றி என்னென்ன எண்ணி ஏங்கினுரே?

மோகினி: ஒரு வருடம் கழிந்தது. என்னுடைய ஞாபகமும் அவர் மனதை விட்டு அகன்றது. ஒரு பெண்ணை மணந்து கொண்டார். இன்னும் இவ்வூரில் தான் இருக்கிருர்.

சுந்தர்: மோகினி! அவர் யார்?

மோகினி: அவர்......உன்......தகப்.......பனார்... தான்!

சுந்தர்: ஆ!......என்.......தகப்...பனாரா? ......மோகினி

[கீழே விழுகிறான்.] [சதங்கையின் மெல்லிய ஒலி]

முத்து: அடபாவி! பார்த்தீர்களா? நான் போக வேண்டாமென்று எவ்வளவோ தடுத்தும்......மோகினி அடித்து விட்டதோ?......... கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்களேன்.........டேய்! சுந்தர்...... சுந்தர்..........



# 5. சோக நக்ஷத்திரம்

*கோமதிஸ்வாமிநாதன்*

(இதில் பெயரும் சம்பவங்களும் முழு கற்பனை)

சந்திரகலா: ஒரு காலத்தில் பூர்ண சந்திரனாக ஜ்வலித்து இப்போது கிருஷ்ணபக்ஷ சந்திரனாக ஆகிக்கொண்டு வரும் ஒரு சினிமா நக்ஷத்திரம்.

சம்பூர்ணம்: சந்திரகலாவின் தாயார்.

சங்கரன்: சந்திரகலாவின் சகோதரன்.

[சந்திரகலாவின் வீடு: (பங்களா!). மாலை வேளை சோகமே உருக்கொண்டு சோபாவில் உட்கார்ந்திருக்கிறாள். சந்திரகலா சமீபத்தில் சம்பூர்ணம். வெற்றிலை பாக்கிற்கும் பொக்கை வாய்க்கும் உள்ள சம்பந்தத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறாள். சங்கரன் திண்ணையில் ஏதோ பழைய பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.]

சம்பூர்ணம்: சந்திரா! இதோ பார் அம்மா! எழுந்திருந்து போய் முகத்தை அலம்பிக் கொண்டு நன்றாக டிரஸ் செய்து கொண்டு வந்து உட்கார். திடீரென்று பட முதலாளிகள் யாரும் வந்தால் என்னவாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்.

சந்திரகலா: முகத்தை அலம்பிப் பிரயோஜனமில்லை. பவுடர் டப்பா நேற்றோடு காலி. அதோடு மணிபர்சும் காலி. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. கிராமத்தைப் பார்க்கப் போய் விடலாமா என்று தோன்றுகிறது.

சம்பூர்ணம் : சினிமா ராணி சந்திரகலாவா இப்படிப் பேசுவது! மனதைத் தளர விடாதே! முந்தா நாள் யாரோ ஸ்டுடியோக்காரங்க வந்திருந்ததாக சங்கரன் சொன்ஞனே.

சந்திரகலா : பிரமாதமா கதாநாயகியின் தாயார் வேஷத்திற்கு என்னை அமர்த்த வந்திருந்தார்கள். நாலு படத்தில் கதாநாயகியாக ஆக்ட் செய்துவிட்டு இந்தப் படத்திற்கு நான் ஒப்புக்கொண்டால் நாளைக்கே கதாநாயகனின் பாட்டி வேஷத்திற்கு என்னைக் கூப்பிட வந்து விடுவார்கள். ஆகையால் நான் சம்மதிக்கவில்லை.

சம்பூர்ணம் : குல்மால் ஸ்டுடியோ டைரக்டர் அன்றைக்கு தேஞெழுக பேசிவிட்டுப் போஞரே, ஏதாவது சமாசாரம் தெரிந்ததா பிறகு.

சந்திரகலா : அடடா! அந்த சமாசாரத்தை உன்னிடம் சொல்ல மறந்து போய்விட்டேனே! நாரதர் ஆக்டுக்கு வருகிருயா? என்று கேட்டிருந்தார். எனக்கு அந்த பார்ட்டைக்-கொடுத்து அதோடே சினிமா உலகத்திலிருந்தே வெளியே அனுப்பிச்சுடலாம் என்று நினைத்துவிட்டார் போலிருக்கிறது. நல்ல வேளை அவர் சூழ்ச்சியில் நான் சிக்கவில்லை.

சம்பூர்ணம் : என்னென்ன எண்ணங்களையோ மனதில் வைத்துக் கொண்டு வரர சான்ஸ்களையெல்லாம் விட்டு விடுகிருய். அதஞல் சமயங்களில் பேஸ் பவுடர் வாங்கக் கூட துட்டு இல்லாமல் திண்டாட வேண்டி இருக்கிறது.

சந்திரகலா: நமக்கு விளம்பரமே போதாது அம்மா! அன்றைக்கு ஒரு சினிமாப் பத்திரிகையில் "நக்ஷத்திரம் சந்திரகலாவை வெள்ளித் திரையில் காணோமே" என்று ஒருவர் கேட்டிருந்தார். அதற்கு ஆசிரியர், "நக்ஷத்திரம் மேகத்தால் மறைக்கப் பட்டிருக்கிறது" என்று பதிலளித்திருந்தார். இதெல்லாம் விளம்பரமில்லாததால் தான்.

சம்பூர்ணம்: நான் சொல்வதையும் கேட்க மாட்டேன் என்கிறாய். இன்னும் கூட அந்தப் பருத்திக்கொட்டை கம்பெனிக்காரர்கள் உன்னிடம் ஓர் சிபாரிசு கடிதம் கேட்கிறார்கள். நீ சம்மதித்தால் ஒரு இரு நூறு ரூபாயாவது கிடைக்கும். விளம்பரமும் லாபம்.

சந்திரகலா: "எங்கள் வீட்டு எருமை மாடு உங்கள் கம்பெனி பருத்திக் கொட்டையைத் தான் தின்கிறது" என்று எழுதிக் கொடுக்க வேண்டுமாக்கும். அத்துடன் என் போட்டோ ஒன்றும் கொடுக்க வேண்டும் இல்லையா?

சம்பூர்ணம்: ஆமாம். அவர்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் 'பிரபல நக்ஷத்திரம் சந்திரகலா சொல்வதைக் கேளுங்கள். அவர் வீட்டு எருமை மாட்டிற்கு எங்கள் கம்பெனி பருத்திக் கொட்டையைத் தவிர வேறொன்றும் பிடிக்காதாம்' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி உன் போட்டோவையும் போடுவார்கள்.

சந்திரகலா: எருமை மாட்டின் போட்டோவை கேட்க மாட்டார்களே!

சம்பூர்ணம் : நான் சொல்வது உனக்கு கேலியாகத்தான் இருக்கும். நான் அனுபவத்தினுல் பேசுகிறேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

சந்திரகலா : அதற்குக்கூட கைவசம் நல்ல போட்டோ ஒன்று மில்லையே. பகவானே கருணைபுரிய வேண்டும்! [கண்களிலிருந்து இரண்டு சொட்டு நிஜக் கண்ணீர் கிளிசரைன் மாதிரியே கன்னங்களில் வழிகின்றது]

சம்பூர்ணம் : இப்போ பட முதலாளிகள் உன்னைப் பார்த்தால் சோக ரசமான ஆக்டிற்கு அப்படியே தூக்கிக் கிட்டுப் போயிடுவாங்க. ஒரு சீதை, சந்திரமதி, துரோபதை, நல்லதங்காள் இந்த மாதிரி ஒரு கதைக்கு உன்னை கதாநாயகியாக அமர்த்தினுல் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்.

சந்திரகலா : (கண்களைத் துடைத்துக் கொண்டு) இப்போதெல்லாம் புராணக் கதைகளுக்கு காலமில்லை. சோக ரசத்திற்கு இடமில்லை. எல்லாம் காமிக் தான். ஹாஸ்யமாக நடிக்கத் தெரியவில்லை என்ருல் படத்திற்கே லாயக்கில்லை என்று தள்ளி விடுகிருர்கள். நான் தீர்மானித்து விட்டேன். இந்த நிமிஷ முதல் யார் கூப்பிட்டாலும் புராணக் கதைகளில் நடிக்கவோ சோக ரசமான பாகங்களை ஏற்கவோ நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. சோக பாகங்களை நடிக்கவே தெரியாதென்று சாதித்துவிட வேண்டும்.

சம்பூர்ணம் : அப்படியாவது நல்ல சான்ஸ்கள் வரட்டும்.

[சங்கரன் வருகிருன்]

சங்கரன் : அக்கா! யாரோ பேப்பர்க்காரராம்! உன்

ளைப் பார்க்க வேண்டுமென்று சொல்ரார். வரச் சொல்லட்டுமா?

சம்பூர்ணம் : சந்திரா! சீக்கிரம் எழுந்திருந்து தலையை வாரிக் கொண்டு வா. ஒன்றையும் விட்டுக் கொடுக்காமல் கெத்தாகவே பேசு. சங்கரா! அந்த ஐயாவை ஒரு நிமிஷம் நிற்கச் சொல்.

[சில நிமிஷங்களில் சந்திரகலா புன்னகை பூத்த முகமாக சோபாவில் வந்து உட்காருகிருள். பத்திரிகைக் கார சதாநந்தமும்கூட ஒருவரும் உள்ளே வருகிருர்கள்]

சந்திரகலா : வாருங்கள்! நமஸ்காரம்! உட்காருங்கள்.
( இருவரும் உட்காருகிருர்கள் )

சதானந்தம் : நான் 'சங்கீத சாகரம்' பத்திரிகையின் பிரத்யேக நிருபர். உங்களைப் பேட்டி காணலாமென்று வந்தேன். கூட இருப்பவர் என் ஆப்த நண்பர். சர்மா என்று பெயர்.

சந்திரகலா: மிகவும் சந்தோஷம்! சங்கரா! போய் டீ கொண்டு வரச் சொல்.

[சங்கரன் போகவில்லை]

சதானந்தம் : வேண்டாம். வேண்டாம். இப்போதுதான் காப்பி சாப்பிட்டோம். உங்களுக்கு புராணக் கதைகள் பிடிக்குமா? நவீனக் கதைகள் பிடிக்குமா?

சந்திரகலா : புராணக் குப்பைகளை கண்டாலே எனக்குப் பிடிக்காது சார்! நல்ல நவீனமாகவோ சோஷல் கதைகளாகவோ, ஆங்கில தழுவல் களாகவோ, இருந்தால் தான் எனக்குப் பிடிக்கும்.

சதானந்தம் : முன் ஏதோ புராணப் படங்களில் நடித்திருக்கிறீர்களே ?

சந்திரகலா : தெரியாத்தனமாக ஒப்புக்கொண்டு விட்டேன். பிறகு என்ன செய்வது?

சதானந்தம் : இப்போது ஏதும் அது மாதிரி சான்ஸ் வந்தால் ஒப்புக் கொள்ள மாட்டீர்களா ?

சந்திரகலா : ஒப்புக்கொள்ள மாட்டேன். பிடிக்காத விஷயத்தில் உணர்ச்சியுடன் நடிக்க முடியாதல்லவா ?

சதானந்தம் : நவீனங்களிலும் உங்களுக்கு ஹாஸ்யம் பிடிக்குமா ? அல்லது சோகம் பிடிக்குமா ?

சந்திரகலா : சந்தேகமில்லாமல் ஹாஸ்யம் தான். சோகத்திற்கு இருந்த மோகம் இப்போது போய்விட்டதே !

சர்மா : இப்போது உங்களை ஹரிச்சந்திராவில் சந்திரமதியாக நடிக்கக் கூப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒப்புக் கொள்வீர்களா !

சந்திரகலா : மாட்டவே மாட்டேன் ?

சர்மா : உங்கள் முக வெட்டுக்காக ஓர் பெரிய தொகை கொடுக்க முன் வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது ?

சந்திரகலா : நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே. சோக ரசத்தை நான் விரும்புவதில்லை. விருப்பமில்லாத விஷயத்தில் உணர்ச்சி ஏற்படாது.

சதானந்தம் : நீங்கள் ஒருவர்தான் உண்மையாக கலைக்குப் பாடுபடுகிறீர்கள். கலாபிமானி என்றால் நீங்கள்

தான். மற்றவர்களைப் போல், எல்லா வற்றிற்கும் தயார் என்று சொல்லி பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் தெளிவான அபிப்ராயங்களை வெளியிடுகிறீர்கள். நீங்கள் புகழேணியில் மேலும் மேலும் ஏற வேண்டுமென்று என் அவா.

[இந்த சமயத்தில் சர்மா எழுந்திருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியே போகிறார்.]

சந்திரகலா: உங்களிடம் விவரமாய் பேசினால்தானே எங்களுக்கு விளம்பரம். இந்த ரகஸ்யம் கூட தெரியாதா?

சதானந்தம்: இப்போது என் கூட வந்திருந்தாரே, அவர் யார் தெரியுமோ ?

சந்திரகலா: தெரியாதே ! உங்கள் கூட பத்திரிகை நிர்வாகத்தில் இருக்கிறாரோ ?

சதானந்தம்: அவர் அடாதுடி ஸ்டூடியோவின் நிர்வாஹஸ்தர். புராணக் கதைகளில் மிகவும் நம்பிக்கை உள்ளவர். ஹரிச்சந்திரா படம் தயாரிக்க வேண்டும். சந்திரமதி பார்ட்டுக்கு சரியான நடிகை வேண்டு மென்றார். நான் உங்கள் பெயரைச் சொன்னேன். நேரில் உங்களைச் சந்தித்து உங்கள் அந்தரங்க அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டுதான் சமாச்சாரத்தை வெளியிட வேண்டு மென்றார். அதற்காகத்தான் நாங்கள் இருவரும் வந்தோம். நீங்கள்தான் சோக ரசமும் புராணக் கதைகளும் கொஞ்சம் கூடப் பிடிக்காதென்று சொல்லி விட்டீர்களே. நீங்கள் மாத்திரம் ஒப்புக் கொண்டிருந்தால் ஒரு விநாடியில் பதினாயிரம் ரூபாய் கிடைத்திருக்கும்.

[சந்திரகலா மயக்கமுற்று கீழே விழுகிறாள்.]

# 6. மன்னிப்பு

*பி. எக்ஸ். ரங்கசாமி*

கணவன் : அவ்வளவு கவனமாய் எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய், சாந்தா?......

மனைவி : இங்கே வந்து பாருங்களேன் ?

கணவன் : அப்படி என்ன இருக்கிறது பார்ப்பதற்கு?

மனைவி : அதோ முற்றத்தில் அடுத்த வீட்டு மீனுவைப் பாருங்கள்!

கணவன் : ஆஹா !...எவ்வளவு ஆனந்தமான காட்சி...!

மனைவி : அவளுடைய பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவும் போது அவள் முகத்தில் எவ்வளவு பெருமிதம்! ...... எவ்வளவு கர்வம் !......

கணவன் : குழந்தைகள் முகத்தில் எவ்வளவு கபடமின்மை! ......குதூகலம்...விதம் விதமாக குழந்தைகளுக்கு ஆடைகளுடுத்தி...ம்...பார்க்கும் காட்சியே இப்படி ரம்மியமாக இருந்தால்......உரிமையுடன்...கொஞ்சிக் குலாவும் பாக்கியம் கிடைத்தால்......ம்....எல்லாம் அவள் குழந்தைகளா?

மனைவி : ஆமாம் !......ஆறு குழந்தைகள் ! அவைகள் விளையாடுவதுதான் எவ்வளவு உல்லாசமாக......

கணவன் : [பெருமூச்சு] அவள் கொடுத்து வைத்தவள் ! நம்மைத்தான் ஆண்டவன் இப்படி ஏங்க வைத்து

---

திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பப் பட்டது நிலைய அனுமதியுடன் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

விட்டான். குழந்தைகளின் மழலைச் சொற்களின் இன்பம் நமக்குக் கொடுத்து வைக்கவில்லை......

மனைவி: நம் வாழ்க்கை என்ன வாழ்க்கை......ம் [பெரு மூச்சுடன்] சாரமற்றது தான்......

கணவன்: அதோ! நமது தோட்டத்திலிருக்கும் காகத்தைத்தான் பாரேன்! அதற்கும் கூட மூன்று குஞ்சுகள்!......தொழுவத்தில் உள்ள பசுவிடம் அதன் கன்று அம்மா வென்று கதறிக்கொண்டு போகிறது ......ஆனால்......

மனைவி: தன் சேயின் குரலைக் கேட்டதும் தாய் எவ்வளவு கனிவுடன்

கணவன்: இயற்கை எங்கும் இப்படித்தானே இருக்கிறது! நாம் மட்டும் விதிவிலக்கா......[பெருமூச்சு]

மனைவி: [வருத்தமாக] நம்மதிருஷ்டம்!...விதியைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.........[பிச்சைக்காரி- அம்மா!...கொஞ்சம் கஞ்சி ஊத்துங்கோ! ...பிள்ளை குட்டிகள் பட்டினியாய்க் கிடக்குது, அம்மா!]

கணவன்: சாந்தா!......இந்தப் பிச்சைக்காரிக்கு!......

மனைவி: இப்படிக் கஞ்சிக்குக் கெஞ்சிக் கூத்தாடும் ஏழைக்கு எழெட்டுக் குழந்தைகள்!......

கணவன்: செல்வத்தில் திளைக்கும் நமக்கோ?......பேர் சொல்லக்கூட ஒரு குழந்தை கிடையாது............ ஆண்டவன் சோதனை இவ்வளவு கடுமையானதா?...

மனைவி: உலகத்தில் அநேகமாய் இப்படித் தானிருக்கிறது பணக்காரர்கள் குழந்தை இல்லாமல் ஏங்கிக் கொண்

டிருக்கிறார்கள்! ஏழைகள் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாது தவிக்கிறார்கள்......

பிச்சை: அம்மா!......தாயே! பிச்சை போடுங்கோ உங்க தங்கக் கையாலே!

கணவன்: இந்தா! இப்படிவா! உன் குழந்தைக் கெல்லாம் சாப்பாடு சரியாய்க் கிடைக்குதா?

பிச்சை: ஏனுங்க?........இப்படி அப்படித்தான்! என் அக்கா ஒருத்தி இருக்கா! கொஞ்சம் நல்ல நெலமை... அவகிட்டே ரெண்டு கொழுந்தையைக் கொடுத் திட்டும் திண்டாடுறேன்......

மனைவி: ஏன் கொடுத்தே?

பிச்சை: அவளுக்குக் கொழந்தை இல்லே!......அம்மா! கொஞ்சம் சீக்கிரம் போட்டா........நாலு வீடு பார்க்கலாம்......

கணவன்: டேய், முனியா! இவனுக்கு ஏதாவது போட் டனுப்பு!

பிச்சை: [தாமதம்] மகாராசனா இருங்க......ராஜா மாதிரி ஒரு கொழந்தை பிறக்கும்...நான் போறேனுங்கோ!

கணவன்: [திடீரென்று] எனக்கு ஒரு யோசனை........

மனைவி: என்ன?

கணவன்: ஒரு குழந்தையை நாம் எடுத்து வளர்த்தால் என்ன? சொந்தக் குழந்தையைக் கொஞ்சி அடையும் இன்பத்திலே, நூறில் ஒரு பங்கு இன்பமாவது ஏற்படாதா?......

மனைவி : நானும் இப்படி நினைத்தேன்!......

கணவன் : சொல்லவே இல்லையே !

மனைவி : எல்லாம் பயந்தான்!....நீங்கள் என்ன சொல்வீர்களோ.........

கணவன் : உன் தங்கை கமலாவிற்கு ஐந்து குழந்தைகள் !......அவைகளில் ஒன்றை நாம் ஸ்வீகாரமாய் எடுத்துக் கொண்டால் என்ன?

மனைவி : அப்படியே செய்யலாம்!...அவளும் புருஷனின் குறைந்த வருமானத்தில் குடும்பத்தை நடத்த முடியாமல் திணறுகிருள்! நாம் இப்படிச் செய்தால் அவர்களை கைதூக்கி விட்டமாதிரியும் இருக்கும்.

கணவன் : அவள் சந்தோஷமாக ஒப்புக் கொள்வாளா?

மனைவி : பாக்யமாகவே கருதுவாள்? ...கடைசிக் குட்டி கல்யாணி தான் ! அது மூக்கும் முழியுமாய் அழகாய் இருக்கிறது. என் மேல் அதற்கு உயிர்......

கணவன் : சரி!......கமலாவிற்கு இன்றே கடிதமெழுதி முடிவு செய்து கொள்வோம். குழந்தை இல்லாத வீட்டில் நிஜமான இன்பம் ஏது? ஹூம்............... [பெருமூச்சு]

[காட்சி மாற்றம்]

கணவன் : சாந்தா! ஏன் இப்படி இருக்கிருய்?......

மனைவி : என் மேலெல்லாம் காய்கிறது.........மண்டை இடிக்கிறது...தலை சுற்றுகிறதே?......

கணவன் : அடேடே !.........அனலாகக் கொதிக்கிறதே! முன்னமே ஏன் சொல்லவில்லை

மனைவி : சாயந்திரம் வரை ஒன்றுமில்லை !......இப்போது தான் திடீரென்று......

கணவன் : இரு......லேடி டாக்டரைக் கூப்பிடுகிறேன், கொஞ்சம் நிம்மதியாய்ப் படு. அவள் வந்து ஒரு 'டோஸ்' கொடுத்தால் சரியாகி விடும் [டெலிபோன் மணி ஒலித்தல்] ஹலோ.......யார் பேசறது? லேடி டாக்டரா?......நான் தான் வைரவன்............என் மனைவிக்குத் திடீரென்று காய்ச்சல் !......தயவு செய்து உடனே வாருங்கள் !......'புஷ்பவனம்' ஆம் அந்த வீடு தான் !......

[தாமதம்]

கணவன் : எப்படி இருக்கிறது?

லேடி : அட......103 டிகிரி டெம்பரேச்சர்!

கணவன் : ரொம்ப ஸீரியஸா?

லேடி : அப்படி ஒன்றுமில்லை!......மிகவும் பலவீனமாய் இருக்கிறார்கள் !.........மருந்து கொடுக்கிறேன். இப்போது ஒரு தடவையும் ஒரு மணி நேரம் கழித்து மற்றொரு தடவையும் கொடுங்கள், நாளை காலை நான் வருகிறேன்.

கணவன் : இதில் ஒன்றும் பயப்பட......

லேடி : இல்லை ! இல்லை! எல்லாம் சரியாகிவிடும், போய் வரட்டுமா?

கணவன் : ரொம்ப 'தாங்க்ஸ்' ......தயவு செய்து நன்ருய்க் கவனிக்க வேண்டும்!

லேடி ; [சிரித்து] மீன் குஞ்சு நன்ருக நீந்த வேண்டுமென்று கவலையா?

[வாய்விட்டுச் சிரிக்கிருள் — சிரிப்பு தேய்ந்து மறைகிறது]

[ நாமதும் ]

மனைவி : அப்பா !...... அம்...மா !

கணவ : சாந்தா !.....................சாந்தா !..............

மனைவி : எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது !...

கணவ : சாந்தா, ஒன்றுமில்லை. வெறும் காய்ச்சல்தான் ! உடலை அலட்டாமல் சும்மா படுத்துக்கொள்.

மனைவி : லேடி டாக்டர் என்ன சொன்ஞள் ?

கணவ : வெறும் ஜுரம்தாஞம் ! இரண்டொரு நாட்களில் தானே குணமாகி விடுமாம்!.......

மனைவி : அப்பா! உடம்பெல்லாம் வெட்டி எடுக்கிறதே!......

கணவ : சாந்தா!...பயந்தான் நோயின் பெரிய விரோதி!... அலட்டிக் கொள்ளாமல் நிம்மதியாய்த் தூங்கு.

[ காட்சி மாற்றம் ]

லேடி : என்ன ?........மிஸ்டர் வைரவன் ! என் வீடு தேடியே வந்து விட்டீர்களா ?

கணவ : ஆமாம் !...... வீட்டில்......

லேடி : வீட்டில் தங்கள் மனைவி சௌக்கியந்தானே ?

கணவ: இன்று இருபத்தைந்து நாட்களாகியும் சரியான குணமில்லையே! மனதுக்கு மிகவும் சஞ்சலமாக இருக்கிறது!......

லேடி: இப்படி அவசரப் படலாமா? சில 'டைபாய்டு' கேஸ்கள் குணமாக 40 நாட்கள் கூட ஆகும். கொஞ்சம் கொஞ்சமாகத் தானே குணம் ஏற்படும்.

கணவ: என்ன 40 நாட்களா?...... அவள் மிகவும் கஷ்டப் படுகிறாளே?.........

லேடி: அவர்கள் மாத்திரந்தானா?......நீங்களும் தான்... சரி!...தங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமென்று மூன்று நாட்களுக்கு முன்பே நினைத்தேன்! மறந்து விட்டேன்.........

கணவ: என்ன?

லேடி: தங்களுக்குக் குழந்தைகள் கிடையாதா?

கணவ: அந்தப் பாக்கியத்தை ஆண்டவன் எனக்கு மறுத்து விட்டான். என் மனைவி தங்கையின் குழந்தை களிலொன்றை வீட்டோடு அழைத்துவரச் சொல்லி யிருந்தோம்!...அதற்குள் இவள் படுத்து விட்டாள்.

லேடி: இது போன்ற சந்தர்ப்பத்தில் ஒரு குழந்தை இருந்தால் தங்களுக்கு எவ்வளவோ ஆறுதலாய் இருக்கும்!...... என்னமோ கடவுள் சித்தம்!......

கணவ: [ பெருமூச்சு ]

லேடி: அதற்காக நீங்கள் சதா வருந்துவது சரியல்ல!...

கணவ: தங்களிடம் என் மனதைச் சொல்வதற்கென்ன?

வாழ்க்கை எனக்கு மிகவும் வெறுத்து விட்டது. பெரிய சலிப்பும் ஏற்பட்டு விட்டது.

லேடி : ஏற்படாமல் என்ன செய்யும்?

கணவ : மேலும் அடிக்கடி சாந்தாவும் நோய்வாய்ப்பட்டு என் சந்தோஷத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

லேடி : எல்லாமிருந்தும் இப்படித் துன்பப் படுகிறீர்கள்! உலகத்திலே இப்படித்தான்!......நீங்கள் தான்......

கணவ : என்ன சொல்கிறீர்கள் ?

லேடி : ஒன்று......மி...ல்...லே

கணவ : என்னவோ சொல்ல ஆரம்பித்தீர்களே ?

லேடி : ஏதோ நினைத்தேன்; வாய் தவறி வெளியே வந்து விட்டது.

கணவ : என்னவென்று சொல்லக் கூடாதா ?

லேடி : உங்கள் விஷயத்தைப் பற்றியது தான்......ம்... ஒன்றுமில்லே... தாங்கள் பிரியப்பட்டால்...... இன்னொரு விவா......க...ம் செய்து கொள்ள...லா....ம் என்று என் மனம்...எண்ணியது ... எவ்வளவு விசித்திரமான......, யோசனை!

கணவ : இதில் விசித்திரம் என்ன ? சாதாரணமாக உலகில் நடக்கக் கூடியதுதானே?... ஆனால்......சாந்தா ......இருக்கும்போது?......

லேடி : பார்த்தீர்களா? இதனால்தான் நான் சொல்ல மறுத்தேன்.

கணவ: சாந்தா......இருந்தால்தான் என்ன? அதற்காக என் சுகத்தையும் இன்பத்தையும் தியாகம் செய்வதா?

லேடி: நான் வேறு விதமாகச் சொல்வதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. இரண்டாம் மணம் செய்து கொள்வதால், அதுவும் முதல் மனைவி சாந்தா நோய் வாய்ப் பட்டிருப்பதை முன்னிட்டு......அது அவ்வளவு தவறானது என்று கருதுகிறீர்கள்?......

கணவ: நானும் எத்தனையோ தடவைகளில் இப்படி யோசித்து விட்டுத்தான்......ஏதோ வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டு போகிறேன்.

லேடி: [சிரித்து] வாழ்க்கை வாழ்வதற்குத் தானே?...

கணவ: உண்மை... உலகத்தில் எதுதான் நம் விருப்பப் படி நடக்கிறது?

லேடி: [சிரித்து] நடக்காது!... நடக்கும்படி நாம் செய்துகொள்ள வேண்டும்!.........ஆமாம்!...... நம் வாழ்வை நாமே நிர்ணயிக்க வேண்டும்!...

[காட்சி மாற்றம்]

கணவ: [மெதுவாக] வாழ்க்கை வாழ்வதற்கே...... நடக்காது!...நடக்கும்படி செய்ய வேண்டும், நாம்! நம் வாழ்வை நாமே நிர்ணயிக்க வேண்டும்......

மனைவி: என்ன? என்னவோ தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறீர்களே?

கணவ: சாந்தா!... என்ன வேண்டும்?

மனைவி: உங்களுக்கு உடம்பு சுகமில்லையா?

கணவ : ஒன்றுமில்லையே ?......ஏன்

மனைவி : ஏதோ ஒரு மாதிரி காணப்படுகிறீர்களே ?...

கணவ : அதெல்லாம் ஒன்றுமில்லை...

மனைவி : மன நிம்மதி இல்லாதது போல......

கணவ : வீணாக அலட்டிக் கொள்ளாதே......

மனைவி : நேற்று நீங்கள் எங்கு போயிருந்தீர்கள் ?......

கணவ : டாக்டருக்குப் பிறந்த நாள்... அழைப்பு வந் திருந்தது ...போனேன்!

மனைவி : காலைமுதல் மாலை வரையில் வீட்டிலில்லையே...

கணவ : வீட்டில் இருந்தால் மனம் சஞ்சல மடைகிறது. அப்படியே போய்விட்டு வந்தேன்.

மனைவி : வியாதிக்காரியைப் போட்டு விட்டு விருந்துக்குப் போய் விட்டீர்களாக்கும் ?

கணவ : சாந்தா!...... அப்படி ஒன்றுமில்லை. என்னால் கூடியவரை உன்னை நன்றாய்த் தான் கவனித்து வரு கிறேன்......வீணாக ஏன் இப்படி...

மனைவி : என்னைப் பார்க்க வில்லை என்று நான் குறை கூறவில்லையே ? நீங்கள் பக்கத்தில் இருந்தால் சற்று ஆறுதலாய் இருக்கும். அவ்வளவுதானே!

கணவ : சாந்தா! உன்னை அலட்சியம் செய்வதாக எண் ணாதே! ...ஏதோ என் மன நிம்மதிக்காகக் கொஞ்சம் வெளியே சென்று வருகிறேன்...

மனைவி : வீட்டில் .தாங்களிப்போது நன்றாகச் சாப்பிடு கிறதுமில்லை!......முனிசாமி சொன்னான்.

கணவ: அதெல்லாம் ஒன்றுமில்லே!......அவன் முட்டாள் ......அவனுக்கென்ன தெரியும்?

மனைவி: எனக்கு உலகில் வேறு என்ன வேண்டும்?... உங்கள் சந்தோஷம்; உங்கள் மகிழ்ச்சி; உங்கள் மன நிம்மதி.

[காட்சி மாற்றம்]

முனி: எசமான்!...... லேடி டாக்டர் வந்திருக்கு!

கணவ: சரி! நீ போய் வண்டி மாடுகளைக் குளிப்பாட்டிக் கொண்டு வா.

முனி: எசமான் மாடுகளைக் குளுப்பாட்டவா?

கணவ: உம்! சீக்கிரம் போ! ......என்ன விழித்துக் கொண்டு நிற்கிறாய்?

முனி: காலையிலே தானே குளிப்பாட்டினேன்! ......

கணவ: துரை இன்னொரு தடவை செய்யக் கூடாதோ?

முனி: எசமான் ............ உத்தரவு.

[கதவை மெதுவாய் மூடும் ஓசை

லேடி: என்ன மிஸ்டர் .........?

கணவ: [மெதுவாக] அவள் விழித்துக் கொண்டிருக்கிறாள் ........ மெதுவாகப் பேசுங்கள் .........

லேடி: அப்படியானால் .........?

கணவ: என்ன யோசிக்கிறீர்கள்?

லேடி: நீங்கள் சொல்வது...............

கணவ: ஒருவித உதவி தங்களிடம் நாடி இருந்தேனே?...

லேடி : அவசியம் அப்படிச் செய்யத்தான் வேண்டுமா?...

கணவ : என் மனம் ஏனிப்படிப் பதறுகிறது ?

லேடி : விஷம் கொடுத்துத்தான் கொல்ல வேண்டும்......

கணவ : ஆ! ......... விஷ ... மா ? .........

லேடி : ஏன் ? ...... நீங்கள் தானே ஒரு வழி செய்ய வேண்டு மென்று ............

கணவ : என்னுல் முடியாது .......... முடியாது !

லேடி : அவசியமில்லை ! நான் வருகிறேன்.

கணவ : அப்படி என்ருல் என் வாழ்க்கையின் சுகம்...... ஓடி விளையாட வீட்டில் ஒரு குழந்தை வேண்டாமா ? ... ஆ! ... சரி! பயப்படாமல் கொடுத்து விடுங்கள் ......... அவள் துன்பப் படுவதைக் காட்டிலும் ... இறந்து விடுவது நல்லதல்லவா ? ...... ஆம் ! ......... நீங்கள் பயப்படாமல் கொடுத்து விடுங்கள்.

லேடி : அந்த வேலை என்னுல் முடியாது ! .... நீங்கள்தான் செய்ய வேண்டும் !

கணவ : உங்களுடைய கோழைத்தனம் எனக்கு ஆச்சரியமளிக்கிறது ! ......... ஒரு கொடுமையால் பிறருக்கு நன்மை ஏற்படுவதாக இருந்தால் ............ அதைச் செய்யக் கூடாதா ?

[கதவைத் தட்டும் சத்தம்]

கணவ : யார் அது ?

[கதவைத் திறக்கிருர்]

முனி : நான் தாங்க ! ......

கணவ : உன்னைப் போகச் சொல்லி எவ்வளவு நேரமா கிறது? .......

முனி : யாரோ ஒரு பெரிய டாக்டராம்! ... கார் அனுப்பி இருக்குது. உடனே இந்த அம்மாவை அழைச்சு வரணும்னு .........

லேடி : ஓ! ... மறந்தே போய் விட்டேன்! ...... ஏதோ அவசரமான கேஸுக்குப் போக வேண்டுமென்று டாக்டர் சொல்லி யிருந்தார்.

கணவ : அவ்வாருனால் ...... !

லேடி : [சிரித்து] அப்படியானல் ... ... அப்படியானல் என்ன? நான் போய்விட்டு உடனே திரும்புகிறேன்! ....... [தூரத்தில்] வந்து பார்க்கிறேன். ஒன்றும் அதைர்யப் பட வேண்டாம்!

[தாமதம்]

கணவ : [தடுமாற்றத்துடன்] சாந்தா! ...... என்னை அழைத்தது மாதிரி கேட்டதே! என்ன வேண்டும்?

மனைவி : இப்படி வந்து என்னருகில் உட்காருங்கள்! [பெருமூச்சு]

கணவ : ஏன் கண்ணீர் விடுகிருய்?

மனைவி : [துக்கத்தை அடக்கிய வாறு] கண்ணீரா......... இல்லையே!

கணவ : சாந்தா! கண் நிறைய நீர் நிரம்பி யிருக்கிறதே ?

மனைவி : ஒன்று மில்லை!......

கணவ : நீ இந்த நிலைமையில் அழுதால் உன் நிலை என்ன ஆகும்?

மனைவி: கண்ணீர் விடாமல் நான் என்ன செய்ய முடியும்? [பெருமூச்சு]

கணவ: ஏன்?

மனைவி: அந்த நிலைக்கு நீங்கள் வந்து விட்டீர்கள்! [பெருமூச்சு]

கணவ: சாந்தா.........நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே!

மனைவி: எப்படி விளங்கும்? தங்கள் மனந்தான் முற்றிலும் மாறிவிட்டதே!

கணவ: அப்படி ஒன்றுமில்லை, சாந்தா.........வீணாகக் கவலைப்படாதே.

மனைவி: தாங்கள் இப்படி இருப்பீர்கள் என்று நான் கனவிலும்......

கணவ: சாந்தா!......நீ என்ன சொல்கிறாய்?

மனைவி: நீங்களும் அந்த லேடி டாக்டரும் பேசிய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டுதான் படுத்திருந்தேன்... [அழுதவாறு] பதினைந்து வருடங்களுக்கு முன் என் மீது வைத்திருந்த அன்பு இப்போது எங்கு போய் விட்டது? இப்போது என்னைக் கொல்லவும் சம்மதித்து விட்டீர்களே!.........

கணவ: சாந்தா!........

மனைவி: அன்று அக்னி பகவான் சாட்சியாக என்னைக் கைப்பிடித்தவர்கள் நீங்கள் தான்! அம்மி மிதித்து அருந்ததியைக் காட்டினவர்களும் நீங்களே தான்! இந்த நிமிஷம் வரை என் இதய பீடத்தை அலங்

கரிப்பது, தங்கள் மீது நான் வைத்திருக்கும் பிரேமையின் தீபம்!......அது ஜுவாலை விட்டு எரிவது தங்கள் அன்பினால் அல்லவா?......

கணவ: சாந்தா......இப்படி வார்த்தைகளைச் சொல்லி என் மனதைப் புண் படுத்தாதே!

மனைவி: அத் தீபத்தை அணைக்க அந்த நாசகாரிக்கு என்ன உரிமை உண்டு?......நீங்களே அதை அணைத்து விடுங்கள்!

கணவ: சாந்தா!......இப்படியெல்லாம் எண்ணாதே!

மனைவி: என் துன்பங்கள் தொலையட்டும், நான் தங்களுக்குச் சொந்தம். தங்களுடைய அன்பினால் வாழ வேண்டியவள். அதில்லா விட்டால் சாதல் நலம்! தங்கள் கரத்தால் மடிவதற்கு நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

கணவ: சாந்தா!...... சாந்தா......

மனைவி: அவளை நம்ப வேண்டாம்! தூய அன்பு இன்னதென்று அறியாதவள்! பணமே பிரதானமாகக் கருதும் பாதகி!...... அவள்...... கணவனின் அன்பால் மனைவி வாழ வேண்டியவள் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? அவள் விஷப்பாம்பு! பாம்புடன் யார் விளையாடுவார்கள்?...... இன்று என்னைக் கொல்லுவாள்...... நாளைத் தங்களையும் அப்படியே தான்...

கணவ: ஹா!

மனைவி: அவள் இப்போது எங்கே சென்றாள்?

கணவ: டாக்டர் அவசரமாகக் கூப்பிட்டனுப்பியதால்...

மனைவி: உம்...... டாக்டர்!...... அவளுடைய வஞ்சக வலையில் அறிந்தும் விழுந்து மடிய வேண்டாம்! பிள்ளை யில்லை என்று தானே கவலைப்படுகிறீர்கள்?... நல்ல குடும்பப் பெண் ஒருத்தியை மணஞ் செய்து கொள்ளுங்கள்! ஆண்டவன் தங்களுக்கு அருள் புரிவார். நான் செய்த விரதங்கள் வீண் போகாது! நான் மறுபடியும் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள் கிறேன்...... நான் போன பின்னும் அவள் நட்பு வேண்டவே வேண்டாம்! என் வார்த்தைகளைத் தட்ட வேண்டாம். ஒன்றும் தெரியாது உங்களுக்கு. ஒரு கபடு, சூது, வாது ஏதாவது தெரியுமா? 15 வருஷங் களாகப் பழகியவள் நான். எனக்குத் தெரியும்......

கணவ: சாந்தா! ...... நான் நீசன்...... சண்டாளன்... பாதகன். மனித உருவத்தில் உன் முன் நிற்கும் பேய்!...... சாந்தா! அச் சதிகாரியின் மாய வலையில் சிக்கிய படித்த முட்டாள், நான் ...... சாந்தா!...... என்னை உன் மனப் பூர்வமாக மன்னித்து விடு. நான் நற்கதியடைய வேண்டும். சாந்தா...... சாந்தா

மனைவி: நீங்களல்லவோ என்னை மன்னிக்க வேண்டும்? ...... குழந்தை மழலைக்காக ஏங்கும் நீங்கள் உண்மை யாகவே என்னை மன்னிப்பதாக இருந்தால், நான் உங்களுக்காகத் தேர்ந்தெடுக்கும் பெண்ணை அவசி யம் நீங்கள் மணந்தாக வேண்டும்......... [சிரித்து] என்ன?......

கணவ: சாந்தா......

# 7. ஆசிரியர் அரங்கம்

*கோமதிஸ்வாமிநாதன்*

*[சிறு கதைச் சின்னச் சாமியும் ஹாஸ்ய ரச ஹாலாஸ்யமும் பேசிக் கொண்டிருக்கிருர்கள். கவிஞர் கண்ணுச்சாமி வருகிருர்]*

**கண்ணுச்சாமி :** (பாடுகிருர்)

வெய்யிலின் கொடுமை தன்னைத்
தையலே கேட்டிடாய் நீ
மலையான மருந்து தேய்த்தும்
தலை நோவு தீரக்காணும்.

**ஹாலாஸ்யம் :** ஓய்! இங்கே தையலுமில்லை; கிழிசலுமில்லை! என்ன! உமது கவி கரைபுரண்டு ஓடுகிறதைப் பார்த்தால், எலுமிச்சம் பழத்தால் தான் அணை போட வேண்டும் போலிருக்கிறது!

**கண்ணுச்சாமி :** கர்த்தபமறியுமா காப்பி வாசனை? உமக்குக் கவிதையை அனுபவிக்கத் தெரியுமாங்காணும்? எங்கேயாவது சினிமா நோட்டீஸிலே படம் போட்டிருந்தால், ஈ என்று பார்த்து இளித்துக் கொண்டிருப்பீர். ஏதாவது மாட்டு வண்டி குடம் சாய்ந்து மாடு ஆகாசத்தில் தொங்கிக் கொண்டிருந்தால், அதை அண்ணாந்து பார்த்துச் சிரித்துக் கொண்டிருப்பீர். 'நரிக்குக் கொண்டாட்டம்; நண்டுக்குத் திண்டாட்டம்' என்பது போல், பிறருடைய அவஸ்தையில் உமது ஹாஸ்யம் அடங்கி இருக்கிறது. உமக்கும் கவிதைக்கும் காதவழி தூரம்: (பாடுகிருர்)

*கையிலுள்ள காசெலாம்*
*கடையிலே கொடுத்துமே*
*மெய் கெடாத ஆஸ்பரின்*
*மேவி உண்டும் தீரலெ*

[ தொடர் கதைத் துரைசாமி வருகிறார் ]

துரைசாமி : ஓஹோ ! கவிதையைக் கேட்கும் போது, இது கவிராயரின் இரண்டாம் பாகம் போலிருக்கிறது. முதற் பாகம் அப்போதே வெளி வந்து விட்டதோ ?

ஹாலாஸ்யம் : கவிதைக் கிணற்றில் அவர் பாதி விழுந்து கொண்டிருக்கும் போது நீங்கள் வந்தீர்கள். இப்போது அவர் கிணற்றில் விழுந்து மூழ்கியே போய் விட்டார்.

சின்னச்சாமி : ஹாலாஸ்யம் ! என்ன இருந்தாலும் கவிதைக்கு மதிப்புத் தனி தான். சமயங்களில் ஒரு சிறு கதைக்குச் சம்பவமோ, பிளாட்டோ கிடைக்காமல் மண்டையை உடைத்துக் கொள்கிறேன். ஆனால், நம்ப கண்ணுச்சாமியோ மண்டை வலியைப் பற்றியே ஒரே விநாடியில் கவி பாடி விட்டார் !

ஹாலாஸ்யம் : நீர் சொல்வது ரொம்பச் சரி. உம் கதைக்குச் சமாசாரம் வேண்டும். ஆனால், கவிதைக்குச் சமாசாரம் வேண்டாம். சும்மா எதைப்பற்றி வேண்டுமானாலும் ரப்பர் மாதிரி இழுக்கலாம். நீர் தக்காளிக்காயைப் பற்றியாவது தவலை அடையைப் பற்றியாவது சிறு கதை சிருஷ்டிக்க முடியுமா ? ஆனால், நம் கவிஞர் வேர்க்கடலையைப் பற்றி ஆரம்பித்து, வேங்கைப்

புலியை வருணித்து, வேதாந்தமாக முடித்து வேக மாக ஒரு கவி பாடி விடுவாரே!

[ காதல் கதைக் கந்தசாமி வருகிறார் ]

கந்தசாமி : நம் ஹாஸ்யப் பிரியர் சொல்வதை நான் ஒத்துக் கொள்ளத் தயாரில்லை. கவிதையில் ஹாஸ்யத்துக்கு அதிக இடம் இல்லை என்பதற்காக அவர் கவிதையைப் பரிகாசம் செய்கிறார். கவிஞரே! உம் கட்சியின் சார்பாகப் பேச நான் இருக்கிறேன். காதலுக்கும் கவிதைக்கும் சம்பந்தம் அதிகம்.

துரைசாமி : அடேடே! கந்தசாமி ஒரே நாடக பாணியில் அல்லவா பேசுகிறார்! இதை அனுபவிக்க நம் நாடக ஆசிரியர் நல்லசாமியும் நல்ல வேளையாக அதோ வருகிறார். ரசிகர்களுக்கும் வாசகர்களுக்கும் தொடர் கதை அளிக்கும் இன்பத்தை, இதர கதைகளும், கவிதை களும் அளிக்க முடியுமா ?

[ நாடகாசிரியர் நல்லசாமி வருகிறார் ]

நல்லசாமி : வந்தேன்! வந்தேன்!—ச ரி க ம ப த நி ச— இதோ வந்தேன் நானே! ஜகம் புகழும் மணம் கமழும் நல்லசாமி வந்தேன்! வந்தேன்! நிலைமையைப் பார்த்தால், நம் கவிராயர் தான் இந்தப் பேச்சரங்கில் கதாநாயகனாக விளங்குகிறார் போலிருக்கிறது!

கந்தசாமி : ஆமாம், கவிதைத் தேவியைக் காதலிக்கத் தெரியாத காப்பிக் குடியர்களின் மத்தியில் அவர்தான் இப்போதைய 'ஹீரோ.' காதல் உணர்ச்சிக்கே கவிதை தானே அஸ்திவாரம். சீதையைத் தூக்கிக் கொண்டு போன ராவணன் கூட என்ன சொல்கிறான் ?

கண்ணுச்சாமி : (பாடுகிறார்)

நெஞ்ச முடைந்து நிலை தடுமாறித்
தஞ்சமடைந்த தடியனும் என்னைக்
கொஞ்சி விழித்துக் கூப்பிடுமானே
வஞ்சமொழித்து வாழ்விப்பாயே.

நல்லசாமி : சபாஷ்! சபாஷ்! இது நம் கவிராயருடைய சொந்தக் கற்பனை; கம்பருடையதல்ல. இந்தப் பாட்டைப் பாடும்போது ராவணனுடைய ஒரு கை மீசையிலும், மற்றொரு கை...

ஹாலாஸ்யம் : நம்ப கண்ணுச்சாமியோட கழுத்திலேயும் இருந்தது.

கண்ணுச்சாமி : உம்முடைய விகடத்திலே இடிவிழ!

நல்லசாமி : மற்றொரு கை மார்பிலும் இருந்தால், சபையோருக்கு நல்ல அபிப்பிராயம் விழும் என்று சொல்ல வந்தேன்,

சின்னச்சாமி : இந்தக் காலங்களிலே அபிப்பிராயங்களுக்காக யார் கவலைப்படுகிறார்கள் ? ரசிகர்களின் அபிப்பிராயங்களைப் பத்திரிகாசிரியர்கள் மதித்தால் தான் சிறு கதைகளுக்கு அமோகமான வரவேற்பு இருக்குமே! ஏதோ சப் என்ற தொடர் கதைகளைப் போட்டுப் பக்கங்களை நிரப்புகிறார்கள்.

துரைசாமி : உமக்கு ஆதரவு இல்லை என்பதற்காக நீர் தொடர் கதைகளை குறை சொல்ல முடியுமா? 'அவன் அவளை அடித்தான்' என்று மூன்று வார்த்தைகளில் நீர் குறிக்கும் ஓர் சம்பவத்தை நான் மூன்று பக்கங்

களிலோ, முப்பது பக்கங்களிலோ 'வருணிப்பேன். அதனால் தான் தொடர் கதைகளுக்கு 'மவுஸ்' ஜாஸ்தி.

நல்லசாமி: இந்தத் தற்புகழ்ச்சி எதற்காக? இலக்கியத்தி லேயே நாடகம் தான் முக்கியமாக இருக்கிறது. அதை மறந்து விட்டீர்கள். போனால் போகிறது...... இப்போது நாம் எல்லோரும் இங்கே கூடியிருக்கி றோம். ஏன் நாம் ஒரு மகாநாடு இப்போதே கூட்டி, எழுத்தாளர்களின் பெருமையை உலகத்தாருக்கு எடுத்துக் காட்டக் கூடாது?

கண்ணுச்சாமி: பேஷ்! சரியான யோசனை. (பாடுகிறார்)

*எழுமின்! எழுமின்! எழுதும் தொழிலோர்*
*அழுமின்! அழுமின்! நம் நிலை நினைந்தே!*

ஹாலாஸ்யம்: எதற்குங்காணும் அழுவது? நீர் கவி பாடி அழுவது போதாதென்று? நாம் சிரிப்போம். இந்நாட்டு மன்னர் நாம்! ஆம், ஆம் இந்நாட்டு மன்னர். ஒரு தேசம் பெருமைப் படுவது அந்த நாட்டு எழுத்தாளர்களால் தான்! இப்போது நாம் எல்லோ ரும் ஒற்றுமையாகவும் ஒன்றாகவும் நின்று நம் பிரதா பத்தை உலகத்தாருக்கு எடுத்துக் காண்பிக்க வேண் டும்.

நல்லசாமி: ஆமாம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

கந்தசாமி: இங்கே கூடியிருக்கும் நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு துறையில் கைதேர்ந்தவர்களாக இருந்தா லும், எழுத்தாளர்கள் என்ற ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; ஏக குடும்பத்தினர்.

சின்னச்சாமி: நமக்குள் பிளவுகளோ, சண்டை சச்சரவுகளோ ஏற்படக் கூடாது.

ஹாலாஸ்யம்: நல்லது! நான் கவிஞரைக் கேலி செய்யப் போவதில்லை. நண்பர் துரைசாமி தொடர் கதையின் பெருமையை வருணிப்பதில் சின்னச்சாமியைச் சிறுமைப் படுத்தவும் தேவையில்லை.

கண்ணுச்சாமி: (பாடுகிறார்)

*ஒற்றுமை என்னும் போதினிலே—இன்பச்*
*சட்டினி பாயுது காதினிலே......*

நல்லசாமி: சபையோர்களே! இப்போது நல்ல வேளை. நாம் மகாநாட்டை ஆரம்பிக்கலாம். மகாநாட்டுக்கு ஒரு தலைவர் வேண்டுமே,

ஏகோபித்த குரல்கள்: ஆமாம், ஆமாம்!

நல்லசாமி: தலைவராக யாரைத் தேர்ந்தெடுக்கலாம்?...... நானே தலைவராக இருக்கட்டுமா?

சின்னச்சாமி: தலைவர் பதவிக்கு நான் ஸ்ரீ ஹாலாஸ்யத்தின் பெயரைப் பிரேரேபிக்கிறேன்.

நல்லசாமி: பேஷ், இதிலும் போட்டியா?......சரி! யார் ஆமோதிக்கிறார்கள்?

துரைசாமி: தலைவர் பதவிக்கு நான் ஸ்ரீ கண்ணுச்சாமி அவர்களைப் பிரேரேபிக்கிறேன்.

ஹாலாஸ்யம்: எழுத்தாளர்களிடையே இந்தப் பிதற்றல் சாமிக்கு என்ன ஐயா இடம்? அவருக்குத் தலைமை வகிக்க யோக்கியதை ஏது?

கண்ணுச்சாமி: ஹாஸ்யம் ஹாஸ்யம் என்று சொல்லிக் கொண்டு யாரையும் சிரிக்காதபடி தடுக்கும் ஹாலாஸ்யத்துக்குத் தலைமைப் பதவியாம்! நன்று நன்று! பளா!

ஹாலாஸ்யம்: ஓய்! நாவை அடக்கிப் பேசும்.

கண்ணுச்சாமி: வாயை மூடிக்கொண்டு வந்த வழி போம்.

நல்லசாமி: என்ன ஐயா! அதற்குள்ளாகவே சண்டையா? இப்போதுதானே, ஒற்றுமை, கறுப்புமை, சிவப்புமை என்றெல்லாம் பேசினீர்கள்!

ஹாலாஸ்யம்: பேச்சுக்கும் காரியத்துக்கும் வித்தியாசமில்லையா? பதவி என்று வந்தால் விட்டுக் கொடுப்போமா?

கந்தசாமி: இந்தத் தொந்தரவெல்லாம் எதற்கு? நானே தலைவராக இருக்கிறேன்.

துரைசாமி: உமக்குப் பரந்த அனுபவம் இல்லை! காதல் மூலை ஒன்று தான் தெரியும்.

கந்தசாமி: உமக்கு ஹனுமார் வால் மாதிரி தொடர்கதை தான் எழுதத் தெரியும்.

நல்லசாமி: நண்பர்களே! நீங்கள் சச்சரவை நிறுத்தாமல் வளர்த்துக் கொண்டே போவதால், எல்லாருக்கும் சமரசமாக நானே என்னைத் தலைவராகப் பிரேரேபித்துக் கொண்டு நானே ஆமோதித்தும் கொள்கிறேன். அடுத்தபடியாக......

கந்தசாமி—சின்னச்சாமி: நீங்கள் தலைவராக இருப்பது எங்களுக்குச் சம்மதமில்லை. நாங்கள் வெளியேறுகிறோம்.

[இருவரும் போகிருர்கள்]

துரைசாமி—கண்ணுச்சாமி : நாங்கள் தனிமையாக வேறே மகாநாடு நடத்திக் கொள்கிரும், நீர் குறுக்கே விழுந்து குட்டையைக் குழப்ப வேண்டாம்.

[இருவரும் போகிருர்கள்]

ஹாலாஸ்யம் : நல்லசாமி! இப்போது நீரும் நானும் தான் மிச்சம். நாம் இருவரும் கூட்டுத் தலைவர்களாக இருப்போம். சமமான பதவியாகப் போகும் இல்லையா?

நல்லசாமி : ஆமாம்!......சபையோர்களே!......ஓஹோ! ஒருவருமில்லையா?......இந்த மகாநாட்டை இப்போது ஒத்திப் போடுகிறேன்.

ஹாலாஸ்யம் : போடுகிறேன் என்ன? போடுகிரும் என்று சொல்லும். நாம் இருவரும் கூட்டுத் தலைவர்கள் என்பதை மறந்து விட வேண்டாம்.

[போகிருர்கள்]



# 8. அபூர்வ யோசனை!

*கோமதிஸ்வாமிநாதன்*

*[கலாசாலை ஹாஸ்டல். இரவு எட்டு மணி சுமார். சுகுமார் தன் அறையில் உட்கார்ந்திருக்கிறான். மேஜையின் மீது புஸ்தகங்கள் விரித்தபடி கிடக்கின்றன. அவன் நண்பன் சந்தானம் வருகிறான்.]*

சந்தானம்: சுகுமார்! பேசாமல் படுக்கையை விரித்துப் படுத்துத் தூங்குவதுதானே! இப்படி எதற்கு உட்கார்ந்து கொண்டே யோகாசனம் செய்வதுபோல் தூங்குகிறாய்? இதற்குப் பெயர் நித்ராசனமா?

சுகுமார்: (சுவாரஸ்யமில்லாமல்) சந்தானமா! வா! வா! உட்காரு.

*[சந்தானம் உட்காருகிறான்]*

சந்தானம்: தூக்கம் சரியாகத் தெளியவில்லை போலிருக்கு! நீலாம்புரி ராகத்திலே ஒரு தாலாட்டுப் பாடட்டுமா?

*[பாடுகிறான்]*

*காசையே கொட்டி காலேஜிலே நுழைந்து*
*பாடத்தைப் படிக்காமல்*
*படுத்துறங்கிக் கண்வளராய்!*

சுகுமார்: நீ ஒருத்தன்! எரியற நெருப்பிலே எண்ணெயைக் கொட்டுகிறாய்! நானே பயந்து நடுங்கி உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். இப்போது தூக்கமா வரும்?

சந்தானம்: என்னப்பா அப்படி பயப்படும்படியான சமாசாரம்? ஊரிலேயிருந்து அப்பா கல்யாணம் நிச்சயம்

பண்ணி முகூர்த்தம் வைத்தாய்விட்டது என்று எழுதி யிருக்கிறாரா? எந்த வனிதாமணி,

சுதமாரா என்தாபம் தனை
நீ தணியாயோ—மாரா

என்று காத்துக் கொண்டிருக்கிறாள்?

சுகுமாரன்: நீ எரியும் நெருப்பில் எண்ணெயைக் கொட்ட வில்லை. பெட்ரோலை ஊற்றுகிறாய்! நான் பாழாய்ப் போன பரீட்சையைப் பற்றி நினைத்து மனம் தவித் துக் கொண்டிருக்கிறேன். வருஷம் பூராவும் சினி மாவும், எக்ஸிபிஷனும், கிரிக்கெட் மாச்சும் பார்த் தாச்சு! திடீர்னு 'உனக்கு இந்த வருஷம் என்ன பாடப் புஸ்தகங்கள் வைத்திருக்கிறார்கள்?' என்று யாரும் கேட்டால் என்னால் சொல்ல முடியாது. இந்த நிலைமையிலிருப்பவனுக்குப் பரீட்சையை நினைத்தால் பகீரென்றிருக்காதா?

சந்தானம்: இனிமேல் நாம்தான் மாட்ச் ஆடணும்! அது வும் ரஞ்சி டிரோபி மாதிரி மள மளவென்று ஆடி அவுட் ஆகணும். ஒவ்வொரு பரீட்சையிலும் போய் பேனாவை வீசி 'டக்' வாங்கினால் போச்சு! என்ன பிரமாதம்! நாம் காலேஜில் கால் வைக்கும் போதே தான் நம் பரீட்சையின் முடிவு தெரியுமே! இதற்குக் கோசாரபலனா பார்க்கவேண்டும்?

சுகுமார்: உனக்கென்னப்பா! பரீட்சை தேறினாலும் ஒன்று, தேறாவிட்டாலும் ஒன்று. பேசாமல் கிராமத் திற்குப் போய் வீட்டில் இருக்கிற இருபத்தைந்து எருமை மாடுகளை ஹாயாக மேய்த்து டிரில் வாங் கலாம்! ஆனால் நான் பரீட்சையில் கோட் அடித்

தாலோ என்னையே 'எங்க அப்பா எருமை மாடாக விரட்டி விடுவார்.

சந்தானம் : எப்படியும் இந்த வருஷம் பரீட்சை சோட் என்று நிச்சயப்படுத்தி விட்டாயா ?

சுகுமார் : யானை பார்க்க வெள்ளெழுத்தா என்ன ? சர்வ நிச்சயம் !

சந்தானம் : (பாடுகிறான்)

கம்பனும் ஷேக்ஸ்பியரும்
 கழுத்தையே அறுக்கும்போது
கைதூக்கி விட்டெனைக்
 காப்பாற்றுதல் நின் கடமையன்றோ

என்று முகாரி ராகத்தில் முக்குத் தெரு பிள்ளையார் கிட்டே போய்ப் பாடிப் பார்க்கிறதுதானே?

சுகுமார் : இந்த வெட்கக்கேட்டை பிள்ளையார் வேறு தெரிந்து கொள்ள வேணுமா ? நம்மட்டோடு இருக் கட்டும் ! அவருக்கு எத்தனை கவலையோ ? அதோடு இதுவும் எதற்கு ? [சந்திரன் வருகிறான்]

சந்தானம் : புஸ்தகம் என்னும் மேகத்திலிருந்து விலகிய சந்திரன் இதோ பிரகாசிக்கத் தொடங்கி விட்டான் ! ......அடேடே சந்திரா! உன் முகம் ஏன் ஒரு மாதிரி வாடி இருக்கிறது ? (பாடுகிறான்)

சந்திரன்போல் முகத்தில்
 சஞ்சலம் தோன்றுவதேன் ?

சந்திரன் : சந்தானம் ! தாடி பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்புக் கேட்கும் பாணியில் பேசாதே!...ஊரிலே யிருந்து ஒரு வாரமாய்ப் பணம் எதிர்பார்த்துக்

கொண்டிருக்கிறேன். வரும் வழியாக இல்லை. மனிதன் எத்தனை நாள்தான் ஓசி சிகரெட்டிலேயே காலம் கழிக்க முடியும் ?

சந்தானம் : சுகுமாரனுக்குப் பரீட்சை போயிடுமே என்ற கவலை. சந்திரனுக்குப் பணம் வரவில்லையே என்ற கவலை !

சந்திரன் : உனக்குக் காலேஜ் சாத்தின பிறகு கிராமத்தில் பொழுது போகாதே என்ற கவலை!...சரி! சரி! இந்த ஐந்து நிமிஷங்களில் மூன்று பக்கங்கள் உருப் போட்டிருப்பேன்...சுகுமார்! ஒரு ரூபாய் இருந்தால் கொடு. அப்புறம் கொண்டு வந்து தருகிறேன்.

சுகுமார் : சந்தானத்திற்கென்ன ? பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும் கூழுக்கு உப்பு இல்லை என்பாரும் ஒன்றாய்விட முடியுமா ?

[சந்திரன் போகிறான்]

சந்தானம் : சுகுமார்! எனக்கு முதல் தரமான யோசனை ஒன்று தோன்றுகிறது. சொல்லட்டுமா? சந்திரனைப் பார்த்த பிறகுதான் அது உதயமாச்சு!

சுகுமார் : சொல்லட்டுமா என்று என்ன கேள்வி! சீக்கிரம் சொல் !

சந்தானம் : நீயோ எப்படியும் பரீட்சையிலே பெயிலாகிப் போய் விடுவது என்று தீர்மானித்து விட்டாய்! திடீரென்று ரிசல்ட் வந்து உன் குட்டை உடைத்து உன்னை உன் தகப்பனாரின் ஏமாற்றத்திற்கும் கோபத்திற்கும் ஆளாக்குவதை விட, அவர் மனத்தை நீ இப்போதிருந்தே அந்த ஏமாற்றத்திற்குத் தயார்

செய்து விட்டால் அப்புறம் திடீர்க் கோபத்திற்கு இடமிருக்காதல்லவா ?

**சுகுமார் :** உண்ணாவிரதம் இருக்கப் போகிறவர்கள் முன் கூட்டியே பத்திரிகையில் அறிவிப்புக் கொடுக்கிற மாதிரி இப்போதே அப்பாவிடம் சொல்லிவிடச் சொல்கிருயா ? சரிதான் ! அவர் நரசிம்மாவதாரம் எடுத்து என்னைக் கிழித்துவிட மாட்டாரா ?

(பாடுகிருன்.)

பரீட்சை என்னும் போதினிலே - துன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே
கடமையை எண்ணிப் பார்க்கையிலே
சோகம் பிறக்குது உள்ளத்திலே.

**சந்தானம் :** சபாஷ் ! படிக்க வேண்டும் என்பது உன் கடமை போல் பணம் கொடுப்பது என்பதும் அவர் கள் கடமைதான் ! நான் சொல்றபடி கேளு. ரொம்ப ரகசியமாக இருக்கணும். இதிலே செலவிற்குப் பணம்கூட நிறைய கிடைக்கும் ! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் !

**சுகுமார் :** மாங்காயோ தேங்காயோ, சீக்கிரம் சொல்லித் தொலை !

**சந்தானம் :** அவசரப்படாதே ! எல்லாம் படிப்படியாய்ப் போகணும். முதலில் இன்றைக்கு உன் அப்பா விற்கு ஒரு கடிதம் எழுது. 'க்ஷேமம்; க்ஷேமத்திற் குப் பதில்' என்ற வழக்கமான பல்லவியைப் பாடி விட்டு, கடைசியில் 'பரீட்சையில் முதலாவதாகத் தேறவேண்டும் என்ற ஆத்திரத்திலுல் விழுந்து

விழுந்து படித்துக் கொண்டிருக்கிறேன். உடம்பில் தான் பலம் இல்லை. புஸ்தகத்தை மூடினதும் தலையைச் சுற்றுகிறது' என்று எழுதிவை.

சுகுமார்: பச்சைப் பொய்யைக் கறுப்பு மையால் எழுதுகிறேன்! அப்புறம்?

சந்தானம்: மூன்று நாள் கழித்து இன்னொரு கடிதம்; 'அதிகமாக வாசித்து மண்டை ஒரேயடியாய்க் குழம்பிப் போயிருப்பதாகவும், அதற்கு உடனே ஓரிரண்டு இஞ்சக்ஷன்கள் போட்டு டானிக் வாங்கிச் சாப்பிட அறுபது ரூபாய் மறு தபாலில் அனுப்ப வேண்டும்' என்றும் எழுது.

சுகுமார்: அறுபது ரூபாயா? அது என்னடா கணக்கு? ஐம்பது ரூபாய் என்று கேட்கக் கூடாதா?

சந்தானம்: இந்த அபூர்வ யோசனையைச் சொல்ல எனக்குப் பத்து ரூபாய் பீஸ் என்றுதான் வைத்துக் கொள்ளேன்! இன்னும் கேள். இந்த இரண்டாவது கடிதம் போய் ரூபாய் வந்த மறுநாளே ஒரு தந்தி அடி. கூடியவரை பரீட்சைக்கு முதல் நாள் அடிக்க வேண்டும். 'மருந்து சாப்பிடறேன்! எல்லாவற்றிற்கும் ஆண்டவன் தான் தயவு புரிய வேண்டும்', என்று வேதாந்தம் தொனிக்கிறாப் போலிருக்க வேண்டும். தந்தியை அனுப்பிவிட்டு நீ தைரியமாக எந்த தியேட்டருக்கும் சினிமா பார்க்க நுழைந்து விடலாம்!

சுகுமார்: அப்போது தானே அம்மாவும் அப்பாவும் 'பிள்ளையாண்டான் படித்து பாஸ் பண்ணாத போனாலும் பரவாயில்லை! அதிகமாகப் படித்து பயித்தியம்

பிடிக்காமலிருந்தால் தேவலே' என்று நினைத்துக் கொள்வார்கள்!

சந்தானம்: அதுமாத்திரமா? இத்தனை நாளாக படி படின்னு உயிரை வாங்கினவர்கள் இனிமேல் 'அப்பா! கண்ணே! அருமைத் தங்கமே! இந்த மார்ச் இல்லை யென்றால் செப்டம்பர் இருக்கவே இருக்கு! வீணில் உடம்பைக் கெடுத்துக்காதே' என்று கெஞ்சுவார்கள்!

சுகுமார்: படிப்படியாகப் போகும் யோசனை பிரமாத மாகத்தானிருக்கிறது! ஆனல் அப்பா திடீர்னு என் னைப் பார்க்க இங்கே புறப்பட்டு வந்து விட்டால்?

சந்தானம்: அந்த நெருக்கடிக்கும் நீ தயாராகத்தானிருக்க வேண்டும். அவர் திடீர்னு வந்து குதித்தால் அப் போது உன் மூஞ்சியிலே கொஞ்சம் அசட்டுக் களை இருக்க வேண்டும். அவ்வளவு தான்! சேப்டி ரேசர் பெட்டியைத் தூக்கிக் கொஞ்ச நாள் தள்ளி வை! அப்பா வராமலிருக்கும்படியாக காகிதங்களை எழுது. நேரடியாக, வராதே என்றால் சந்தேகப்பட்டு அடுத்த ரயிலில் வந்துவிடுவார்! நாசூக்காக எழுத வேண்டும்!

சுகுமார்: இது தெரியாதா!

சந்தானம்: இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலிருக்க வேண்டும் கடைசியில் உன் நடிப்பு!

சுகுமார்: இதிலே நாடகம் வேறு இருக்கா? அது எப் போது?

சந்தானம்: பரீட்சை முடிந்து ஊருக்குப் போய் வீட்டிற் குள் நுழையும்போது 'என்னவோ பரீட்சை எழுதி

யிருக்கிறேன். நான் பிழைத்ததே மறு பிழைப்பு!' என்று சர்வ அலக்ஷியமாகவும் சோகம் ததும்பவும் சூள் கொட்டியவாறு சொல்ல வேண்டும். 'இந்தப் பிச்சாத் பரீட்சை போனால் போகிறது' என்று உங்க அப்பா உன்னை அப்படியே அணைத்துக் கொள்ளும் தோரணையில் அமைய வேண்டும் உன் பேச்சு!

சுகுமார்: ரிசல்ட் வரபோது 'அது தான் நான் அப்பவே சொன்னேனே! அதிகமாகப் படித்து மூளை குழம்பியே போச்சு' என்பேன். ரொம்ப சகஜமாய்ப் போய்விடும்!

சந்தானம்: பார்த்தாயா? சந்தானத்தின் யோசனை எப்படி? தோல்வியையும் புன்சிரிப்புடன் வரவேற்கும் வித்தையல்லவா இது?

சுகுமார்: பிரமாதம்! பிரமாதம்! உன்னை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை! ஒரே ஒரு விஷயம்! இந்த நாலு ஸ்டேஜ்களையும்—படிப்படியாய் முன்னேறுவதை— நீட்டாக ஒரு காகிதத்தில் எழுதிக் கொடு! எனக்குத் தான் ஞாபக சக்தியே கிடையாதே! கொஞ்சம் விபரமாகவும் எழுதிவை.

சந்தானம்: அதுவும் சரிதான்! எல்லாவற்றையும் நான் இப்போ சொன்னபடியே எழுதிவிடுகிறேன் ... ஒரு பேப்பர் எடு...வேண்டாம்! இந்த லெட்டர் பாடின் தாளில் கீழ்ப் பக்கமாக எழுதி வைக்கிறேன்! ஒருவர் கண்ணிலும் அகப்படாது.

(சந்தானம் எழுதிவிட்டுப் போகிறான்.)

## 2

[சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு. சுகுமாரின் அறை. சந்தானமும், சோமுவும் வருகிறார்கள். சுகுமார் சோகமே உருவாக உட்கார்ந்திருக்கிறான்.]

சந்தானம் : என்ன சுகுமார், பணமாவது பதிலாவது வந்ததா?

சுகுமார் : எனக்கு ஒன்றுமே புரியவில்லையப்பா! நீ சொன்ன பிரகாரம் இரண்டு கடிதங்களும் எழுதித் தந்தியும் அடிச்சாச்சு! அப்புறம் தாடியும் வளர்த்தாச்சு. யாதொரு விதமான பதிலையும் காணோம்!

சோமு : உங்க அப்பா ஊரிலே இல்லையோ என்னவோ!

சுகுமார் : அப்படியே வைத்துக் கொண்டாலும், அம்மா தந்தியைப் பார்த்துப் பயந்துபோய் அடுத்த வீட்டு அம்பியைக் கொண்டாவது கடிதம் எழுதச் சொல்லியிருப்பாளே! அங்கிருந்து பதில் வராதது மனத்திற்கு நிம்மதியே இல்லை.

சந்தானம் : நாம் செய்ய வேண்டியதைச் செய்தாய் விட்டது. பலனைப்பற்றி நமக்கென்ன கவலை? பகவான் கீதையிலே அதைத்தானே சொல்கிறார்!

சுகுமார் : பகவானுக்கென்னப்பா கவலை! அவரா பரீட்சை எழுதப் போகிறார்? தைரியமாய் உன் யோசனையைக் கடைப்பிடித்து விட்டேன் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ!

சந்தானம் : சுத்த பயந்தாங்குள்ளியாக இருப்பாய் போலிருக்கே! நான் சொல்லிக் கொடுத்தபடி முதல் மூன்று

ஐட்டங்களையும் வரிசையாகக் கடைப்பிடித்தாயல்லவா?...நான் எழுதிக் கொடுத்த பாடம் எங்கே?

சுகுமார்: பாடமா?

சந்தானம்: அதுதானப்பா! நீ மறந்து போகக் கூடாதென்று விவரமாக எழுதி வைத்தேனே!

சோமு: ஏண்டா சந்தானம்! உன் யோசனையை அன்றைக்கே எனக்கும் சொல்லிக் கொடுத்திருந்தால் நான் மண்டையை உடைத்துக் கொண்டு படித்திருக்க மாட்டேனல்லவா? இப்போது எல்லாவற்றையும் படித்துத் தொலைத்து விட்டேன். இனிமேல் முயற்சி பண்ணினாலும் பரீட்சை பெயிலாகிப் போகாது!

சந்தானம்: சுகுமார், அந்தப் பேப்பரை எடுத்துக்கொடு சீக்கிரம்.

சுகுமார்: சந்தானம்! நீ எழுதி வைத்தது அப்படியே தானிருக்கும். என் மனத்தில் அவை பாடமாய் விட்டதால் அதை அப்புறம் திறந்து பார்க்கவேயில்லை.

சந்தானம்: அது என்னோட காப்பிரைட் விஷயம்! எங்கே அந்த லெட்டர் பாட்?

சுகுமார்: அந்த மேஜை மேலிருக்கும் பார்!

[சந்தானம் போய் லெட்டர் பாடை எடுத்துப் பார்க்கிறான்]

சந்தானம்: காணலியே தம்பி! இந்த முதல் ஷீட்டிலே பின்புறமாக எழுதி வைத்திருந்தேன்!

சுகுமார்: (திடுக்கிட்டு) என்ன! முதல் பக்கத்தில் பின்புற மாக எழுதியிருந்தாயா!

சந்தானம்: ஆமாம்! ஸ்பஷ்டமாகப் பென்சிலால் எழுதி வைத்திருந்தேன். அடியிலே என் கையெழுத்தைக் கூடப் போட்டிருந்தேன். மேல் பக்கத்திலிருந்தா யாரும் பார்க்கப் போகிறார்களென்று உள் பச்கமாக எழுதினேன்!

சுகுமார்: (தலையிலடித்துக் கொண்டு) குடி கெட்டது! அந்த ஷீட்டின் மேல் பக்கத்தில்தான் அப்பாவிற்கு முதல் கடிதம் எழுதி யிருக்கிறேன். பின் புறம் நீ எழுதியிருந்ததைக் கவனிக்கவே யில்லை!

சந்தானம்: அப்படிச் சொல்லு! உங்க அப்பா, பின்புற மிருந்த சமாசாரத்தை முதலில் படித்துவிட்டுத்தான் பிறகு உன் கடித விஷயத்தைப் பார்த்திருப்பார்! அவ ரோட மௌனத்திற்குக் காரணம் இப்போதுதான் புரிகிறது. இன்னும் ஒன்பது தந்தி அடித்தாற்கூட அசைய மாட்டார்!

சுகுமார்: உன் யோசனையினாலே வழக்கமாக வரும் பணம் கூட நின்று போய்விட்டதே! அவர் மூஞ்சி யிலே எப்படி விழிப்பேன்?

சந்தானம்: மனிதன் மீசையை முறுக்கிக் கொண்டு பிள்ளையாண்டானை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார் ஒரு கை பார்க்க!

சோமு: அவருக்கு மீசை கிடையாதப்பா! எனக்குத் தெரியும்!

சந்தானம் : மீசை யில்லை யென்ருல் மீசை இருக்கும் இடம் என்று வைத்துக் கொள்ளேன் !

சுகுமார் : சந்தானம் ! எல்லாம் உனக்கு விளையாட்டாக இருக்கு ! நீயே குழந்தையைக் கிள்ளியும் விட்டு தாலாட்டுகிருயே ! இப்போது அவர் திடீரென்று வந்து நின்ருல் எனக்கு ஹார்ட் பெய்லியூர் ஆகிவிடும்!

சோமு : பரீட்சைக் கவலை அத்துடன் தீர்ந்தது !

சந்தானம் : பயப்படாதே தம்பி ! நீ தான் தாடி எல்லாம் வளர்த்திருக்கிருயே !

சோமு : ஒரு வேஷ்டியையும் அப்படியே காவியிலே முக்கிஞல் போச்சு !

[திடீரென்று கதவு திறக்கப்படுகிறது. சுகுமாரின் தகப்பஞர் சுப்பண்ண நுழைகிருர்.]

சுப்பண்ண : ஏண்டா சுகுமார் ! ரொம்ப படிச்சு மண்டையிலுள்ள ஸ்குரூக்கள் எல்லாம் கழண்டு விட்டதோ !

சுகுமார் : (நடுக்கத்துடன்) இல்லை அப்பா

சுப்பண்ண : (கோபத்துடன்) மடப்பயலே! என் பணத்திற்கும் உன் பரீட்சைக்கும் க்ஷவரம் பண்ணுவதற்காக முகத்தை க்ஷவரம் பண்ணிக் கொள்ளாமலிருக்கிருயோ ? அவன் எந்த கொலம்பஸ்டா உனக்கு இந்த அபூர்வ யோசனையைச் சொல்லிக் கொடுத்தான் ?

[சுகுமார் மயக்கமடைந்து கீழே விழுகிறான். இந்தச் சந்தடியில் சந்தானமும், சோமுவும் நழுவுகிறார்கள்.]

நல்ல பையன்கள்! ஏண்டா சுகுமார்! நான் வந்தால் இப்படி மயக்கமாய் விழ வேண்டுமென்றும் அவன் தான் சொல்லிக் கொடுத்தானோ?

சுகுமார்: (தயங்கி எழுந்துகொண்டே) இதை ஒருத்தரும் சொல்லிக் கொடுக்க வில்லையப்பா! சொந்தமாகத் தான் விழுந்தேன்!

[போகிறார்கள்]



# 9. நிஜ ஸ்டிரைக்

*கோமதிஸ்வாமிநாதன்*

*பள்ளிக்கூடத்தில் இன்னும் பிற்பகல் வகுப்பு ஆரம்பமாகவில்லை. விளையாட்டு மைதானத்தில், வேப்ப மரத்தடியில் போடப்பட்டிருக்கும் பெஞ்சில் மணியும், விச்சுவும் உட்கார்ந்திருக்கிறார்கள். கிட்டு சாவகாசமாக வருகிறான்.*

மணி : கிட்டு! ஏண்டா இவ்வளவு நேரம். சாப்பாட்டை இரண்டு வாய் அள்ளிப்போட்டுக் கொண்டு ஓடிவர வேண்டாமாடா?

விச்சு : இன்னிக்கு மத்தியானம் இரண்டு ஆட்டம் பதினெட்டாம் புலி ஆடவேண்டும் என்று காலையிலேயே சொல்லியிருந்தேனே. மறந்து போய் விட்டாயா?

கிட்டு : அதை ஏண்டா கேழ்க்கிறீர்கள். பெரிய விஷயம் அது. ஆத்திலே, அம்மா ஸ்டிரைக் பண்ணிட்டாள். சாப்பாடு கோளாறாய்ப் போய் விட்டது.

விச்சு : ஏரோப்ளேன் ஓட்டுகிறவர்கள், ஜட்கா வண்டிக்காரர்கள் இவாள் எல்லாரும் தான் ஸ்டிரைக் பண்ணுகிறார்கள். உங்க அம்மா எதுக்குடா ஸ்டிரைக் பண்றாள்.

கிட்டு : அப்பாவிடம் இரண்டு புடவைகள் வாங்கித் தரச் சொல்லி கேட்டாளாம். அவர் கையில் ரூபாய் இல்லாததால் ஒரு புடவைதான் வாங்கிக் கொடுத்தார். இன்னொரு புடவை வாங்கித் தரும் வரை சமையல்

பண்ணுவதில்லை என்று நேற்று முதல் ஸ்டிரைக் பண்ணி விட்டாள்.

விச்சு: அடடா! அப்புறம் சாப்பாடு எப்படி கிடைத்தது?

கிட்டு: ஆபீஸ் போகும் அவசரத்தில் அப்பா கச்சத்தைக் கட்டிக் கொண்டு சமைத்தார். குழம்பிற்குப் போடும் உப்பை ரசத்தில் போட்டார்; ரசத்திற்கு ஊற்றும் புளியை குழம்பில் ஊற்றினர். கடைசியில் சாதத்தை வடிக்கும்போது வெங்கலப் பானையை லேசாக கைதவறி அடுப்பில் சாய்த்து விட்டார். அப்புறம் ஆபீசிற்கு லீவு எழுதிக் கொடுத்துவிட்டு, கோதுமை உப்புமா கிண்டினர். விழுங்கி விட்டு வந்தேன்.

மணி: இந்த நிலைமை எவ்வளவு நாள் நீடிக்கும்?

(ராஜு வருகிறன்)

கிட்டு: விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விட்டாயிற்று. அடுத்தாத்து சேஷிப்பாட்டி தான் அட்ஜுடிகேட்டர். நாளைக்கே தன் தீர்ப்பைச் சொல்லி விடுகிறேன் என்றிருக்கிறள். அனேகமாக அம்மா பக்கம்தான் சாதகமாக இருக்கும்.

ராஜு: ஏண்டா மணி ஏன் நாமும் எல்லோருமாகச் சேர்ந்து ஓர் ஸ்டிரைக் பண்ணக்கூடாது?

விச்சு: நீ சொல்வது ரைட்! "மத்தியானம் வகுப்புகளே வைத்துக் கொள்ளக்கூடாது. பனிரெண்டு மணியோடே பள்ளிக்கூடத்தை மூடிவிட வேண்டும்" என்று ஸ்டிரைக் பண்ண வேண்டும்.

ராஜு: போடா சாம்பிராணி! பள்ளிக்கூடத்திலே இனி மேல் கணக்குப் பாடமே நடத்தக் கூடாது என்று

ஸ்டிரைக் பண்ண வேண்டும். அது ஒன்றுதான் நமக்கு யமனாக இருக்கு.

மணி: போங்கடா புத்தியில்லாத பசங்களா! பொதுவாக ஸ்டிரைக் எல்லாம் எதற்காக நடக்கிறது? அதிகச் சம்பளம் வேண்டும், அதிகக் கூலி வேண்டும் என்று தானே! கிட்டுவோட அம்மா எதற்கு ஸ்டிரைக் பண்ணினாள்? அதிகப்படி புடவை வேண்டுமென்று தானே! அதுபோல நாமும் இனிமேல் "உபாத்தியாயர்கள் அதிக நேரம் பாடம் சொல்லித் தரவேண்டும்" என்று ஒரு பிரச்னையைக் கிளப்பி, வேலை நிறுத்தம் செய்வோம். இப்போது மாலை நாலரை மணிக்கு பள்ளிக்கூடம் விடுகிறார்கள். இனிமேல் மாலை ஆறு மணிக்குத்தான் பள்ளிக்கூடம் விடவேண்டும். கூட ஒன்றரை மணி நேரம் பாடம் போதிக்க வேண்டும், என்று வற்புறுத்தி நாம் ஸ்டிரைக் துவக்க வேண்டும்.

ராஜா: இப்போது சொல்லிக் கொடுக்கப்படும் பாடமே மண்டையில் நுழையும் வழியைக் காணுமே. அதிகப்படி சொல்லிக் கொடுத்தால் யாருக்கு லாபம்?

மணி: உண்மையாக, நாம் பாடத்தின் மேல் ஊக்கம் கொண்டா ஸ்டிரைக் பண்ணுகிறோம்? ஒரு ஸ்டிரைக் நடத்திப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையினால் தானே. அதுவும் சரியான காரணத்தினால் நடத்த வேண்டும். இந்த வேலை நிறுத்தம் மாத்திரம் வெற்றிகரமாக முடியட்டும். அப்புறம் வேறு ஒரு சாக்கை வைத்துக் கொண்டு, நடத்தும் பாடம் ஜாஸ்தி என்று ஸ்டிரைக் பண்ணலாம்.

விச்சு: ஸ்டிரைக் என்றால் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமே!

மணி: அதெல்லாம் ஒழுங்காக நடக்கும். நம்ம பசங்கள் எல்லோரிடமும் சொல்லி வைத்து விடுகிறேன். நமக்கு முதல் பீரியட், ஜாக்ரபிதானே! அந்தக் கிளி மூக்கு ஹெட்மாஸ்டரோட பின் பாட்டு. அவர் கிட்டே சொல்லி விட்டால் அவர் உடனே ஹெட் மாஸ்டரிடம் சொல்லி விடுவார்.

மணி: நான் போய் நம்ம பசங்களை தயார் பண்ணு கிறேன். அடுத்த திங்கட் கிழமையிலிருந்து நம் வேலை நிறுத்தம் துவங்கும்.

(போகிறார்கள்)

2

ஆறாவது பாரம் ஜாகரபி வகுப்பு; ஜாகரபி உபாத்தி யாயர் கிளி மூக்கு, அட்டென்டென்ஸ் எடுத்து விட்டு பாடம் நடத்த ஆரம்பிக்கின்றார்.

கிளிமூக்கு: இன்றைக்கு புதுப் பாடம் நடத்துவதற்கு முன் பழைய பாடங்களில் இரண்டொரு கேள்விகள் கேட்கிறேன். சொல்லுங்கள் பார்க்கலாம். உலகம் ஏண்டா உருண்டையாக இருக்கு! நீ சொல் லுடா பாலு!

பாலு: அதும்பாட்டுக்கு உருண்டையாக இருந்து விட்டுப் போகிறது. அதைப்பற்றி நமக்கென்ன கவலை ஸார்?

கிளிமூக்கு: அதிகப் பிரசங்கி! கோபு! நீ சொல், உலகம் ஏன் உருண்டையாக இருக்கிறது?

கோபு: அதன் தலைவிதி ஸார்.

கிளிமூக்கு: உங்களைக் கட்டிக் கொண்டு அழுகிறதைவிட நாற்பது கழுதைகளை வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கலாம்.

(மூலையிலிருந்து ஒரு குரல்)

இந்தக் காலத்தில் லாண்டிரி வைத்து தொழில் நடத்தினால் நல்ல துட்டு கிடைக்கும் ஸார்!

கிளிமூக்கு: யாருடா அவன்? மூலையிலிருந்து கூச்சல் போடுவது! மணி! நீ தானே.

மணி: ஆமாம் சார். பெஞ்சி மேலே நிற்கட்டுமா?

கிளிமூக்கு: நில்.

(மணி பெஞ்சிமேல் ஏறி நிற்கிறான்)

மணி: (உபாத்தியாயரையும் மாணவர்களையும் பார்த்து) கிளிமூக்கு சார் அவர்களே, தோழர்களே! உலகம் உருண்டை உருண்டை என்று கேள்விப்பட்டும், கணக்கில், உருண்டை உருண்டையாக மார்க்குகள் வாங்கியும் எங்களுக்கு இப்போது எதைப் பார்த்தாலும் உருண்டையாகவே தோன்றுகிறது. பள்ளிக்கூடத்தில் சிரத்தையான போதனை யில்லை என்று நாங்கள் நினைக்கின்றோம். இனிமேல், மாலையில், கூட ஒன்றரை மணி நேரம், வகுப்புகளை நடத்தி சிரத்தையாகப் பாடங்களைச் சொல்லித்தர வேண்டும். இதுதான் எங்கள் கோரிக்கை. இல்லாத போனால் வரும் திங்கட்கிழமை முதல் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம். எங்கள் ஸ்டிரைக்கிற்கு இது

*தான் நோட்டீஸ். தாங்கள் உடனே ஹெட் மாஸ்டரிடம் கலந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும். (மாணவர்கள் கை தட்டுகிறார்கள். மணி அடிக்கிறது. வகுப்பு கலைகிறது.)*

3

*ஹெட் மாஸ்டர் ராஜாங்கமய்யரின் அறை. உபாத்தியாயர்கள் எல்லோரும் கூடி இருக்கிறார்கள். மாணவர்கள் ஸ்டிரைக் விஷயமாய் பேச்சு நடக்கிறது.*

ராஜாங்கமய்யர்: *என்ன கோபால்ராவ்! இந்த ஸ்டிரைக்கை நிறுத்த என்ன யோசனை சொல்றீர்.*

கோபால் ராவ்: *சீக்கிரம் பள்ளிக்கூடத்தை மூடவேண்டும். பாடம் கொஞ்சமாகச் சொல்லித் தர வேண்டும் என்று கேட்டால் நமக்கும் சௌகர்யம், அவங்களுக்கும் சௌகர்யம். இதென்னடா வென்றால் புதுஇனுசாக இருக்கு. கூட ஒன்றரை மணி நேரம் பாடம் நடத்த வேண்டுமாம்!*

ராஜாங்கமய்யர்: *பையன்களுக்கே படிக்க வேண்டும் என்று ஊக்கம் உண்டாகி இருக்கும்போது கூட இரண்டு பீரியட்கள் பாடம் நடத்துவதில் உமக்கென்ன ஆக்ஷேபனை?*

சங்கரம் பிள்ளை: *ஹெட் மாஸ்டர் சொல்லிப் பிடலாம் லேசாக. மானேஜ்மெண்டிலே அவருக்கு நிறைய சம்பளம் கொடுக்கராங்க, என்னைப் போலுள்ள குசேலர்கள் ஒன்று, இரண்டு டியூஷன் வைத்துக் கொண்டால் தான் பிழைப்பு நடக்கும். நாள் பூராவும் இருட்டும் வரை இங்கேயே உட்கார்ந்திருந்தால்*

ஒரு வேளைச் சாப்பாட்டுடன் கிடக்க வேண்டியது தான்

ராமய்யர் : சங்கரம் பிள்ளை சொல்வது ரொம்ப சரி. அதிகமாக வேலை செய்ய வேண்டுமானால் அதிகச் சம்பளம் வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்னையைப் பற்றி யோசிக்கலாம்.

ராஜாங்கமய்யர் : என்ன ஆபத்சகாயம்! நீர் என்ன சொல்கிறீர்!

சங்கரம்பிள்ளை : அவர் ஆபத்திலே காலை வாரி விடுபவர் அல்லவா! இப்போது என்ன சகாயம் செய்யப் போகிறார்?

ஆபத்சகாயம் : உலகமே புது தினுசா ஆயிடுத்து. பையன்கள் பரீட்சை வேண்டாம்னு ஸ்டிரைக் பண்ணினால் நமக்கு பேப்பர் திருத்தும் வேலையாவது மிச்சமாகும். இவங்க புதியதாக ஓர் பூதத்தைக் கிளப்பி இருக்காங்கள். இதை ஆர்பிட்ரேஷனுக்கு விடலாமே.

ராஜாங்கமய்யர் : இதெல்லாம் அனாவசியமான பேச்சு. நாம் அவர்கள் கோரிக்கையை ஒத்துக் கொள்ள வேண்டியதுதான். கொஞ்ச நாள் போனால் அவர்களாகவே இது வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். ஆகையால் நீங்கள் வரும் திங்கட்கிழமை முதல் மாலை 6 மணி வரை வகுப்பு நடத்த வேண்டும்.

சங்கரம்பிள்ளை : (எழுந்து நின்று) எல்லா உபாத்தியாயர்கள் சார்பாகவும் சொல்லுகிறேன். தற்போதைய சம்பளத்திற்கு நாங்கள் அதிகநேரம் வகுப்பு நடத்த முடி

யாது. சம்பளம் ஐம்பது சத விகிதம் அதிகப்படுமானல் நாங்கள், நீங்கள் சொல்லும் உத்தரவிற்கு உட்படுகிறோம். திங்கட் கிழமைக்குள் எங்கள் கோரிக்கை கவனிக்கப்படாவிடில் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம். அதற்கு இப்போதே நோட்டீஸ் கொடுத்து விட்டோம்.

(உபாத்தியாயர்கள் எல்லோரும் போகிறார்கள்)

ராஜாங்கமய்யர் : (தனக்குள்) இதேதுடா! பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது. பசங்கள் ஸ்டிரைக்கை நிவர்த்தி பண்ணலாம் என்றால் இந்த உபாத்தியாயர்கள் ஒரு புதுக் கரடியை நடுவில் விட்டு அவர்களும் ஸ்டிரைக் பண்ணுவார்களாம்! பேஷ்!

(போகிறார்)

4

(திங்கட்கிழமை காலை பையன்கள் எல்லோரும் வகுப்பிற்கு போகு முன் விளையாட்டு மைதானத்தில் கூடுகிறார்கள்.)

மணி : சகோதரர்களே! இன்றைக்கு, பழைய ஞாபகத்தில் சாயங்காலம் மணி அடித்தவுடன் எழுந்து போய் விடக் கூடாது. ஆறு மணி அடிக்கும் வரை வகுப்பிலேயே உட்கார்ந்திருக்க வேண்டும். கடைசி வகுப்பு உபாத்தியாயர் வகுப்பை விட்டு நகரப் பார்த்தால் அவரை விடக் கூடாது.

விச்சு : அவர் கிளம்புவார் போல் தெரிந்தால் நான் வழியை மறைத்துக் கொள்கிறேன்.

கோபு: ஒரு விஷயம்! தினம் போல் நாலரை மணிக்கு பசிக்க ஆரம்பித்து விடுமே. இன்றைக்கு எப்படி பசியைப் பொறுத்துக் கொண்டு ஆறு மணி வரை உட்கார்ந்திருப்பது.

மணி: அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம் தான். சில நாட்களில் அது பழக்கத்திற்கு வந்துவிடும். இன்றைக்கு மத்தியானம் எல்லோரும் தலைக்கு அரையணாவிற்கு வேர்க்கடலை வாங்கிக் கொண்டு வாருங்கள்.

விச்சு: கடைசிப் பீரியட்லே, மிலிட்டரி பாண்டு மாதிரி எல்லோரும் டொக் டொக் என்று கடலை உடைத்துத் தின்னலாம்.

(பாலு அவசரமாக வருகிறான்)

பாலு: பசங்களா! இந்த வாத்தியார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நமக்கு பட்டை நாமம் சாத்தி விட்டார்கள்.

மணி: என்னடா விஷயம்! நம்மை ஸ்டிரைக் நடத்த விடாமல், நம் கோரிக்கைக்கு ஒப்புக் கொண்டு விட்டார்களா!

பாலு: நம்பளை, 'காப்பி அடிக்காதே, காப்பி அடிக்காதே' என்று சொல்லும் உபாத்தியாயர்கள், இந்த ஸ்டிரைக் விஷயத்திலே நம்மை காப்பிஅடிச்சுட்டா! இன்றைக்கு அவர்களும் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள்.

விச்சு: அது தான் ஒரு தலைப்பாவும் தட்டுப்படக் காணோம்.

(கிட்டு வருகிறுன்)

கிட்டு: பிரதர்ஸ்! இன்றைக்கு நமக்கு லீவு. வாத்தியார்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை.

மணி: அடேடே! நாம் என்ன பண்ணுவது? இன்றைக்கு நாம் ஸ்டிரைக் செய்தாக வேண்டுமே. இல்லாது போனுல் கேவலமல்லவா! ஹெட் மாஸ்டரைப் போய்ப் பார்ப்போமா?

(சுந்தா வருகிறுன்)

சுந்தா: ஹெட் மாஸ்டரும் ஸ்டிரைக் பண்ணிட்டார் தெரியுமா!

மணி: அவரும் இந்த வாத்தியார்களோட சேர்ந்துட்டாரா?

சுந்தா: இல்லே இல்லே. கலாட்டாவிற்கு பயந்து கொண்டு மானேஜ்மெண்டிற்கு இந்த வேலேயே வேண்டாமென்று எழுதிப் போட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்து விட்டார்.

மணி: அவர் தான் கெட்டிக்காரர். காரியவாதி. நிஜமாகவே ஸ்டிரைக் பண்ணிவிட்டார்.

கிட்டு: சர்வம் ஸ்டிரைக் மயம் ஜகத்! எங்க அம்மா, ஸ்டிரைக் பண்ணப் போக, நமக்கு ஒரு ஐடியா தோன்றிற்று. நம்ம ஐடியா, ஹெட்மாஸ்டரோட வேலேக்கே உலே வைத்து விட்டதே.

மணி: நல்ல வேளே! இந்த ஹெட்மாஸ்டர் ராஜினுமாப் பண்ணினதில், அவர் பிரம்புதான் நிஜ வேலே நிறுத்

தம் செய்திருக்கிறது. அந்தப் பிரம்பு நம்மை என்ன பாடு படுத்தியிருக்கிறது?

விச்சு: அப்படியானால் நம்ம ஸ்டிரைக்கை "கால் ஆப்" பண்ணி விடலாமே!

மணி: சரி! இனிமேல், அடுத்த ஸ்டிரைக் மத்தியானம் மூன்று மணிக்குமேல் வகுப்பு நடத்தக் கூடாது என்பதற்காகத்தான்.

(போகிறார்கள்)

# 10. உலக இயல்பு

*கோமதிஸ்வாமிநாதன்*

[காலை வேளை கதாநாயகர் ராமசாமி தூங்கிக்கொண் டிருக்கிறார். அவர் மனைவி லக்ஷ்மி கையில் விளக்கு மாறுடன் அவரை எழுப்ப முயற்சி செய்து கொண் டிருக்கிறாள்]

லக்ஷ்மி: என்ன! உங்களைத்தானே! நாளும் கிழமை யும், இப்படி கும்பகர்ணன் மாதிரி உருண்டு கிடந் தால் என்ன செய்வது? எழுந்திருங்கோ.

[ராமசாமி புரண்டு படுத்துக் கொள்கிறார்] அடடா! இன்றைக்கு தை வெள்ளிக்கிழமை. வீட்டைப் பெருக்கி மெழுகிவிட்டு மற்ற காரியங்களைக் கவனிக்க ஆரம்பிக்க வேண்டும்; எழுந்திருங்கோ தயவு செய்து.

ராமசாமி: கண்ணை மூடிக் கொண்டே பிசாசுகள்ளு பாதி ராத்திரியிலே பிராணனை வாங்கும் என்பார்கள். இப்பத்தான் பன்னிரண்டு மணி அடித்திருக்கு. கண்ணை மூடி ஐந்து நிமிஷம் ஆகவில்லை. அதற்குள் பெருச்சாளி துளைக்கிறமாதிரி ஆரம்பிச்சுட்டியா?

லக்ஷ்மி: இன்னும் கொஞ்சம் நாழியானால் பகல் பன் னிரண்டு மணி அடிக்கும். தூக்கக் கலக்கம் என்கிற சாக்கை வைத்துக் கொண்டு நல்ல நாளும் கிழமை யுமா என்னை பிசாசு, பெருச்சாளி என்று புகழ்ந்து வர்ணிக்க வேண்டாம். படுக்கையைச் சுருட்டிண்டு வாசல் திண்ணையிலாவது போய் குறைத் தூக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள்.

ராமசாமி : (கண்ணை விழிக்காமலேயே) ஆட்டம் பாம் தலையில் விழுந்தால் கூட சகித்துக் கொண்டு விடலாம். நீ அரிக்க ஆரம்பித்தால், தாங்க முடியாது! கொஞ்ச நேரம் வாசலிலாவது போய் படுத்துக் கொள்கிறேன். (கண்ணை விழிக்கிறார்) ஐயய்யோ! என்னடி! இப்படி கைகாட்டி மரம் மாதிரி விளக்கு மாற்றைக் கையில் வைத்துக் கொண்டு நிற்கிறாய்? அதன் முகத்திலல்லவா நான் இன்று முழித்து விட்டேன்? என்னென்ன ஆபத்தெல்லாம் காத்திருக்கிறதோ தெரியவில்லை!

லக்ஷ்மி : வர ஆபத்தை யெல்லாம் அந்த விளக்குமாற்றாலேயே விரட்டி விடலாம்! அதற்காக என்னை கை காட்டி மரம், கை காட்டாத மரம் என்றெல்லாம் பட்டப் பெயரிட்டு அழைக்க வேண்டாம். ஒரு கை காட்டி மரமும் இப்படி மாடாய் உழைக்காது. எழுந்திருங்கோ சீக்கிரம்!

*[ராமசாமி படுக்கையைக் கையில் சுருட்டிக் கொண்டு வாசற் பக்கம் நோக்கிக் கிளம்புகிறார். ரேழி வாசற்படி பக்கம் காலில் ஏதோ தட்டுப் படுகிறது. துள்ளிக் குதிக்கிறார்.]*

ராமசாமி : லக்ஷ்மி! லக்ஷ்மி! சீக்கிரம் விளக்கை இப்படி கொண்டாடி! ஏதோ வழுவழுன்னு காலில் தட்டுப் பட்டது! பாம்பு போலே இருக்கேடி!

*[லக்ஷ்மி விளக்கைக் கொண்டு வந்து பார்த்து விட்டு மிகவும் சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொள்கிறாள்.]*

லக்ஷ்மி : ஒன்றுமில்லை. நீங்கள் போய் வாசலில் படுத்துக் கொள்ளுங்கள்.

ராமசாமி: என்னடி! அவ்வளவு அலக்ஷியமாய்ச் சொல்கிறாய்! எனக்கு மயக்கமாய் வராப் போலிருக்கிறது. அது என்ன பாம்போ தெரிய வில்லையே! டாக்டருக்குச் சொல்லி விடு.

லக்ஷ்மி: சேப்பங் கிழங்குத் துண்டத்தை மிதித்தால் ஒருவருக்கும் மயக்கம் போடாது! நேற்று ராத்திரி சமையலறையிலிருந்து எலி ஒரு துண்டத்தைக் கொண்டு போட்டிருக்கிறது. பயப்படாமல் பாருங்கோ! சேப்பங் கிழங்கிற்கு விஷம் கிடையாது!

ராமசாமி: இவ்வளவு தானா! இதை அப்பவே சொல்லித் தொலைக்கக் கூடாதா?

[ ராமசாமி திண்ணைக்கு வருகிறார். அதே சமயம் பால்கார முனிசாமியும் அங்கு வருகிறான். ]

முனிசாமி: ஆம்பிட்டுக்கிட்டீங்களா? இத்தனை நாள்தான் சாமி தூங்கராரு தூங்கராரு என்று அம்மா சால் ஜாப்பு சொல்லிகிட்டு இருந்தாங்க! சாமி! ரூபாய் கீபாய் கொடுக்கிறதாக உத்தேசமா? இல்லையா?

ராமசாமி: என்னப்பா முனிசாமி எக்ஸ்பிரஸ் வேகத்திலே ஆரம்பிச்சுட்டே.

முனிசாமி: கூட்ஸ் வண்டி மாதிரி பேசி இனிமே பிரயோசனமில்லீங்க! தாக்ஷண்யம் பார்த்தால் ஏமாறுவது தான் மிச்சம். இன்னிக்கு நீங்க எப்படியும் பணத்தைக் கீழே வச்சுட வேண்டியதுதான்.

ராமசாமி: அடேயப்பா! சடபுடன்னு பட்டாசு மாதிரி வெடிக்கிறயே! உத்தியோகத்திலே பிரமோஷனை எதிர்

பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது கிடைத்ததும் முதல் சம்பள ரூபாய் உனக்குத்தான்.

முனிசாமி: உத்தியோகத்திலே உங்களுக்கு அடுத்த பிரமோஷன் பென்ஷன் தான் சாமி! இந்தக் கதையெல்லாம் என்னிடம் அளக்காதீங்க! நீங்களாகக் கொடுக்கரபோது வாங்கிக்கனும்னு என்னோட பேரனோ அவனுக்குப் பேரனோதான் வாங்க முடியும். அவ்வளவுக்குப் பொறுமை நம்மிடம் இல்லீங்க. இன்றைக்கு எப்படியும் கொடுத்தாக வேண்டும். நீங்க பணம் கொடுக்கும் வரை நான் பால் விடப் போவதில்லை (போகிறான்).

ராமசாமி: பேஷ்! முதல் ஆபத்து காப்பிக்கே வந்து விட்டதாக்கும்! இன்னும் கொஞ்சம் தூங்கிவிட்டு அப்புறம் அதைப்பற்றி கவலைப் படலாம்.

[ படுத்துக் கொள்கிறார். சிறிது நேரம் கழித்து கோபாலன் அந்தப் பக்கம் வருகிறான் ]

கோபாலன்: மிஸ்டர் ராமசாமி? ராமசாமி!

ராமசாமி: பாதித் தூக்கத்துடன், ஹூம்! ஹூம்!

கோபாலன்: இன்னமா தூக்கம், மணி எட்டாகப் போகிறது! வெய்யில் எண்ணூறு டிகிரிக்கு அடிக்கிறது! எழுந்திருங்காணும்.

ராமசாமி: (தூக்க மயக்கத்துடன் விழித்துக் கொண்டு) என்ன! எட்டாம் நம்பர் குதிரை எண்ணூறு ரூபாய் கொடுத்தது நிஜமா!

கோபாலன்: எட்டாம் நம்பர் குதிரை சிட்டாய் பறந்து மற்ற குதிரைகளை யெல்லாம் ஒரு துறத்து தூரத்திற்

ரும்! எழுந்திருங்காணும்! எழுந்திருக்கர போதே குதிரை வாலைப் பிடித்துக் கொண்டே தொங்கு கிறீரே!

ராமசாமி: கோபாலனா! வாப்பா! வா? ஒரு பிரும்மானந்தமான ஸ்வப்பனங் கண்டு கொண்டிருந்தேன், வேறு ஒன்றும் இல்லை உட்காரு! எங்கே வந்தாய்?

கோபாலன்: ஒரு அவசர விஷயமாய்த்தான் வந்தேன்! அன்றைக்கு கைமாத்தாக வாங்கிக் கொண்டீர்களே, இருபது ரூபாய். அது இப்போது அவசரமாகத் தேவையாக இருக்கிறது. என் தம்பி வேலை விஷயமாய் பம்பாய்க்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

ராமசாமி: அடேடே! நேற்றே சொல்லியிருக்கக் கூடாதா? இப்போதுதான் பால்காரன் கையில் பதினைந்து ரூபாயைக் கொடுத்தேன். உனக்கு வேண்டுமென்று தெரிந்திருந்தால் அவனுக்குக் கொடுப்பதையாவது நிறுத்தியிருப்பேனே! தேதி நாலு ஆய் விட்டதோல்லியோ! கையிலே காலணா இல்லை.

கோபாலன்: எப்படியாவது நீங்கதான் பார்த்துத் தர வேண்டும், அவசர விஷயம்.

ராமசாமி: முதலில் ஒரு கப் காப்பி ஸ்டிராங்காகச் சாப்பிடும். பிறகு மற்றதைப் பற்றி யோசிப்போம். லக்ஷ்மி! லக்ஷ்மி!

லக்ஷ்மி: (ரேழியில் நின்று கொண்டு) என்ன!

ராமசாமி: ஜோராய் நம்ப கோபாலனுக்கு ஒரு எக்ஸ்ட்ரா ஸ்டிராங் காப்பி கொண்டு வா?

லக்ஷ்மி : காப்பியா? பால்காரன்தான் ரூபாய் வரும்வரை பால் தரமாட்டேனென்று சொல்லிப் போய்விட்டானே. நான் எப்படி காப்பி போட முடியும்?

ராமசாமி : சரி! சரி! நீ உள்ளே போ! இன்றைக்கு வெள்ளிக் கிழமை. உபவாசம் என்பதை மறந்தே போய் விட்டேன்......அப்புறம் கோபாலா? அவசரத்திற்கு எங்காவது பார்த்துக் கொள்; நாளைக்கு சாயங்காலத்திற்குள் நான் தந்துவிடுகிறேன்.

கோபாலன் : நாளை சாயங்காலத்திற்குள் இருபது ரூபாய் எங்கேயாவது கண்டெடுக்கப் போகிறீர்களா? அது சரி......காலையிலே பால் காரனுக்கு ரூபாய் கொடுத்ததாகச் சொன்னீர்கள். ஆனல் அதற்கு முற்றிலும் விரோதமான செய்தி உள்ளிருந்து வருகிறது. இந்த மாதிரி ரகத்தைச் சேர்ந்ததுதானே நீங்கள் நாளைக்கு எனக்குப் பணம் தரும் விஷயமும்!

ராமசாமி : கோபாலா அவளுக்கு என்னடா தெரியும். என்னமோ உளறுகிறுள்! நான் பணங் கொடுத்தது பழைய பால்காரனுக்கு அல்லவா!

கோபாலன் : உள்ளே கேட்டால் நீங்கள் உளறுகிறீர்கள் என்பாள். இந்த விவகார மெல்லாம் எனக்கு எதற்கு? நீங்கள் நாளைக்கு ரூபாய் கொடுத்து விடுவேனென்று சொல்வதி லெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகையால் போகும் வழியில் கிருஷ்ண சாமியையும், பங்காரு சாமியையும் பார்த்துவிட்டுப் போகிறேன்.

ராமசாமி : எதற்கு?

கோபாலன் : அவர்கள் இரண்டு பேரிடமும் போய் ராமசாமி என்னுடைய பாக்கியைக் கொடுத்து விட்டார் என்று சொல்லி விடுகிறேன். அவர்கள் இரண்டு பேரும், தங்கள் பாக்கிக்காக இப்போதே வந்துவிடுவார்கள். சரிதானே !

ராமசாமி : ஐயய்யோ ! அதுமாத்திரம் செய்துடாதே அப்பா ! கண்டிப்பாக நாளைக்குத் தந்து விடுகிறேன்.

கோபாலன் : எதற்கும் அவர்களைப் பார்த்துவிட்டே போகிறேன். (போகிறார்)

ராமசாமி : லக்ஷ்மி ! லக்ஷ்மி !

லக்ஷ்மி : என்ன ?

ராமசாமி : உன் முகத்தில் விழித்தேனே ? இன்றைக்கு காலையிலே விளக்குமாற்றோடு காக்ஷி யளித்தாயோ ! இல்லையோ, அதற்கு நல்ல பலன்கள் கைமேலே கிடைத்துக் கொண்டிருக்கு. முதலில் காப்பி போச்சு ! இரண்டாவது மானம் போச்சு.

லக்ஷ்மி : என்னையேன் கரிச்சுக் கொட்டுகிறீர்கள். நானும் எங்காவது தொலைந்து போகிறேன்.

ராமசாமி : நீ நினைத்த போது பிரிவிலேஜ் லீவு எடுத்துக் கொண்டு பிறந்த வீட்டிற்குப் போய்விடலாம். வேலை செய்யாமலே லீவு கிடைத்துவிடும். எங்களைப் போலேயா ? இன்னும் ஆபீசிலே போயி எவ்வளவு வசவுகள் அந்தத் துரையிடம் வாங்கவேண்டி யிருக்கிறதோ?

லக்ஷ்மி : என்ன ! நீங்கள் வையும்போது எப்படி இருக்

கிறது? எளியாரை வலியார் வாட்டினுல் வலியாரை தெய்வம் வாட்டும்.

ராமசாமி: பழமொழிகளையும், காய்மொழிகளையும் உளுப்பித் தள்ளுகிறுயே! வழக்கமான சகஸ்ரநாமத்திற்கு நான் பயப்படவில்லை. இன்றைக்கு வெண்சாமரத்தின் முகத்தில் முழித்ததன் பலனுக லக்ஷார்ச்சனை கிடைக்கக் கூடாதே என்று துன்பப் படுகிறேன். உம்ம வேலை வேண்டாம். வீட்டுக்கு போன்னுட்டானு என்ன பண்றது!

லக்ஷ்மி: காப்பி போச்சு! மானம் போச்சு! வேலையும் போச்சு! என்று வீட்டிலே உட்காருங்கோ.

ராமசாமி: இந்த மனே வேதனையோடு ஆபீஸ் போகக் கூடாது. அந்த லட்டர் பேப்பரை எடு. லீவு லெட்டரை எழுதி அனுப்புகிறேன்.

லக்ஷ்மி: நல்ல யோசனை! ஹோட்டலுக்குப் போய் காப்பியும் டிபனும் வாங்கிண்டு வாங்கோ, கொஞ்சம் சாவகாசமாகவாவது சமைக்கின்றேன்.

(ஆபீஸ் பியூன் சக்ரபாணி வருகிருன்)

ராமசாமி: கேட்கப்போன கடன்காரன் கூப்பிட்டுக் கொடுத்த மாதிரி சக்ரபாணியே வந்து விட்டான். டேய்! இந்தா! இந்த லீவு லெட்டரை ஆபீசிலே கொடுத்துடு, ஐயாவுக்கு ஜுரமாக இருக்குன்னு சொல்லு.

சக்ரபாணி: சாமி! அங்கே துரை எரிமலை மாதிரி புகைஞ்சுக்கிட்டு இருக்கான்.

ராமசாமி : பெரிய சுருட்டாக் கையிலே பிடித்துக்கொண் டிருக்கிருனே.

சக்ரபாணி : இல்லே சாமி. ரொம்ப ரொம்பக் கோபமா இருக்கான். கும்பகர்ணன் மாதிரி தூங்கரவன் கோபத்திலே அனுமார் மாதிரி உர் என்று உட்கார்ந் திருக்கான்.

ராமசாமி : (குரல் நடுங்க) லக்ஷ்மி! லக்ஷ்மி! ஆபத்து வந் தது. சக்ரபாணி சொல்றதைப் பார்த்தால் இன் னிக்கு வேலேக்கே சீட்டைக் கிழிச்சுடுவான் போலே இருக்கு. நான் இப்படியே காசிக்குப் போயிடலாம் என்று பார்க்கிறேன்.

சக்ரபாணி : பயப்படாதீங்க சாமி! நீங்க காசிக்கும் போக வேண்டாம்; கன்யாகுமரிக்கும் போக வேண் டாம்! உங்களுக்கு உத்தியோகம் பிரமோஷன் ஆயி ருக்குங்க! அந்த உதவி மானேஜர் வரதாச்சாரி திடீ ரென்று ராஜிநாமா பண்ணிட்டு வேறே இடத்திலே சேர்ந்திட்டாரு. அதனுலே உங்களே உதவி மானேஜ ராக்கி இதோ ஆர்டர் கொடுத்திருக்காரு துரை! இந் தாங்க. ஜோரா சூட்டுக் கீட்டு மாட்டிக்கிட்டு ஆபீ சுக்கு புறப்படுங்க! நம்மையும் கொஞ்சம் கவனிச் சுக்குங்க!

ராமசாமி : நிஜமாவா! நிஜமாவா! லக்ஷ்மி! இங்கே வாடி! அந்த வெண்சாமரம் எங்கேடி அதுக்கு ஒரு பூமாலே வாங்கிப் .போடனும்.

லக்ஷ்மி : இப்போ மாத்திரம் அது உசத்தியாகப் போயிட்

டதோ! இவ்வளவு நேரம் அதைக் கரிச்சுக் கொட்டினீர்களே.

ராமசாமி: ஒரு மனுஷாளாலேயோ? சாமானுலேயோ அனுகூலம் ஏற்பட்டாதான் அதற்கு மதிப்பு. பிரதிகூலம் ஏற்பட்டால் அதை வெறுப்பது உலக இயல்பு. இப்போ எங்கே அந்த விளக்குமாறு?

லக்ஷ்மி: ஒரு ரூபாய் கொடுத்தாலும் விளக்குமாறு அகப்படாத காலம். உங்ககிட்டே கொடுக்கமாட்டேன்.

ராமசாமி: பரவாயில்லே. அதை நீ கையில் வைத்திருக்கக் கண்டுதானே அதன் முகத்தில் விழிக்க நேர்ந்தது. ஆகையால் இந்தப் படத்திலிருக்கும் ஜரிகை மாலையை உன் கழுத்திலேயே போடுகிறேன். உன் முகத்தில் விழித்தேனே! அதிருஷ்டந்தான்! போடுகிறுர்.

லக்ஷ்மி: வாய் அளப்போடு நிற்காமல் கடன் சொல்லியாவது ஒரு நல்ல சில்க் புடவை வாங்கிண்டு வாங்கோ. அதுக்கு முன்னாலே காப்பிக்கு ஏற்பாடு நடக்கட்டும்.
(போகிறுர்கள்)

# 11. சௌமியனின் காதல்

*கோமதிஸ்வாமிநாதன்*

*[மாலை வேளை. மாணவர்கள் ஹாஸ்டல் மாடியில் சௌமியநாராயணனின் அறை. அவன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துத் தாழ்ந்த குரலில் பாடிக் கொண்டிருக்கிறான்.]*

சௌமியன் : *(பாடுகிறான்)*

*மனமோகனாங்க அணங்கே—தோன்றுதே*
*கனவிலும் உன்முகம்* (மன)

*[சௌமியனின் நண்பன் கோண்டு டென்னிஸ் ராக் கெட்டுடன் உள்ளே வருகிறான்.]*

கோண்டு : *சௌமியா! என்னப்பா வெட்ட வெளியைப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறாய்! இன்றைக்கு டென்னிஸ் மாட்ச் இருப்பது நினைவில்லையோ? கிளம்பு! கிளம்பு!*

சௌமியன் : *(பாடுகிறான்)*

*பிரேமையில் யாவும் மறந்தேனே—பிரேமையில்*

கோண்டு : *அதென்னப்பா மை? புது மாதிரி மையாக இருக்கு! ஸ்வான் மையா? பார்க்கர் மையா......... அதுசரி, ஒரேடியாய் துஷ்யந்த மகாராஜா மாதிரி ஆயிட்டாப் போல இருக்கு. சகுந்தலை எங்கேப்பா?*

சௌமியன் : *(ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டே) அதோ! அதோ! மாணவிகள் ஹாஸ்டல்*

வாசலில்! மூன்ரும் பிறை தெரிவது போல் தெரிகிறது அவள் உருவம்......அடடா! என்ன ஏமாற்றம்! உள்ளே போய் விட்டாளே!

(பாடுகிருன்)

அந்த நின்றயே அதற்குள் மறைந்தாயே
ஏந்துமுனை நான் தேடியலேவேன் இந்த வாராயோ

கோண்டு: ஓஹோ ஹோ! இது நிஜ சகுந்தலை விவகாரமா? பிரதர்! எந்த ஊதல் காற்று இந்தக் காதல் பைத்தியத்தைக் கிளப்பி விட்டதப்பா?...... இனிமேல் உன்னிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் பழக வேண்டும் ......டேய் மண்டு! நீ உண்டு உன் காரியம் உண்டு என்று புத்தியைப் படிப்பில் செலுத்தி மானமாய்ப் பரீட்சை பாஸ் செய்துவிட்டுப் போகாமல், இந்தப் பிரேமைப் புயலிலும் காதல் சுழலிலும் கழுத்தை நுழைத்துக் கொண்டு விழிக்காதே!

சௌமியன்: புத்தி என் சுவாதீனத்தில் யிருந்தாலல்லவா அதைப் படிப்பில் செலுத்த! அதை அன்றைக்கே அவள் கடைக்கண் வீச்சினுல் கரைத்து விட்டாள்!

(பாடுகிருன்)

நீலக்குமுதமலர் அவள் நீண்ட விழிக்கிணையோ
பாலைப் பொழி நிலவும் கடைக் கண் பார்வைக் கிணையாமோ

கோண்டு: சரி! நான் வரேன்! நீ இருக்கிற தினுசைப் பார்த்தால் என் மனசையும் குழப்பி விடுவாய் போலி ருக்கிறது!

சௌமியன் : (பாடுகிருன்)

எந்தன் வலது தோளும் கையும் துடிப்பதென்ன
இன்பம் வருவதென்று சொல், சொல், சொல் மனமே

ஆஹா ஹா! அதோ வெளியே வருகிருள்! பாட்மின்டன் ஆடப்போகும் அவள் அழகை வருணிக்க அந்தக் காளிதாசனே இன்றைக்குத் திண்டாடிப் போயிருப்பான்! அந்தக் காலத்துச் சகுந்தலை இவள் கால் தூசிக்கு ஈடாவாளா? ஆஹா! பிரமாதம்!

கோண்டு : நீ மாத்திரம் என்ன? அந்தக் காலத்து துஷ்யந்தன் போல ரதத்தில் வந்து முனிபுங்கவர்களின் யாகத்தை ரட்சிக்கப் போகிருயா? ஸ்டைலாக ஜன்னல் வழியாக மின்னல் கொடியாளை திருட்டுத்தனமாய்ப் பார்க்கிருய்!

சௌமியன் : நானும் அந்தத் துஷ்யந்த மகாராஜா போல் விடு விடென்று நேரில் போய், "காலில் முள் தைத்திருக்கிறதா? கையில் கால்குலஸ் நோட் புஸ்தகம் இருக்கிறதா?" என்று கேட்டு விடுவேன். அப்புறம் காலேஜ் நோட்டீஸ் போர்டில் என் பெயர் 'கேடி' லிஸ்டில் வந்து விடுமோ என்றுதான் பயப்படுகிறேன்.

[ஹாஸ்டல் வேலைக்காரப் பையன் வந்து ஒரு கடிதத்தைச் சௌமியனிடம் கொடுத்துவிட்டுப் போகிருன். ஆவலுடன் அதை உடைத்துப் பார்த்த சௌமியனின் முகத்தில் வர வர உற்சாகம் குறைகிறது. கடைசியில் கடிதத்தைக் கசக்கித் தூரப் போடுகிருன்.]

கோண்டு : நீ கடிதத்தைக் கையில் வாங்கின ஜோரைப் பார்த்தால் தாமரை இலையில் தான் யாரும் கை நகத்

தால் காதல் பாஷை எழுதி யிருக்கிருளோ என்று நினைத்தேன். கடைசியில் அது வெறும் கரட்டுக் காகிதத்தில் முரட்டுப் பேனுவினுல் வரட்டுத் தனமாக எழுதப்பட்ட சமாசாரம் போலிருக்கிறது!

சௌமியன்: நான்சென்ஸ்! அப்பாவிற்குக் கல்யாணப் பைத்தியம் முற்றிப்போச்சு!

கோண்டு: உங்க அம்மா சம்மதித்தால் அவர் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமே!

சௌமியன்: அவருக்கில்லையப்பா! எல்லாம் எனக்குத் தான்! இந்த ஆவணி மாதத்திற்குள்ளேயே அந்தக் கல் யாண எழவை முடித்து விடவேணுமாம்! அவருக்குச் சாதகமாக யாரோ ஒரு கட்டுப்பெட்டி எனக்குப் பெண் கொடுக்கிறேனென்று வந்திருக்கிறதாம். மேற்படி கட்டுப்பெட்டி என்னையே நேரில் பார்த்துப் பேச அப்பாவின் அனுமதி பெற்று வந்திருக்கிற தாம்! பேரே ஒரு மாதிரி இருக்கு: "வாஞ்சி ஐயராம்!"

கோண்டு: ஆசாமி பெண்ணிற்கு வரன் தேடித் தேடிக் காஞ்சு போயிருப்பார் போலிருக்கிறது.

சௌமியன்: அதைவிட ஆச்சரியம் என்னவென்ருல் அப்பா இந்த ஆசாமிக்குச் சாதகமாகச் சான்சு பேசி இங்கே அனுப்பி வைத்திருக்கிருரே! அவர் தான் என்னை இங்கு ஏழு மணிக்கு வந்து சந்திப்பதாக வார்டனிடம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருக் கிருர்! அந்தக் கடிதம்தான் இது.

கோண்டு: பேசாமல் அவர் வந்ததும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி, பஞ்சாங்கத்தை எடுத்துக் கையில்

கொடு. மனுஷன் டக் என்று முகூர்த்தத்தைப் பார்த்துச் சொல்லிவிட்டு மாப்பிள்ளையைப் பார்த்து மனமகிழ்வார்.

சௌமியன் : என்ன கோண்டு! புரளி பண்ணுகிருய்? இந்தக் கண் இனிச் சகுந்தலாவைத் தவிர வேறு வனிதையைப் பார்க்காது. இந்த வாய் அவள் பெயரைத் தவிர வேறு பெயரை உச்சரிக்காது. இந்த இதயம் அவள் உருவைத் தவிர வேறு உருவத்தைக் கோவில் கொள்ளாது...இந்த அப்பா இல்லே, அவருக்கு அப்பா வந்தாலும் அசைபவன் நானல்ல! சௌமியனு ஏமாறுவான்? கோண்டு! நீ தான் ஒரு யோசனே சொல்லி இந்த வாஞ்சியிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!

கோண்டு : ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தைச் செய் என்பார்கள். நீ என்னடா வென்றுல் ஒரு பொய் சொல்லிக் கல்யாணத்தை நிறுத்து என்கிருய்! நான் இதோ டென்னிசிற்குக் கிளம்பி விட்டேன். உன் பாடு உன் மாமனுர் பாடு!

சௌமியன் : மாமனுருமாச்சு! வாழைநாரு மாச்சு! என் மாமனுர்......

கோண்டு : கண்வ மகரிஷி தானுக்கும்?

சௌமியன் : விளையாட்டு வேண்டாம்....ஆஹா! எனக்கு ஓர் அபார யோசனே தோன்றுகிறது......அதன்படி செய்யலாமா?

[கோண்டுவின் காதில் ஏதோ சொல்லுகிருன்.]

கோண்டு : யோசனே எல்லாம் நன்ருகத் தானிருக்கிறது... ஆனல் மோசம் போகாமலிருக்க வேண்டும். ஒரு

வேளை இந்த மனுஷன் வெளியில் போய் ஏதாவது உளறி, அதை உன் காதலி சகுந்தலாவின் தந்தை நம்பி விட்டால்?

சௌமியன்: சே! சே! அவர் அப்படி முட்டாளாயிருக்க மாட்டார்!

கோண்டு: அடேயப்பா! தெரியாத ஆள்மேலே எவ்வளவு கரிசனம்?...சரி, இன்றைக்கு டென்னிஸ் மாட்ச்சுக்கு போக முடியாததற்கு அப்புறம் காப்பி சப்ளை செய்து விடு!

சௌமியன்: ஓ எஸ்!

[கோண்டு வெளியே எட்டிப்பார்த்து ஹாஸ்டல் வேலைக் காரப் பையனைக் கூப்பிடுகிறான். பையன் வருகிறான்]

கோண்டு: பையா! நம்ப பணிக்கர் ஸ்டாலுக்குப் போய் நான் சொன்னதாகச் சொல்லி இரண்டு புது சிகரெட் பெட்டியும் நாற்பது காலி சிகரெட் பெட்டியும் வாங்கிக் கொண்டு வா, எல்லாம் ஒரே ரகமாக இருக்க வேண்டும். காலிப் பெட்டிகளைப் பத்திரமாகத் திருப்பி அனுப்புவதாகச் சொல்.

பையன்: சரி சார்!

சௌமியன்: அதெல்லாம் வாங்கிக் கொண்டு வரும்போது நம்ப ஹாஸ்டல் சலூன் குருசாமி கிட்டே போய் நாலு சினிமா ஸ்டார் படம் — புதிசா கண்ணாடி போட்டு வைத்திருக்கிறான்...அதை வாங்கிக் கொண்டு வா!... எல்லாம் ஒரே ரகமாக இருக்கட்டும்! இந்தச் சீட்டைக் கொடுத்தால் அவைகளைக் கொடுப்பான்!

[சீட்டு எழுதிப் பையனிடம் கொடுக்கிறான். பையன் போகிறான்.]

கோண்டு எப்படி யோசனை ?

கோண்டு : பலே யோசனை தான்! நீ தான் ரொம்ப இயற்கையாய் நடிக்கணும். நாடகத்தின் முடிவு ஒரு அபார எபக்டை (effect) உண்டாக்கி வாஞ்சி ஐயரை ஓட வைக்கணும்! .... மறந்து போயிடாதே! அந்தக் கிராப்பை வில்லன் ஸ்டைலில் இழுத்து விட்டுக்கொள். அவருடன் பேசும்போது ஒரு வினாடி கூடச் சிகரெட்டை உதட்டை விட்டு எடுக்கக் கூடாது.

சௌமியன் : எனக்குச் சிகரெட் பிடித்தே பழக்க மில்லையே !

கோண்டு : அதற்கென்ன பண்ணுவதாம் ? 'களவும் கற்று மற' என்பது வேதவாக்கு அல்லவா ? சும்மா கொல்லன் பட்டரையில் துருத்தி ஊதுவது போல் புகையை ஊதிக்கொண்டே இரு. சங்கோஜமில்லாமல் ஓரிரண்டு பாட்டுக்களையும் பாடிவை.

[அதே அறை சிறிது நேரத்திற்குப் பிறகு]

சௌமியன் : ( பாடுகிறான் )

கனிஞ்ச பழத்தில் ஆசை வச்சு
கலங்கி நிக்கறேன்—கோண்டு
துணிஞ்சு இறங்க பயந்துகிட்டு தாமதிக்கறேன்

கோண்டு : அதெல்லாம் சரிதானப்பா! இந்த மாதிரி தன்னையே நினைந்துருகும் பைத்தியம் ஒன்றிருக்கு என்று சகுந்தலாவிற்குத் தெரியுமா ?

சௌமியன்: அதைப்பற்றி நான் அக்கரை யெடுத்துக் கொள்ளவில்லை!

கோண்டு: அப்படீன்னு பாதிக் கிணறு தாண்டிய விஷயம் தான்!

சௌமியன்: ஒன்றரைக் கிணறு தாண்டினுப் போலே! அன்று கல்லூரி கலா சேவா சங்கத்தில் நான் 'காதலும் கல்யாணமும்' என்ற விஷயத்தைப் பற்றிச் சொற்பொழி வாற்றினேனே! அன்று உடனே அவள் என்னிடம் வந்து என் கையைப் பிடித்துக் குலுக்கி, "வெளுத்து வாங்கி விட்டீர்களே!" என்று புகழ்ந்தாள்.

கோண்டு: அந்த விநாடியிலிருந்து உன் புத்தி சுவாதீனத்திலிருந்து தப்பிப் போய் விட்டதாக்கும்?

சௌமியன்: ஆஹா, ஹா! இந்தக் கை என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்!

(பாடுகிறான்)

ஆனந்தம் என் சொல்வேனே—
என் கை படைத்த பயனே (ஆனந்த)

பரீட்சை முடியவேண்டும். இந்த பக்தன் அந்தப் பரதேவதையின் காலில் விழுந்து தன்னை அங்கீகரிக்கப் பிரார்த்திப்பான்.

கோண்டு: உஷ்! வராண்டாவிலே யாரோ வாரப்போலே இருக்கு. நீ நாடகத்திற்கு ரெடியாக இருந்து கொள்.

[சௌமியன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு கிராப்பைப் புதுப்பாணியில் வாரி விட்டுக்

கொண்டு சாய்வு நாற்காலியில் உட்காருகிறன். வாஞ்சி ஐயர் உள்ளே வருகிறர்.]

சௌமியன் : ஹல்லோ ! கமான் ! வாங்கோ ! நீங்கள் தானே வார்டனிடம் கடிதம் கொடுத்தீர்கள் ? உட்காருங்கள்.

[அவர் முகத்தில் சிகரெட் புகையை ஊதிக் கொண்டே, உட்காருவதற்கு ஸ்டூலைக் காண்பிக்கிறன். முகத்திலேற் பட்ட அருவருப்பு உணர்ச்சியை மறைக்க முயற்சித்த வாறு வாஞ்சி ஐயர் உட்காருகிறர்.]

கோண்டு : சௌமியா ! இவர் யாரப்பா ? எனக்கு அறிமுகப் படுத்லைவை.

சௌமியன் : எஸ் ! எஸ் ! இவர் மிஸ்டர் வாஞ்சி ! என் தகப்பனுர் அனுப்பி வைத்திருக்கிறர் !......இவர் என் ஆப்த நண்பர் கோண்டு......பிரபல சினிமா ஸ்டார் குமாரி கோகிலாவின் உறவினர்! என்ன வாஞ்சி ஐயர்வாள் ! ஸ்மோக் பண்ரேளா ?

வாஞ்சி ஐயர் : இல்லே ! இல்லே ! எனக்குப் பழக்கமில்லே.

கோண்டு : ஏனப்பா ! நம்ப நாயர் பங்க்லே யிருந்து நல்ல டீ வாங்கிண்டு வரச் சொல்லேன் !

வாஞ்சி ஐயர் : இல்லே ! இல்லே ! இப்பத்தான் சாப்பிட்டேன் !

கோண்டு : சௌமியா! இவர் ரொம்ப சங்கோஜப் படரார் போலிருக்கு ?

வாஞ்சி ஐயர் : அதெல்லாம் ஒன்றுமில்லே! உங்க சிநேகிதர் நம்ப மாப்பிள்ளேயா ஆயிட்டார்ஞ அப்புறம் சங்கோஜமாவது, கூச்சமாவது !

கோண்டு : ஓஹோ! பெரிய வலையாகத்தான் கொண்டு வந்திருக்கீங்க!

சௌமியன் : வாஞ்சி ஐயர்வாள்! அப்பா கடிதத்தைப் பார்த்தேன். அவர் அலக்ஷியமாக அணுகுண்டைத் தூக்கி வீசியிருக்கிறார்! என்னையும் அவரைப் போல சுத்தப் பத்தாம் பசலின்னு நினைச்சுட்டார் போலிருக்கு.

[ இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொள்கிறான் ]

வாஞ்சி ஐயர் : உங்களுக்குச் சிகரெட் பிடிக்கும் வழக்கமே கிடையாது என்று கேள்விப் பட்டேன்!

சௌமியன் : கேள்விப் படறதுக்கும் நேரிலே பார்ப்பதற்கும் வித்தியாசமில்லையா? வாழ்க்கையின் ரசனையே இதோ போகும் வட்ட வட்டமான சுழல் புகையில் இருக்கிறது. ஜீவரகசியமே சிகரெட்டின் உள்ளே தான்!......இதோ, இன்று காலையிலிருந்து நாற்பது பெட்டி காலியாகி யிருக்கிறது. இன்னும் இரவு படுக்கைக்குப் போவதற்குள் பத்து பெட்டிகளாவது தேவையாக இருக்கும்.

'சுருள் சுருளாகப் போகுமிந்த சுருட்டுப் புகையதனில் அருள் பொழியும் ஆண்டவனின் அரவிந்த முகமே கண்டேன்' என்று ஒரு பெரியார் தெரியாமலா சொல்லியிருக்கிறார்?

கோண்டு : சுருட்டைக் குடித்துப் பார், சுகத்தை நினைத்துப் பார் என்று கூட மற்றொரு பெரியார் சொல்லியிருக்கிறார்!

வாஞ்சி ஐயர் : பரவாயில்லை. சுருட்டு, பக்தி மார்க்கத்திற்குக் கூட வழி காட்டியாக இருக்கும் போலிருக்கிறது! மிஸ்டர் செளமிய நாராயணன்! நான் வந்த விஷயத்தைப் பற்றிப் பேசலாமா? அப்படி வராண்டாவிற்கு வருகிறீர்களா?

கோண்டு : ஓஹோ! செளமியா! அவர் உன்னிடம் தனிமையில் பேச விரும்புகிறார் போலிருக்கிறது! நான் வரட்டுமா?

செளமியன் : நான்சென்ஸ்! உனக்குத் தெரியக்கூடாத ரகசியம் எனக்கும் தெரிய வேண்டாம்! வாஞ்சி ஐயர்வாள்! நீங்கள் வந்த விஷயத்தைப் பற்றி இங்கேயே பேசலாம்! நானே முதலில் பேசுகிறேன். ......எனக்கு இந்த மாதிரிக் கட்டுப் பெட்டிக் கல்யாணத்திலே யெல்லாம் நம்பிக்கையுமில்லை...விருப்பமுமில்லை.

கோண்டு : என்னப்பா! இவரு புதிசாகக் கரடிவிட வந்திருக்காரா? அப்படீன்னு நம்ப கோகிலா கதி என்ன?

செளமியன் : என்னுடை லைப் அம்பிஷனே, வாழ்க்கையின் தத்துவமே, காதல் மணம்தான்!

கோண்டு : விஷயத்தை உடைத்துச் சொல்லப்பா! 'குமாரி கோகிலாவின் காதற் சுழலில் சிக்கியிருக்கிறேன். அவள்தான் கைகொடுத்து கரை யேற்றப் போகிறாள்' என்று சொல்லேன்.

செளமியன் : எஸ்! எஸ்! மேலும் நான் இந்த மாதமுடிவில் காலேஜ் படிப்பிற்கே தலை மூழ்கி விடப் போகி

றேன். பிறகு இனிமாத் துறையில் தலையை நீட்டப் போகிறேன். கபந்தா பிக்சர்ஸாரின் ஒரு காண்ட்ராக்டில் கையெழுத்துப் போட்டு விட்டால் பிறகு என்னை வெள்ளித் திரையில் தான் பார்க்கலாம். வெளியே பார்க்க முடியாது! கோண்டு, அந்தச் சிகரெட் டப்பாவை இப்படி நகட்டு!

வாஞ்சி ஐயர்: உங்க தகப்பனார் உங்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார். நீங்கள் பி. ஏ. பாஸ் பண்ணப் போகிறீர்கள், உடனே உயர்ந்த சர்க்கார் உத்தியோகத்தில் நுழைத்துவிட வேண்டும் என்றெல்லாம் சொன்னாரே!

சௌமியன்: அவருடைய கற்பனைக் கெல்லாம் நான் ஜவாப்தாரியா?

கோண்டு: சபாஷ்!

சௌமியன்: நீங்கள் மனவருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது! நான் இப்போது கல்யாணத்திற்குத் தயாரில்லை......அதோ, அந்த படங்களிலிருக்கிறாளே குமாரி கோகிலா! அவள் அந்தப் படங்களில் மாத்திரம் இல்லை; என் உள்ளத்திலும் இருக்கிறாள். ஆகையால் நீங்கள் வேறுவரன் பாருங்கள். இதெல்லாம் அப்பாவிற்குக் கூடத் தெரிய வேண்டாம். உங்கள் மனத்திற்குப் பிடிக்கவில்லை என்று மொத்தமாகச் சொல்லி விடுங்கள்.

கோண்டு: சீக்கிரம் கிளம்பப்பா! அவள் காத்துக் கொண்டிருப்பாள். இன்றைக்கு நவீன் கபேயில் டின்னருக்குத் திட்டமிட்டிருப்பதை மறந்து விட்டாயா?

சௌமியன் : (பாடுகிறான்)

*கண்ணின் கருமணியே என் காதற் கிளியவளே*
*உனை நினைப்பேன் சுந்தரி நான் ஓடியே வந்திடுவேன்.*

[வாஞ்சி ஐயர் எழுந்து வெற்றிலை துப்புவதற்காக வாராண்டாவிற்குப் போகிறார்.]

கோண்டு : (ரகசியமான குரலில்) *பேஷ்! உன் நடிப்பு பலே ஜோர்! அசல் கேடி!*

சௌமியன் : (இன்னும் ரகசியமான குரலில்) *இந்தச் சகுந்தலா பக்தன் இம்மாதிரி சோதனைகளில் தேறி விட்டால் அப்புறம் அவளை எப்படி அடைவதாம்? வாஞ்சி ஐயர் என்னைப் பற்றி எப்படி நினைத்துக் கொண்டாலும் பெண்ணைத் தலையில் கட்டாமல் பாஞ்சு ஓடி விட்டால் சரி!*

[வாஞ்சி ஐயர் உள்ளே வருகிறார்.]

வாஞ்சி ஐயர் : *சரி! நான் வந்த காரியம் முடிஞ்சு போச்சு, எதற்கும் நேரில் வந்து பார்த்தால்தான் விஷயம் புரிகிறது! உங்கள் அப்பா பேச்சை அப்படியே நம்பி நல்ல வேளை ஏமாறாமல் போனேன். இதில் ஆச்சரியம் என்னவென்றால் என் பெண்கூட அல்லவா உங்களைப் புகழ்ந்து சொல்லி விட்டாள்!*

சௌமியன் : (ஆச்சரியத்துடன்) *உங்கள் பெண்ணா? என்னைப் பார்த்திருக்கிறாளா என்ன?*

வாஞ்சி ஐயர் : (அலட்சியமாக) *பார்க்காமலென்ன? தினசரிதான் பார்க்கிறாள்!*

சௌமியன் : (பிரமிப்புடன்) *என்ன? தினசரியா? உங்கள் பெண் யார்?*

வாஞ்சி ஐயர்: (சர்வ அலட்சியமாக) யாராக இருந்தால் இனிமேல் உனக்கென்ன? அவள்தான் சகுந்தலா! இதே காலேஜில் இண்டர் மீடியட் வகுப்பில் வாசிக்கிறாள். மாணவிகள் ஹாஸ்டலில் இருக்கிறாள். குழந்தையின் நோக்கமும் உங்கள் பக்கமாக இருந்ததே என்றுதான் முயற்சியெடுத்துக் கொண்டேன்! நல்ல வேளை நான் பிழைத்தேன். உங்களுடைய உன்னத வழக்கங்களையும் பழக்கங்களையும் நேரிலே தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி ரொம்பச் சந்தோஷம். நான் வருகிறேன்.

(வேகமாகப் போகிறார்)

சௌமியன்: மூர்ச்சையாகிறான்.

# 12. பிரார்த்தனை

*கோமதிஸ்வாமிநாதன்*

[மாலை வேளை. அஸ்தமிக்கும் சமயம். காமாக்ஷிப் பாட்டி காலை நீட்டிக் கொண்டு கூடத்தில் உட்கார்ந் திருக்கிறாள். அவள் பேரன் சுமார் நான்கு வயதான சுந்தரம் அவளிடம் வருகிறான்.]

சுந்தரம்: பாட்டி! பாட்டி! ஒரு நல்ல கதை சொல்லு பாட்டி.

காமாக்ஷி: ஏண்டாப்பா! இப்படி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிவரே! உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுதே!

சுந்: இல்லே பாட்டி! குழாய்க்குப் பக்கத்திலே விளையா டிட்டு இருந்தேன். அம்மா அடிக்க வந்தா, அதுதான் ஓடிவந்தேன்.

காமா: அட போக்கிரி! தலையெல்லாம் நனைஞ்சு போச்சா! இங்கேவா பார்ப்போம்.

[தலையைத் தடவிப் பார்க்கிறாள். அவள் முகத்தில் ஆச்சர் யக் குறிகள் தோன்றுகின்றன]

பகவான் ஒருவர் இல்லாமலா போயிட்டார்! அடி அலமேலு! இங்கே வா.

அலமேலு: (சமைய லறையிலிருந்து வந்து கொண்டே) என்ன கொள்ளை போர அவசரம்! அந்த தடியனை மடியிலே வைத்துக் கொண்டு என்ன சீராட்டம் வேண்டியிருக்கிறது. நீங்கள் செல்லம் கொடுத்துக் கொடுத்துத்தான் அவன் குட்டிச்சுவராகப் போகிறான்.

காமா: என்னாலே ஒருவரும் குட்டிச் சுவராய்ப் போய் விட மாட்டார்கள். உன் பிரசங்கத்தைக் கேட்க

இப்போது கூப்பிட வில்லை. அந்தப் பழனி ஆண்டவன் மகிமையைப் பார்ப்பதற்குத்தான் கூப்பிட்டேன். குழந்தை தலையிலே சடை விழுந்திருக்கு பாரு!

அல: (ஆச்சர்யத்துடன்) என்ன சடையா? நிஜமாகவா?

காமா: நிஜமாகத்தான். ஸ்வாமி யாவது பூதமாவது என்று இத்தனை நாட்களாக தட்டிக் கழித்து, குழந்தையைக் கூட்டிக்கொண்டு போய் முடியிறக்க மாட்டேன் என்று சண்டித்தனம் பண்ணினீர்களே! இப்போது அந்தப் பழனி ஆண்டவன் அடையாளம் காண்பித்திருக்கிறான்!

அல: பகவான் இல்லை யென்று யார் சொன்னார்கள்? ஆனால் முதலிலே முடி யிறக்க திருப்பதிக்குப் போக வேண்டும். எப்பவோ ஒரு சமயம் எங்க அம்மா, வேண்டிக் கொண்டு இருக்கிறாள் என்பது இப்போது தான் ஞாபகத்திற்கு வருகிறது.

(சுந்தரம் எழுந்து விளையாடப் போகிறான்.)

காமா: ரொம்ப நல்லா இருக்கு! எங்கள் குலதெய்வம் பழனி ஆண்டவன் தான். முதலில் பழனியில் பிரார்த்தனை செலுத்தி விட்டுத்தான் மற்ற இடங்களுக்கு செலுத்த வேண்டும்.

அல: (புடவைத் தலைப்பினால் கண்ணைத் துடைத்துக் கொண்டு) உங்கள் வீட்டிற்கு வந்து அடிமையாய் உழைக்கிறது போதாதா? ஸ்வாமி வேண்டுதலை விஷயத்திலே கூட உங்களுக்கு அடிமையாய் இருக்க வேண்டுமா? முதலில் எங்கம்மா வேண்டுதலையைத் தான் செய்ய வேண்டும்.

காமா: (முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு) நீ சொல்ரது ரொம்ப அழகுதான். அந்தச் சடையைப் பார்க்கிற போதே, அது பழனி ஆண்டவன் ஆக்ஞை என்று தெரிகிறதே! சின்னப் பெண்ணு லக்ஷணமா இதற்கெல்லாம் தலையிடாமல் பெரியவர்கள் சொல்வதைக் கேளேன்.

அல: நீங்கதான் பெரியவாளா, அழகா, இதிலெல்லாம் தலையிடாமல் சிறிசுகள் இஷ்டப்படி விட்டு ஒதுங்கி நில்லுங்களேன்!

(சுப்புசாமி அய்யர் மாடியிலிருந்து இறங்கி வருகிறார்.)

சுப்புசாமி அய்யர்: என்னடி அது அலமேலு! மூன்ருவது உலக யுத்தம் ஆரம்ப மாயிடுச்சா? ஒரே ஆர்ப்பாட்டமாயிருக்கே!

காமா: இந்தாடாப்பா சுப்புசாமி! உன் பாடு; உம் பெண்டாட்டி பாடு. ராத்திரி ரயிலிலே என்னை ஏற்றி விட்டுவிடு. நான் சாரதா வீட்டுக்குப் போய் ஒரு மாதம் இருக்கப் போகிறேன்.

அல: நீங்க ஏன் போகிறீங்க? நானே போயிடரேன். உங்க பாடு உங்க அம்மா பாடு. நான் இண்ணைக்கே எங்க அம்மா வீட்டிற்குப் போகிறேன்.

சுப்பு: பேஷ், உங்கள் பாடு எவ்வளவோ தேவலையே நினைத்தவுடன் எந்த நிமிஷத்திலேயும், எந்த ஊருக்கும் புறப்பட்டு விடலாம். அது என்னலே முடியுமா? கல்யாணத்திற்கு லீவு கேட்டால் சஷ்டியப்த பூர்த்தி! சமயத்திலாவது லீவு கொடுப்பான் எங்க ஆபீசிலே.

காமா: இதோ பாரு சுப்புசாமி! குழந்தை சுந்தரத்தின் தலையிலே சடை விழுந்திருக்கு. கூடிய சீக்கிரம்

பழனி ஆண்டவன் கிட்டே போய் முடி எடுக்க ஏற்பாடு செய்யறையா என்ன?

அல: எங்க அம்மா திருப்பதிக்கு வருகிறேன் என்று வேண்டிக் கொண்டிருக்கிருள். அங்கேதான் போக வேண்டும் சொல்லி விட்டேன்.

சுப்பு: அடடா! இதற்குத்தானு இவ்வளவு வாதப் பிரதி வாதங்கள். பழனியிலே பாதியும், திருப்பதியிலே பாதியும் நிறைவேற்றி விட்டால் போச்சு!

அல: அப்படியானுல் முதலில் திருப்பதிக்குத்தான் போக வேண்டும்.

சுப்: அது இருக்கட்டும். அதற்கு முன்னுலே உன் செல்லப் பிள்ளை தலையிலே நாலு குட்டுக் குட்ட வேண்டும். ஒரு கவர் ஒட்டு வதற்காக கோந்து பாட்டிலைப் பார்த்தேன். அந்த பாட்டிலைப் பூராவும் மேஜை மீது கவிழ்த்து விட்டு வந்திருக்கிருன்.

(சுந்தரம் சுப்புசாமி அய்யர் கூடத்தில் நிற்பதைக் கவனியாமல் குழாயடியிலிருந்து வருகிருன்.)

சுப்பு: டேய்! இங்கே வாடா தடிப் பயலே! எப்போடா மேஜை மீதுள்ள கோந்து பாட்டிலைக் கவிழ்த்தாய்?

(சுந்தரத்தின் கைகளைப் பிடித்துக் கொள்கிருர்)

சுந்: நான் கொட்டவில்லை அப்பா! பந்தை விட்டு எறிந்தேன். அது பாட்டில் மேலே பட்டுட்டது. இன்னம்மே அப்படி விஷமம் பண்ணுமலிருக்கேன் அப்பா!

சுப்பு: என்னுடை ஆபீஸ் ரூமிலே' வந்து விளையாடாதே என்று எத்தனை நாள் சொல்லி யிருக்கேன். அந்த பாட்டிலிலே, பசை ஒட்டுவதற்காக ஒரு சின்ன பிரஷ் போட்டிருந்தேனே! அது எங்கே.

சுந் : எனக்குத் தெரியாதப்பா! (திரு திருவென்று முழிக்கிறான்.)

சுப்பு : தெரியாதா? (கோபத்துடன் இரண்டு குட்டுக் குட்டுகிறார். அவர் முகத்தில் ஆச்சரியக் குறிகள் தோன்றுகின்றன) அம்மா! அப்புறம் எந்த ஊர்லே போய் முதலில் பிரார்த்தனை செலுத்த வேண்டும் என்ற முடிவிற்கு வந்தீர்கள்?

காமா : உன்னோடே விதண்டா வாதத்திற்கு யார் பதில் சொல்லுவார்கள்.

சுப்பு : இல்லையம்மா! இப்போது சுந்தரத்திற்கு வேண்டுதலை இல்லை. கோந்து பாட்டில் பிரஷிற்குத்தான் பிரார்த்தனை செலுத்த வேண்டும்.

காமா:
அல: } (ஆச்சரியத்துடன்) என்ன!

சுப்பு : உன் செல்லக் குழந்தை, அழகு சுந்தரம் கோந்து பாட்டில் பிரஷை எடுத்து தலையில் சொறுகிக் கொண்டிருக்கிறான். அதைப் பார்த்துட்டு சடை போட்டிருக்கு என்று நீங்கள் சண்டை போட ஆரம்பித்து விட்டீர்கள். இப்போ அந்த பாட்டில் பிரஷை பழனிக்கு அனுப்பவா? திருப்பதிக்கு அனுப்பவா?

காமா : அலமேலுவோட அம்மா வேண்டுதலை. திருப்பதிக்கே முதலில் போகட்டும்.

அல : இல்லை. இல்லை. உங்க குல தெய்வம் பழனிக்கே முதலில் போகட்டும்.

சுப்பு : எனக்கு சாப்பிட நேரமாச்சு. இலையைப் போடு முதலில், அந்த பிரஷ் பாட்டிலுக்குப் போய்ச் சேரட்டும். (போகிறார்கள்)

ESTD 1922

திருநெல்வேலியில்



உத்திரவாதமுள்ள
பவுன் கல்நகைகளுக்கும்
வெள்ளிப்பாத்திரங்களுக்கும்
பெயர் பெற்ற இடம்

V.E.P. ஸீல் கியாரண்டீ


V. E. பெருமாள் & Co.,
ஜவஹர் மாளிகை, திருநெல்வேலி, ஜங்.

முருகன் டெய்லரிங் ஹவுஸ்,
ஹை ரோட்
திருநெல்வேலி ஜங்ஷன்.

சகல விதமான
நவீன தையல் வேலைகளுக்கும்
நம்பிக்கையான இடம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

# இம்பீரியல் வைரங்கள்



**நகைகளுக்குச்**
**சிறந்தவை.**
**உயர்ந்த பூரிப்பு**
**குறைந்த விலை.**

ரெடிமேடு நகைகளும்
கியாரண்டியுடன்
எங்களிடம் கிடைக்கும்.

உங்கள் ஆதரவை
அன்புடன் எதிர்பார்க்கிறோம்

V. S. ராமநாதன்

**இம்பீரியல் வைரம் & ஷாப் வியாபாரம்**
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

---

உற்சாகம் வேண்டுமானால்
உயர்ந்த ரக காப்பி டீ
அருந்துகிறீர்கள்.

வாசனை மிகுந்த
வசந்தா காப்பி டீயின் தரமே
அலாதிதான்.

நறுமணம் மிகுந்த நல்ல
காப்பி, டீ வேண்டும்போது
வசந்தா காப்பி ஸ்டோருக்கு
விஜயம் செய்யுங்கள்.

## வசந்தா காப்பி ஸ்டோர்ஸ்

வசந்தா காப்பி, டீ வியாபாரம்
ஹைரோடு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

---

## நாதன் & கோ

**சைக்கிள்**
**வியாபாரிகள்**
திருநெல்வேலி ஜங்ஷன்

சகலவிதமான உயர்தர
சைக்கிள்களும்
சைக்கிள் சாமான்களும்
கிடைக்கும்.

"சேகர்! அதோ போகும் நபரை ஏன் அவ்வளவு அக்கறையாகப் பார்க்கிறாய்? உனக்கு தெரிந்த ஆசாமியா?

"இல்லே! அந்த ஆசாமி என்ன ஜோராய் டிரஸ் பண்ணிக் கொண்டிருக்கிறான் பார்த்தாயா? அபார கவர்ச்சி!

"ஓஹோ அதற்காகவா அப்படிப் பார்த்தாய்! அந்தக் கவர்ச்சியின் ரகசியம் எதில் தெரியுமா இருக்கிறது. ஆசாமி அணிந்து கொண்டிருப்பதெல்லாம் **ட்ருத்புல்** ரெடிமேட் ஆடைகளாக்கும்!

"நான் அப்போதே நினைத்தேன்!

**கவர்ச்சிகரமான ரெடிமேட் ஆடைகள் வாங்க**
**எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.**

# பாபாஜி ஸ்டோர்ஸ்

**ட்ருத்புல் ரெடிமேட் ஆடைவியாபாரம்**

**திருநெல்வேலி ஜங்ஷன்.**

சகலவிதமான உயர்தர விளையாட்டுச் சாதனங்களுக்கும் புகழ் பெற்ற இடம் எது என்று கேட்டால், நிச்சயமாக நடராஜா ஸ்போர்ட்ஸ் எம்போரியம் என்றுதான் உங்களுக்கு பதில் கிடைக்கும்.



உங்கள் நம்பிக்கை, எங்கள் வியாபாரத்தின் வெற்றிச் சின்னம்.

## K. A. P. A. Periathambi Nadar

Nataraja Sports Emporium, PALAYAMCOTTAI.

K. G. செல்லையா
& பிரதர்.

ஆனந்தவிகடன்,
குமுதம் ஏஜண்டுகள்

லெவல்கிராஸ் எதிரே
திருநெல்வேலி ஜங்ஷன்

சகலவிதமான, தினசரி,
வார, மாதப் பத்திரிகைகள்
எங்களிடம் கிடைக்கும்.

K. வேணுப்பிள்ளை
ஏஜண்டு

இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி
ஆப் இர்தியா
தெப்பக்குளத் தெரு,
திருநெல்வேலி டவுண்.

விகடன், கல்கி, கதிர்,
குமுதம், சுதேசமித்திரன்
வாரப் பதிப்பு, கல்கண்டு,
ஜகன்மோஹினி
மற்றும் எல்லா
பத்திரிகைகளும் கிடைக்கும்.

தமிழ் நாட்டின் தலைசிறந்த
இலக்கிய பத்திரிகை
கலைமகள்.
அறிவை வளர்க்கும் அற்புத
விஷயங்கள் நிறைந்த
மஞ்சரி.
குழந்தைகளை
குதூகலிக்கச் செய்யும்
கண்ணன்
முதலிய
பிரபல பத்திரிகைகளை
நெல்லை வட்டாரத்தில்
வினியோகிப்பவர்

டி. எஸ்.
சம்பந்தம் பிள்ளை
25, சித்தர் தெரு,
திருநெல்வேலி டவுண்.

மனித உடற் கூற்றின்
விவரங்களை மனதிற்கு
தெளிவாக புரியும்படி
எடுத்துக் காட்டும்

'மானிட இன்பம்'

மாதப் பத்திரிகையை
படித்தீர்களா?

கே. ஜி. கே. சுவாமி
ஏஜண்டு
'மானிட இன்பம்'
மீனாக்ஷிபுரம்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

இது விளம்பர யுகம்

*வியாபாரத்தின் வெற்றியே*

*விளம்பரத்தில்தான் இருக்கிறது!*

ஒலி, ஒளி அமைப்புகளைக் குறைந்த செலவில் செய்து தருவதுடன், காரில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரங்கள் செய்யவும் வசதி ஏற்படுத்துகிறோம்.

விவரங்களுக்கு

**சுதந்திர ஒலிபெருக்கி நிலையம்**

தெற்கு ரத வீதி, திருநெல்வேலி.



**சகலவிதமான எலெக்டிரிக் சாமான்களும்**
**மாணவர்களுக்கு வேண்டிய**
**புத்தகங்கள், நோட் புத்தகங்களும்**
**சகாய விலையில் எங்களிடம்**
**கிடைக்கும்.**

**எஸ். பி. விநாயகம் & சன்ஸ்**

தெற்கு ரத வீதி,

திருநெல்வேலி டவுண்.

# ‘நெல்லைச் செய்தி’

(வார வெளியீடு)

எவ்வளவோ பத்திரிகைகளை வாங்குகிறோம், படித்துப் பார்க்கிறோம். ஆயினும் அவைகளில் எல்லாவற்றையுமே நாம் ரசிப்பதில்லை. ஒன்றிரண்டுதான் நம் மனதில் தங்குகின்றன; மற்றவைகள் குப்பைக் கூடையில் இடம் பெறுகின்றன!

‘கொடுக்கும் காசுக்குக் குறைவு வராத பத்திரிகைகளே தேவை’ எனச் சிலர் சொல்வார்கள். அது சரியென்றாலும், முற்றிலும் பொறுத்தமல்ல; வெறும் காசு மதிப்புக்கு மட்டும் பத்திரிகை உகந்ததாக இருந்தால் போதாது; படிப்பவர்களின் சிந்தனைக்கு விருந்தளிப்பதோடு, அவர்கள் வாழ்க்கைக்கு ஓரளவு உதவி செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பத்திரிகையின் லட்சியம் பூரணமாய் நிறைவேறியதாகச் சொல்ல முடியும்.

அந்த லட்சியப் பாதையிலே செல்கிறது, ‘நெல்லைச் செய்தி’: முற்றிலும் புதிய அம்சங்களுடன், வாரம் ஒருமுறை மலரும் வாடா மல்லிகை அது. எல்லோருக்கும் பிடித்தமான கட்டுரை, ஹாஸ்யக் கதைகள், சோகக் கதைகள், அயல்நாட்டுக் கதைகள், எல்லாவற்றையும் தாங்கி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளிவருகிறது.

குடும்பத்தினர் அனைவருமே படித்து மகிழக் கூடிய ரஸமான அம்சங்கள் நிரம்பியது, ‘நெல்லைச் செய்தி’. வீட்டில் சந்தோஷம் நிலவ வேண்டுமென விரும்புகிறவர்கள் அவசியம் ‘நெல்லைச் செய்தி’யைப் படிக்க வேண்டும்.

தனிப் பிரதி இரண்டணா. வருட சந்தா ஆறு ரூபாய்.

**‘நெல்லைச் செய்தி’ காரியாலயம்**
**38/10, கீழ ரத வீதி, திருநெல்வேலி.**

ஸ்ரீ ஷண்முகம் அச்சகம், கீழ ரத வீதி, திருநெல்வேலி.